(Z 1154) 3427
Nab
8683

THE LIGHT OF
WIDOW-REMARRIAGE

13 JUL 1926

IN TAMIL

விதவா விவாக விளக்கம்

BY

C. P. RAJAGOPAL NAIDU

TRICHINOPOLY

TRICHINOPOLY.

JANANUKOOLA PRESS.

1926

Price] [As. 8.

செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட
மாதம் வருடம்
செப்பனிட்டு முடிந்த
மாதம் வருடம்
ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்

1073
13 JUL 1926

ஸ்ரீ

விதவா விவாக விளக்கம்.

திரிசிரபுரம்
C. P. இராஜகோபால நாயுடு,
இயற்றியது.

"பொங்கும் மங்களம் எங்கும் தங்குக"

திரிசிரபுரம்
ஜனானுகூல அச்சுக்கூடம்.

1926.

Y15(Z,1154):3427
N26
58683

THE REGISTRAR
13 JUL 1926

முகவுரை

நமது நாட்டில் கணவனையிழந்த இளமைக்கைம்பெண்களது நிலைமை மிகவும் இரங்கத்தக்கது. மனைவியையிழந்த ஆண்மக்கள் மறுத்தும் மறுத்தும் இளம் மங்கையரை மணந்துகொள்ள விதியுண்டு என்கின்றனர். ஆண்மையற்ற கிழவர்களும் பருவமுறாச்சிறுமியர்களை வரிக்கின்றனர். இவரது மனைவாழ்க்கை எத்துணை இன்பந்தரும்! மங்கைப்பருவம் வருமுன்னே கணவனையிழந்தவரும், மங்கைப்பருவமுற்ற பின்னும் புணர்ச்சியின்பம் நுகராரும், மக்கட்பேறெய்து முன்னே துணைவரையிழந்தோரும், இன்பம் ஆரத்துய்க்கு முன்னே காதலரையிழந்தோரும் ஆகிய கைம்பெண்கள் படும் துயரத்தை எழுத ஏடுமடங்காது; சொல்லியழ ஆயுட் காலமும் போதாது.

கைம்பெண்கள் மறுமணம் செய்துகொள்ளலாமென்று சுமிருதிகள் விதிக்கின்றன. மறுமணம் செய்துக்கொள்ள விரும்பாத கணவர்ப்பற்றுடைய பெண்கள், ஒழுக்கம்கெடாதிருப்பதற்கு பலவிதிகளும் ஏற்பட்டுள்ளன. இக்காலத்து, அவ்விதிகளை கைம்மைப்பெண்கள் எல்லோர்க்கும் வற்புறுத்தி ஏற்றமுயன்று நடத்துவதால், காம இன்பம் விழையும் கைம்பெண்கள், களவொழுக்கம் செய்து, கருவாய்த்துக் குழவிக்கொலை செய்து, பழிக்கும் பாவத்திற்கும் ஆளாகின்றனர். இந்நிலைமையை மாற்றுதற்கு முயலுதல், இக்காலத்து அறிவுடைப்பெருமக்கட்கு இன்றியமையாக்கடப்பாடாகும். அது செய்தற்கு ஏற்ற சமயமும் இதுவே. அறிவுடையோர் இது செய்யாராயின் பழியும் கொலையும் மிஞ்சி, நம்நாடு சீர்

கேடடைந்து, உலகத்து நாகரிகப்பெருக்கமடைந்துள்ள பிறநாட்டாரால் இழிக்கப்பட்டு, கேடடையும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

நந்தமிழ் நாட்டிற்கு அறநூல் தந்த திருவள்ளுவனார், கைம்மையர்க்கு யாதும் ஒழுக்கம் கூறவில்லை. கைம்மைநிலைமையை அவர் ஒப்புக்கொண்டதாகத் தோன்றவில்லை. எனினும் பண்டைச்சங்க இலக்கியங்களுள் கணவனையிழந்தோர் செயல்களில் பலகாணலாகும். அவைகள் கணவனை இழந்து வாழவிரும்பாத அறக்கற்புடைய மடந்தையர் செயல்களையே கூறுகின்றன. புறநானூற்றில், பூதப்பாண்டியன் இறந்தபட, அவன் கோப்பெருந்தேவி இருந்துவாழ விருப்பமின்றித் தீப்பாய்ந்து இறப்பவள் பின்வருமாறு கூறினாள்.

"பல் சான்றீரே பல் சான்றீரே
செல்கெனச் சொல்லா தொழிகெனவிலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே,
யணில் வரிக்கொடுங்காய் வாள்போழ்ந்திட்ட
காழ்போ னல்விளர் நறுநெய் தீண்டா
தடையிடைக்கிடந்த கைபிழிபிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய்தட்ட
வேளை வெந்தை வல்சியாகப்
பரற் பெய்பள்ளிப்பாயின்று வதியு
முயவற் பெண்டிரே மல்லே மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டீம
நுமக்கரி தாகுகதில்ல வெமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தெனவரும்பற
வள்ளிதழவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே."

இச்செய்யுளால் கணவனை இழந்து கைம்மை நோன்பு நோற்கும் பெண்டிர் நீரிட்ட சோற்றை எள்ளை அரைத்துப் புளிக்கூட்டி வேளையிலையுடனே அவித்த துவையலைத்தொட்டுக்கொண்டு உண்டு, படுக்கையின்பாய் தேடாது வெறுந்தரையில் துயில் கொள்ளவேண்டும் என்பதுபோன்ற சிலவழக்கங்கள் பண்டைக்காலத்தேயுள்ளன வென்பது விளங்கும். அவ்வழக்கம் கைம்மை நோன்பு நோலாதவர்க்கு வேண்டா. அவரெல்லாம் மறுமணம்செய்தற்கே உரியர்என்று துணிந்து கொள்ளவேண்டும். இந்தவழக்கங்களை உலக இன்பம் விரும்பும் இளைக் கைம்பெண்களுக்கும் ஏற்றுதலினாலே, இத்துணைக்கொடுமைகள் உண்டாகக் காரணமாயிற்று. ஆதலின் மறுமணம் விரும்பும் பெண்கள் மறுமணம்செய்து கொள்வதே முறை.

மக்களுக்கு மணம் செய்வதற்கு ஏற்ற பருவத்தை பிற்காலத்து பெரியார்கள் கூறியுள்ளார்.

"மங்கைப்பருவத்துக் கன்னிதனை மைந்தன்தான்
சங்கையில் ஆண்டோரிருபான் சார்ந்ததன்மேல்—துங்க
மணமருவச் செய்யிலவர்வல்லராய் வாழ்வார்
குணமருவி மல்கும் குடி"

"மணமகள் மங்கைப்பருவமடைந்தவளாகவும், மணமகன் இருபதுயாண்டு நிறைந்தவனாகவும் இருத்தல் வேண்டும்; அவர்களது இல்லறவாழ்க்கை இன்பவாழ்க்கையாகும்."

"மணவாளனை யிழந்த மாதர்பிறிதோர்
குணவாளனை நயத்தல் கொள்கை — மணாயவார்
பின்னை இறந்த கணவர் பெற நோற்றல்
தன்னை அறிதல் தலை,"

ஊழ்வலியால் கணவனை யிழந்த பெண்கள்தம் தகுதிக்கேற்ற வேறுகணவர்களை மறுமணம் செய்து கொள்வதுமுறையாகும் என்றும், மறுமணம் விரும்பாத பெண்கள் மறுமையிலே தம்முடைய கணவரை அடைதற் பொருட்டுக் கைம்மைநோன்பு நோற்றல் முறைமையாகு மென்றும் கூறினர். பெண்மை நெறிவிளக்கநூலுடையார். ஆயினும் மனைவியை யிழந்த ஆண்மகளும் கணவனையிழந்த பெண்மகளும் காம இன்பம் நுகர்ந்து பழகினவராதலினாலே, அவ்வின்பம் நுகர்ந்தறியாத மங்கையையாவது இளைஞனையாவது மணஞ்செய்து கொள்ளல் முறையாகாது. ஏனெனில், அத்தன்மையான கூட்டுறவால், மெய்க்காதலும் அதுபற்றின் இன்பநுகர்ச்சியும் இல்லையாம். மனைவியை யிழந்தவன் மெய்க்காதலின்றி, குடும்ப வசதியின் பொருட்டே வேறொரு பெண்ணை நாடுகிறான். அவ்வாறே கணவனை யிழந்தவளும் வேறொருகணவனை நாடுகிறாள். ஆதலினால் மனைவியையிழந்த ஆண்மக்களும் கணவனையிழந்த பெண்மக்களுமாகிய இருவகைக் கைம்மையர்களும் தம்முள் தாமே கலந்து மணம் செய்துகொள்ளுதல் அறவொழுக்கமாகும்.

இக்காலத்து அறங்கூறும் உரிமையையுடைய பெரியோர், உலகம் எவ்வாறு போனாலென்ன என்று வாளா இராமல் இம்முயற்சியைக் கைக்கொள்ளவேண்டும்.

ஆன்ற கல்வியும், அடிப்பட்ட உலகாநுபவமும் உலையாமுயற்சியும், ஆகிய பலவகை ஆற்றலுமுடைய நமதுநண்பர், திருவாளர் C. P. இராஜகோபால நாயுடு அவர்கள், நம் நாட்டுக் கைம்பெண்களது துயரத்தைநீக்கி நல்வழிப்படுத்தற்கேற்ற பல முயற்சிகள் செய்து, அது

பற்றி ஆங்காங்கு தாம் செய்த சொற்பொழிவுகளை ஒருவாறு தொகுத்து சுருதி, யுக்தி, அநுபவமுறையால் பொருள் விளக்கமாகுமாறு எழுதி விதவாவிவாக விளக்கம் என்னும் பெயர்தந்து வெளிப்படுத்துமிச் சிறுநூல், நம்மவர்கள் எல்லாரது உள்ளத்தும் ஆழப்பதிந்து அவர்காட்டுகின்றவழியில் நன்றியறிதலோடு பின்தொடர்ந்து அவர் செய்யும் முயற்சியில் அவரோடு ஒத்துழைத்து ஈடுபடச் செய்யுமென்று எம் உளமாற நம்புகின்றோம். நமது நண்பர் அவர்கள் தமிழ் உலகத்திற்குச் செய்யும் உதவிகடலினும் பெரிது. அவர்கள் முயற்சி விரைவில் பயன்படுமாறு எல்லாம் வல்ல கடவுளை இறைஞ்சுகின்றோம்.

அ. சிவப்பிரகாசம்.

சூசையப்பர் கல்லூரி,
திரிசிரபுரம்,
7—4—26.

தமிழ்த்தொண்டன்,
தலைமைத் தமிழ்ப்புலவன்,

SOME OPINIONS.

சில அபிப்பிராயங்கள்.

மதுரை திருவாளர் S. சோமசுந்தர பாரதியாரவர்கள்,
எம். ஏ. பி. எல். எழுதுவது:

M. R. Ry. S. S Bharati Avl., M. A., B. L., High Court Vakil, Madura, writes:

I just skipped through your Monograph to-day; and I assure you it interested me greatly.

The authoritative excerpts from classic authors on "Dharma" with your lucid and forceful exegesis, coupled along with your irrefutable logic and reinforced by transparent sincerety and zeal for the cause you have nobly espoused, render your book a very valuable contribution to enlighten the Tamil public on a matter that vitally affects their body—sociale. It supplies a long felt want and is sure to serve a good cause in Tamilaham

Your style is as simple as it is direct it is best suited to the propogandist aim of the book. It is sure to go home to every honest and truth seeking inquirer, and in the long run will achieve your object efficiently I wish the good book all the success it so richly deserves, and I wish you joy of your good work. May this book be but the harbinger of more of the kind from its earnest and enthusiastic author.

Wishing the cause a speedy triumph.

திருச்சி, சேனாங்குழ நகரபிரபலமான நகர அங்கத்தினரும்
நேஷனல் காலேஜ் உதவி ஆசிரியருமான மக-ள-ள-ஸ்ரீ
ஜே. வெங்கடாசலபதி செட்டியார் பி. ஏ. எல். டி., அவர்கள்
எழுதுவது:

M. R. Ry. J Venkatachalapathy Chettiar Avl., B. A., L. T., Assistant, National College, Trichinopoly, and Municipal Councillor, Trichinopoly, writes.

I take much pleasure to write a line in support of the widow-remarriage which takes a new life in Trichinopoly under the guide of Mr. C. P. Rajagopal Naidu Garu a well experienced and venerable gentleman of this place. The subject was being recommended from social platforms since a decade or two ago, and it is now crystallising into action here and there. And Mr. Naidu Garu, is giving a good impetus to it by his propoganda work. Any sane view, will not disagree with the fact that the conjugal pleasures are absolutely necessary as food and drink for human beings. So, whatever holds good for man in this respect must also hold good for woman. If custom has obtained a course altogether different from this common sense point of view, it is history that is responsible for it. The events of the Mahabaratha, were a turning point in the destinies of the Indian Nation in many respects. The innumerable deaths of men in the 18 days horrible fight, necessitated the abstinence of widows from the conjugal pleasures of a second marriage. Again the many evils that result from this abstinence, are quite patent even to an indifferent observer. All these are represented in detail in the brochure of Mr. Naidu Garu.

In the conferences of many communities including the Brahmans of the Aryan Culture, the re-marriage question of the widows has taken a prominent place. This

indicates that India is now on the line of the twentieth century civilisation of the world.

Many evils that may be supposed to arise, may be pointed out to deter the progress of this movement; but almost all of them may be met logically and psychologically as Mr. Naidu Garu has done. But I like to impress in the public that it is no license of Carnal pleasures that Mr. Naidu Garu is recommending, while on the contrary, he not only condemns them on the ground of their smacking animalism but also recommends the recourse in this system of widow remarriage as a necessary evil and the lesser evil of the two. So, the public will do well in adopting the system judiciously avoiding the scylla of adultery on the one hand and the charybdis of carnal pleasures of a remarriage on the other.

திருச்சி, பிஷப்ஹீபர் காலேஜ் ஆங்கிலப் புலவர் திருவாளர்
M. S. பூரணலிங்கம் பிள்ளை பி. ஏ. எல். டி., அவர்கள்
எழுதுவது.

M. R. Ry. M. S. Purnalingam Pillai Avl., B. A., L. T., Professor of English, Bishop Heber College, Trichinopoly, writes.

In vedic times, widows found widowers for their sweet partners and *vice versa* without much ado. When the Mahabarata war raged and wrought dreadful carnage legions of widows survived the war and had no men to marry them. As a measure of expediency, premium was paid to chaste or clean widowhood and promise was made Shastraically that pure widows could by their penance reach the Seventh Heaven. Thus widowhood became an institution, an inviolable one, though everybody admitted

and acknowledged that it was contrary to all nature and reason. If the laws of nature were inexorable in the case of widowers who promptly led virgins to the altar, how could they be otherwise, living, as they did in the world, of man and amidst the joys and delights of Humankind? Elopements, concubinage, forced abortions, infanticide and hydra-headed corruption came to be rampant and triumphant to the eternal agony, dishonour and shame of the custom-ridden parents and of the short-sighted kith and kin of the ill-fated daugters and sisters. Ages have rolled away and yet the thoughtless and selfish man has seldom dared to set at nought the tyrant custom and to do what is right to the frail sister-hood. What Vidyasagar did to bereaved wives in North India, Virasalingam was able to accomplish for their sisters in the Andhra Province, but no stir seems to have been made to bring relief and comfort to the desolate hearts of the love-lorn in the Tamilland. The progress of Modern culture and civilisation which have ransacked the Vedas and other sacred books and hit upon a host of texts in support of widow-marriages is slowly warming the frozen hearts and bosoms of the learned and the blissfully ignorant multitude and making it possible, nay inevitable, that the old order must change, yielding place to the new. An undaunted champion of the luckless lasses like Mr. C. P. Rajagopala Naidu, the President of the Naidu Sangam, who has, in his ripe old age of three score and ten, come out with a well written brochure on the subject, calculated to convince and persuade even the extremely Orthodox minds is indeed a *rara avis*. May many a dauntless Rajagopal arise and bring gladness to aggrieved hearts and disconsolate bosoms in the Tamil Country!

திருச்சி ஸ்ரீமான் K. V. ஜெம்புநாத அய்யர் பி. ஏ. பி. எல்.,
அவர்கள் எழுதியது.

**M. R. Ry. K. V. Jembunatha Aiyar Avl., B. A., B. L.,
Trichinopoly, writes.**

The monumental work "The Vidhava Vivaha Vilakkam" by my esteemed friend Sriman C. P. Rajagopal Naidu Garu, is a very valuable contribution to the Social Reform literature, as it is the first work of its kind, to my knowledge, in the Tamil language. It is a matter for deep regret that, while the other provinces in India, have made rapid strides in the direction of the Social uplift of destitute widows, the Tamil country alone, with all its boasted civilisation and advancement in Art, Literature and Politics, has lagged considerably behind, and the degradation to which it has sunk appears on the surface even to a superficial on-looker. The spirit of chivalry which animated the Indian Manhood of old is gone, and men have grown callous to the sufferings and miseries of even their own daughters and sisters, whom the fates have made miserable, by depriving them of their husbands. So long as India does not revive the true spirit of chivalry, which prompted the men of ancient India to go to the rescue of the weaker Sex fearless of consequences, and identify themselves with the cause of their suffering daughters and sisters, one may rest assured that India would continue to be a nation under bondage and its emancipation would be impossible of achievement. How can you expect Swaraj for your country, when you have not been able to achieve it in your own homes, and how can you think of making the country happy when you are helpless to carry comfort and solace to your own suffering daughters and sisters groaning under the most

unbearable of agonies, and writhing under torment even worse than those in Hell?

Surely our dear sisters and daughters, who are so suffering are not responsible for their unhappy lot as they are due to causes beyond their control. A Social custom which is partial to men and cruel to women has to be discarded with contempt, especially when the Shastras, equity, and good conscience dictate the obliteration of such a cruel custom. Man should show manliness in revolting against cruelty especially to women. Else he is no man, and Eve might well have cried "God save me from Adam" even at the time of the creation of the world, according to the Christian Theology. A man without a kind heart to the sufferings of women, is a blot in God's Creation, and one would rather wish for the great deluge to envelop the world, than have it populated by heartless unthinking men who bestow no kind thought on suffering womanhood.

Mating is a natural right conferred by God on all created beings, the difference between man and other lower orders of creation being that it is made to assume a legal form in the case of the former, while it is otherwise in the case of the latter. One may well recall in this connection the immortal lines of poet Cowper,

"Society, friendship and love
Divinely bestowed upon man,
Oh! had I the wings of a dove,
How soon would I taste you again",

The words Society, Friendship and Love are comprehensive in their concept and mean a world of things.

Man cannot, therefore, deny to women the natural right he enjoys. An injunction against re-marriage of

widows who are willing to re-marry is, therefore, unnatural, being contrary to the laws of nature besides being intrinsically cruel, inhuman and unchivalrous. A country from which the spirit of chivalry has disappeared is doomed to everlasting perdition. Where is now the India of the olden days when Go-Rakshanam and Sthri-Rakshanam (Cow protection and protection of Women) were considered to be the most paramount of man's duties. The Hindu of to-day has failed to discharge the said two duties and hence his fall.

Unless and until the Indian wakes up to his duties to the woman-folk, the cry for Swaraj will continue to be a cry for the Moon, and there will be no salvation for the the country.

I have, therefore, great pleasure in commending this highly valuable and thought-provoking booklet to the kind attention of all my Indian brethren who have heads to think and hearts to feel.

திருச்சி செயின்ட் ஜோசப்ஸ் காலேஜ் புரொபஸர் ஸ்ரீமான்
P. T. ஸ்ரீனிவாஸ அய்யங்கார் அவர்கள் M. A., L. T.,
எழுதியது.

M. R. Ry. P. T. Srinivas Iyengar Avl., M. A., L. T., *Professor*, St. Joseph's College, Trichinopoly, writes.

It is a welcome sign of the times that Mr. C. P. Rajagopal Naidu after a life-long service of the Government appropriately crowned with a pension, should devote the evening of his life filled with ripe wisdom to the cause of the re-marriage of young Hindu widows, especially of

those belonging to the ancient community of warriors called Balijas. He has started a widows re-marriage association of which he is the head; he has also written விதவாவிவாக விளக்கம், an essay on the re-marriage of widows discussed from the historical, the ethical and the practical points of view. I am glad of this opportunity of expressing my sympathy with the cause and of soliciting the help of the increasing number of those who wish that longstanding defects in Hindu Social arrangements may be remedied and the life of modern day Hindus be rendered happier and more useful than in the past.

"THE SWADESAMITRAN"
சுதேசமித்திரன்.

அக்ஷய வருஷம் வைகாசி மாதம் 8௳ வெள்ளிக்கிழமை (21-5-1926)

திருச்சி, ஜனோபகார பிரஸ்ஸில் அச்சடிக்கப்பட்ட "விதவா விவாகவிளக்கம்" என்னும் ஒரு சிறியபுஸ்தகம் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. அது திருச்சியிலிருக்கும் கைம்பெண்கள் புனர்விவாக சபைத்தின் பிரசிடெண்டான, ஸ்ரீமான். ஸி. பி. ராஜ கோபால் நாயுடுவால் பலவிடங்களில் நடத்திய சொற்பொழிவுகளின் தொகுதியென அறிகிறோம். இதில் அனுபவத்துக்கும் ஒத்து, சுருதி, ஸ்மிருதி புராணங்களின் தாத்பரியத்தை மேற்கோளாக் கொண்டு பல எதிர்புகளுக்கும் மறுப்புக் கூறப்பட்டு, இளங் கைம்பெண்களின் கதியைச் சீர்திருத்த ஆதாரங்கள் எடுத்துரைக்கப் பட்டுள்ளன. ஸ்ரீமான் நாயுடுவினால் மேற்போட்டுக்கொண்டு நடத்தப்பட்ட காரியம் இன்புற நடக்குமாறு வேண்டுவோம்.

C. P. இராஜகோபால நாயுடு

பதிப்புரை.

பஞ்சாப் தேசத்தைச் சேர்ந்த லாகூர் நகரத்தில் ஸ்தாபிக்கப் பெற்றுள்ள விதவா விவாக சகாய சபையார், அகில இந்திய மகா ஜனங்களுக்கு விடுத்துள்ள விஞ்ஞாபனத்தை ஆதரித்து, ப்ரக்ருதி தர்மம் ஒழுங்காய் நடைபெறவும், ஆண் பெண் பாலர்கள் பாவத்தை அனுகாமலிருக்கவும், சுருதி யுக்தி அநுபவத்துக்கு ஒத்ததுமான புநர் விவாகம் என்கிற மறு மணம் நடந்தபின்னரே, விதவா ஆண்மக்களாயினும் பெண்மக்களாயினும் ஒருமித்து வாழ்தல் தகுதி என்றும், சாஸ்திர விரோதமான விபசாரங்களால், கர்ப்பமழித்தல் சிசுக்கொலை செய்தல் முதலிய தோஷங்களால் நிறைந்து நாளடைவில் க்ஷீணித்துக்கொண்டுபோகிற இத்தமிழ் நாட்டைப் புநிதமாக்கி, ஆதிநாகரிகத்தைநிலைநாட்டி, இத்தேசத்தை முன்னேற்றமடையச் செய்தலே உசிதமெனத் தீர்மானித்து இத்திருச்சிராப்பள்ளி வாசிகளாகிய சில தேசாபிமானிகள் 1926-ம் ஆண்டு மேமாதம் 5-ம் தேதி இந்நகரில் ஒரு சபையை நாட்டினர்.

இச்சபையின் தலைவராய் ஆக்கம்பெற்ற அறுபத்தொன்பது ஆண்டுகள் நிறைந்தவரும், நீண்ட அநுபவம் வாய்ந்தவரும், திக்கற்ற அநாத விதவைப் பெண்மக்களின் ஆராத்துயரத்தை உள்ளபடி யறிந்த பெரியாருமாகிய C. P. இராஜகோபால நாயுடு அவர்கள், நோயுருகிய மனதோடு இந்நகரின் அநேக இடங்களில், சுருதி, யுக்தி அநுபவங்களை யொத்து, தனித்துக் கேட்டவர்களுக்கும்

பெருங்கூட்டங்களிலும் உபந்நியசித்து வந்த விஷயங்களைக் கேட்டு ஆநந்த பரவசங்கொண்ட அனைவரும் இவ்வுபந்நியாசத்தை அச்சிட்டு எங்கும் பரவச்செய்ய வேண்டுமென்று கோரினவை வெளியிட்டதற்கிணங்கி, அவ்வுபந்நியாசத்துக்கு "விதவா விவாக விளக்கம்" என்ற பெயரிட்டு அடியிற்குறிப்பிட்ட சபை பரிபாலக அங்கத்தினர்களாகிய நாங்கள் இச்சிறு நூலை வெளிப்படுத்தியிருக்கின்றோம். தேசாபிமானிகள் ஆதரிப்பார்களென நம்புகின்றோம்.

பலவகுப்பினரும் இச்சபையில் அங்கத்தினராய்ச் சேர்ந்து விண்ணப்பத்தாளில் கையொப்பமிட்டிருக்கிறார்கள். இவர்களின் பெயரையும் அச்சிட்டுச் சீக்கிரத்தில் வெளிப்படுத்துவம்.

சபை அங்கத்தினர் ஒவ்வொருவருக்கு ஒரு புத்தகமும், பரிபாலகர்களுக்கு மூன்றுபுத்தகங்களும் கொடுக்கப்பெறும்.

இத்தமிழ் நாட்டில் நடைபெறும் பல வகுப்பினரின் சங்கத்தலைவர்கள் அல்லது காரியதரிசிகள் இச்சபைத் தலைவருக்கு எழுதினால் ஒரு புத்தகம் அச்சங்கத்தின் உபயோகத்தின்பொருட்டுக் கிரையமில்லாமல் அனுப்புவம். அவர்கள் அச்சபையினருக்குப் படித்துக் காட்டி ஒவ்வொரு அங்கத்தினரையும் புத்தகம் வாங்கிப் படிக்கச் செய்தும், தக்க பிரசாரங்கள் செய்து தம் வகுப்பாரில் புநர் விவாகம் நடைபெறுமாறு முயற்சிசெய்து நம் நாட்டைச் சீர்திருத்த முன் வருவார்களென்று நம்புகிறோம்.

மற்றெல்லோருக்கும் இப்புத்தகத்தின் கிரையம் அணா எட்டு. வேண்டுவோர் தற்காலம் சபையின் பிரசிடெண்டு, **C. P.** இராஜகோபால நாயுடு அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கைம்மையரின் சாஸ்திரோக்தமான புநர் விவாகத்தைப் பரவச் செய்தலும், ஸ்திரீகளுக்கு ஸ்திரீகளைக் கொண்டு பிரசாரம் செய்தலும் இச்சபையாரின் கொள்கையாகும்.

நேரிசை அகவற்பா.

நிலமலி யுலகில் நாவலர் புகழும்
பலபல வூரும் பண்புயர் வளமெனும்
நன்முறை நதியுர் தக்கபன் மலையும்
மண்டுயர் கானமும் மலர்மிகு சோலையும்
வண்முறை செய்தலும் வளர்நிகழ் மருதமுங்
கொண்டு விளங்குங் கொழுமைத் தாகி
எண்டிரு மகட்கோ ரிடமாங் கெனவாய்த்
திண்டிறன் ஞானத் திகழ்பெருங் கல்வி
ஆன்ற வறிவுடை னரும்பொருண் மலிவு
சான்றவர் கூறுஞ் சாய்விலா வொழுக்கம்
பொன்மணி யாடை புகழ்மிகு மூண்டி
நன்னயக் கனிகள் நாழுசெய் கரும்பு
பற்பல் தானியம் பலப்பல வித்துடன்
அற்புத மலர்கள் அணிபல வுயிர்கள்
பாடும் பறவை பால்தரு பசுக்கள்
ஆடும் பறவை யமைமாவ விலங்கொடும்
வற்றமார் கரிகள் எழிலுறு பரிகள்

சாற்றப் பெருகிச் சவிபெற நிற்பது
நல்லநம் பரத நாடா ரும்மால்
ஒல்லுவ தறிவர் எனம்பல வையுமே
உலகில் யாரும் உணர்ச்சற் பதன்முனே
உலகில் யாரும் உடுத்துதன் முன்னே
உலகில் யாரும் உயரணி பூண்முனே
உலகில் யாரும் உணர்வுறு முன்னே
உலகில் யாரும் உகர்துகற் பதன்முனே
உலகில் யாரும் ஒருமுதற் கடவுளை
இலக வறிந்தன் இருந்த முன்னே
புலனுற வண்டு புகழுற வெடுத்து
நலமிகு மலரிப்பூ னையப்பெற வளர்த்து
குலவிய நன்றுல் கூறிய நிலையுர்
தெரிய வுணர்த்து திகழ்க் கற்று
விரிதரக் கடவுளை விளக்கக் கண்டு
யாரும் புகழும் யாணர் வாழ்வுடன்
தேரு மொழுக்கத் திக்கெலாம் போற்ற
வாழ்ந்தன சிறந்த வண்மைநாட் டவரே
சூழ்ந்த வினைகொலோ சொலுவதே யதோ
தாழ்ந்தன சிக்கான் தகைமையிற் குலைந்தே
ஆழ்ந்தனர் துன்பில் அந்தோ! அந்தோ!
வறுமையும் பெருமையை வற்றச் செய்தது
குறைமை யுற்றனர் கூறாம் நாட்டவர்
காரணம் பகரிற் கலக மாகும்
ஆரணப் பொருளை யறிந்துண ராமையே
கற்புங் கடவு ளன்புங் கவினிய
விற்பன நாடுதான் வெறுவிதா யந்தோ
கடா வொழுக்கமுங் குழந்தைக் கொலையும்
வாடா தோங்கி வளர்கின் றதுவே
இக்கா ரணத்தா லியாம்படிற் றைப்பெறுர்

முதன்முதன் மணர்தனை முற்றத் தடுத்துக்
கட்டுப் படுத்திய கடுயஞ் சகமே
விட்ட திந்த விளைவினை யம்மா
பாரதப் போர்தான் பாரினில் வருமுன்
ஆரற் கைம்மைய ரலாவிடிற் பின்னும்
மணமுடித் திருந்தார் மகவுடன் வாழ்ந்தார்
கணமிகு புகழான் காண்டீ வனுமே
நாக கன்னி நவிலொரு கைம்பெண்
மாகயின் னவ்வ மாவெழி லுலூபியை
மணந்தன னின்னும் மாகனன் மனைவி
குமரர்தனிற் சிறந்த குலத்து மயர்ந்தி
இரண்டாஞ் சுயம்வர மியற்றி வெண்ணணித்
திரண்ட புயமனர் செவியுறச் சுயம்வர
நிலை போக்கிய வொருசொற் றுனும்
வேலைசூழ் முலகில் விதவை மணந்தான்
இருந்த துரைக்குமா விளிநினி னறிய
இன்னும்,
பெருந்தவக் குருகுலப் பெரும்பரம் பரையின்
சரிதம் படித்தார் சாற்றுவர் கைம்மையர்
உரிய வழியி லுலகுவப் புறவே
வந்தகான் முனைக்கொள் வாய்மை தனையே,
இந்தமா நிலத்தே இறக்க மணமகன்
மன்ன மாதர் மணந்து கொண்டமைக்கும்
முன்ன மொருவன் முன்னரிப் புணர்ந்து
விட்டே யகல விளங்கிழை யாரும்
நட்டே பின்னு நாயக ரொருவனைக்
கொண்ட செயற்குங் கூறச் சான்றுதான்
எண்டரு புராணத் தினியகா வியத்துங்
கண்டனம் பற்பல் காதைக ளம்மா
விண்டவை கூறி விரிக்கிற் பெருகும்

புருடனை யிழந்த பூவையர் மணத்தல்
மருவு மெல்லா மாண்புயர் நாட்டினும்
நம்நா டதனிலும் நாற்சில் குடியினர்
தம்மா மனப்படி தனவாக் கைம்மையர்
பின்னொரு கணவனைப் பிழையறக் கொண்டு
மன்ன வாழ்வதும் மற்றுமுண் டாமல்
இன்ன வகையே எனெல் லோரும்
துன்னி மணந்து துயர நீங்கி
வாழ்தல் கூடா மனங்களிப் புறவே
தாழ்நெறி தன்னிற் றவறிடா ரிங்கே.
பாரதப் போரிற் பகரா டவரெலாஞ்
சேரப் பொன்றிச் சென்றழிந் திடவே
விதவா விவாகமும் வியன்கடல் கடத்தலும்
இதமார் துறவு மிலாவொழிந் தனவால்
கன்னியர் பொருட்டாற் கழன்றன விவையே
மன்னிய மறையும் மருவு ஸ்மிருதியும்
கணவனை யிழந்த காரிகை மறுமணம்
குணமெனக் கூறிக் கொண்டுநின் றனவே
மணவாக் கைம்மையர் மற்றுங் கடுமை
தணவா நோன்பைத் தரிக்கவென் றனவே
நோன்பின் கடுமையை நோன்றவொண் ணாதவர்
பான்மையிற் கிட்டை பகர வேறிடச்
செப்பி யுளதாற் செய்தன வதுவும்
ஒப்பிச் செய்தன ருத்தமர் சிலரே
மறுத்தனர் பலரே மனத்துறு பயத்தால்
வெறுத்தனர் விதியை வினையை யோர்ந்தவர்
அதனுல்,
மறுமணங் கொள்ள மகிழ்ந்துவந் திட்டனர்
உறுதவ மென்மை யுயாரு வோரே
மனைவியை யிழந்த மாண்டனைத் திடலாற்.

புனைகண வனைப்பிரி பூவையர் தாமும்
மணத்திடல் நீதி மாணற மாமால்
குணநிறை கடலாக் கூறிறை யோனும்
இதனை வெறுக்கா னிதமென வெறுமே
விதன நீக்க விழைவ தவனகடன்
மனையை யிழந்த மதிமிகு முதியனும்
இனைதலுற் றப்பா லின்மணங் கொளுங்கால்
இளமை மகளி ரிருநில மதனில்
உளமுறக் கைமை யுறுதிற றங்கொளல்
எஃதோ வியலு மீதற னாமோ
பழமுற வஞ்சகர் பகர்மொழி யலவோ
கைம்மையர் மணத்தல் கடிந்தன மென்னல்
மெய்மனங் கொண்டே மிகப்பார்த் தருண்மோ
சருகுங் காற்றுஞ் சாப்பிட் டிருக்கும்
பெருகு தவத்தரும் பெண்விழைந் திட்டால்
அறுசுவை யுண்டி யடைவா யுண்போர்
வெறுத்து மணத்தை விதவையா நிற்பரோ
கருணைக் கடலாக் கடவுளொப் பனமோ
பெருகு துயருறப் பேதையர் தம்மை
மணமக ளிறந்தான் மறுமணம் வேண்டாம்
துணைக்கிடை மகட்கென நுவலுவன் சொலுமே!
உணவு நீத்திரை உளவரை போக
எணமிலா திருத்த லெவ்வண மியையும்
கட்டுப் படுத்திருற் காரிகை யார்தாங்
கெட்டு வழியனாக் கேட்டு ளுழைவரே
ஈதுயிர்க் கெல்லா மியல்பா கிடுமே
காதுசெய் வதுவும் வன்கண் மையதே
என்று கொண்டே இயல்பினு மியாரும்
துன்பகன் றின்பிற் றூநெறி நிற்க
மன்னிய கருணை மனத்தா லெண்ணி

வன்புகூ றாது வாய்மையே காட்டி
வேதமும் புராணமும் விதித்த வுண்மையை
ஏதமின் றெடுத்தே யெவர்க்குங் காட்டி
கைம்மையர் மணத்தல் கடன்மையே யலாது
பொய்யை மொழியாம் புன்கண் ணுரைத்தலும்
கூடா வொழுக்கிற் கூடிச் சிசுக்கொலை
வாடா தாற்றலும் சுற்றிட வென்றே
கல்வியு மறிவுங் கவினுய ரொழுக்கமும்
நல்லருண் மனமும் நயம்பெறக் கொண்டோன்
ஆங்கில மொழிவலா னறநெறி யறிந்தோன்
ஓங்கிய வேத வுணர்வுக் குடையோன்
தெலுங்க மன்னர் திருக்குலத் துதித்தோன்
பலிஜ வாரெனும் பகர்குடி யாண்மையுஞ்
நம்பெரு மாளும் சரண ஞூருறை
அம்பிற் கோயில் அரும்பணி செய்துமன்
இம்பரார் புகழ வினிது வாழ்ந்தோன்
உம்பர் போற்று முமையவன் சேர்வன்
கோவில் முதல கோடா தியற்றி
சோலையா ணிலையில் சோக்க விருந்தோன்
பராவுமுத் யோகப் பண்பினி லிருந்தோன்
இராஜகோ பாலனெனு மெழிற்பெய ரானன்
உலக முய்ய உயர்மொழித் தமிழால்
இலகுநல் லறிவோ ரினிதெனக் கூற
"விதவா விவாகமேன்" வித்தக நூலை
இதமாச் சொன்ன வியற்றித் தந்தனன்
அன்னவன் குணமு மவனுயர் கருணையும்
மன்ன வாழி மாநில மிசையே.

சயம்! சயம்!! சயம்!!!

தி. கி. ராஜகோபாலன்,
உரிமையாளன், ஜெயநல அச்சுக்கூடம்.

T. V பொன்னுசாமி பிள்ளை,
பென்ஷனட் சப் இஞ்சினீர், திருச்சி.

K. திருமலைசாமி நாயுடு,
ஹெட் கிளார்க்கு, தந்தி ஆபீஸ், புத்தூர், திருச்சி.

பெ. நாகரத்தினம் பிள்ளை, காசுக்கடை, திருச்சி.

S T முத்துகிருஷ்ணநாயுடு, சிவின்யூ பென்ஷனர், திருச்சி

A. V. பாலகிருஷ்ண நாயுடு,
ஹெட் கிளார்க்கு, P. W. D. திருச்சி.

T, G. கோபால் பிள்ளை, யாதவர், வர்த்தகம், திருச்சி.

R வெங்கடேசபெருமாள் நாயுடு,
கண்டிராக்டர், உறையூர், திருச்சி.

C R ரெங்கராஜுலு நாயுடு, உபாத்தியாயர், மதுரை.

T. V. நல்லசாமி பிள்ளை, B.A.
முனிசிபல் கவுன்சிலர், திருச்சி.

D R கோவிந்தராஜுலு நாயுடு,
சானிடெரி இன்ஸ்பெக்டர், திருச்சி.

T L. K. திருமலைசாமி நாயுடு,
ஆப்காரி கண்டிராக்டர், திருச்சி.

T. V. வேதாச்சலம் பிள்ளை, B.A. B.L.
வக்கீல், தென்னூர், திருச்சி.

T. R சக்ரபாணி நாயுடு, ஆடிட் ஆபீஸ், S I. Ry. திருச்சி.

T. N. இரங்கமன்னார் நாயுடு, டிராப்ட்ஸ்மென், திருச்சி.

மா. திருவேங்கடம் பிள்ளை, மளிகை வியாபாரம், திருச்சி.

இராய் சாயப், T. இராமாஞ்சுலு நாயுடு,
ரிடையர்டு அஸிஸ்டண்டு ஸர்ஜன், திருச்சி.

R M நாராயணசாமி நாயுடு,
காரனேஷன் ஸ்டோர், பாலக்கரை, திருச்சி.

I C. ராகவலு நாயுடு, மிராஸ்தார், திருச்சி.

S A. K. கலியபெருமாள் நாயுடு,
உரிமையாளர், ஆஞ்சநேயர் வார்ப்படத் தொழிற்சாலை, திருச்சி

திருச்சிராபுரம் ஜானரேரி பெந்நாமாஜிஸ்திரேட்டும் டிஸ்திரிக்டு
போர்டுக்கும் டவுன் பஞ்சாயத்துக் கோர்டுக்கும்
மெம்பரும், திருச்சி ஹைஸ்கூல் விஸ்லார்க்கிலு
மஹாஜன லேஸ்டால் ஸ்கூலயின் பிரதான
காரியதரிசியுமாகிய

திருவாளர் T. A. முத்துகிருஷ்ண ஆச்சாரியார்
அவர்கள் தந்த சாத்துக்கவி.

அறுசீர் விருத்தம்.

இறையவன் அருளுக்கேற்கா இயல்பினுல் நீதி மாறி
முறையிலே விதவைமார்கள் மூன்றுற மணத்தல் என்றும்
குறைமதி மொழியைப் போக்கிக் குவலயம் முற்றும் வாழ
நிறைகுண ராஜகோபால் நிகழ்த்தினன் நல்ல நூலை
கணவனை இழந்தமாதர் கைம்மைய தாகி நிற்க
மணமதை முடித்து வாழ மண்மிசை மொழிந்தார் முன்னோர்
பணைக்க வலகிற் காணீர் பண்புற வாழ்வீரென்றில்
எனைமுற என்று கூறும் இராஜகோபாலன் வாழி.

உ

திரிசிராபுரம் பஞ்சாயத்து அங்கத்தினரு ளொருவராகிய
ஜெ. வீராசாமி நாயுடு அவர்களாற்
கொடுக்கப்பெற்ற சாற்றுக்கவிகள்.

எழுசீர் கழி நெடிலாசிரிய விருத்தம்.

1. கடல்சூழ முப்புறங் கனகமால் வரைநிற்க
   நவைகை பல நதிகட்டாக
   கடலோடு புற்பூண்டு மரமாதி தானிய
   மனைவற்ற செல்வமோங்க
   கூடலாயி பெருந்து நீதியுடனாகண்ட
   வுத்தமம் பரதநாடு
   கேடவான காலமிது காரணங் கண்டெழி
   கேட்பீர்க ணிலையையறிவே.

2. மூன்று யுகந் தன்னிலும் விதவைக்கு வேதனம்
   முன்னோர்கள் கண்டதுண்டு
   சான்றுபல கூறிடினு லாபியைத் தனஞ்செயன்
   றன் வேட்டவொன்ற தாகும்
   பூன்றவிரைக் குழலியார் தமயந்தி மறுமணம்
   பூண்பறை சாற்றலேனே
   தோன்ற வருஞ் சுருதியி லிவ் வுண்மை சொல்லுபல
   சாதியிலு மின்றுமுளவாம்.

3. பாரதப் போரினுன் மறுமணங் கடலேறத்
   பகர்ந்துறவு முதலதாக
   சோகமை கூடாது நிச்சயஞ் செய்தனர்
   நீ ணிலத்தன்னி னம் போல்
   வாரவரின் காமநோய் மாற்றவோ சிலகாலம்
   வைத்ததடை தானு மலவோ
   காரமொடு சுவையன்னங் கண்டபெண் வேட்கையின்
   காமமதைக் கட்டவெளிதோ

4. பழையன நீக்கியும் புதியன கூட்டியும்
   பண்பமர காலமோரா
   வழுகுமிக வாழ்வதே வாழ்க்கையா மற்றெலா
   மறிவற்ற செய்கையாகும்
   பழகிட வேண்டுமொரு நல்வழி பழகாது
   படிலென்றும் பாவஞ்சாருங்
   குழவிபோல் வலுவற்ற குணவதி கைம்பெண்ணின்
   குறையை நீர் நீக்க வருவீர்.

5. நீடுபுக ழிந்தியா நிலையற்றுத் தமோதி
   நிற்கின்ற நிலையை மாற்ற
   கூடுபுக ழிந்திய ரிக்குறையை நீக்கமுதற்
   குவலயம் போற்ற நாளுங்
   குடுபுகழிஃதுதான் சுயாச்சியப் பேச்சையுங்
   கருக்காய் முடிக்க வகையாம்
   நாடுபுகழ் வித்தியா சாகரர் வீரேசர்
   கவின்றுபல மணமுஞ்செய்தார்

6. எண்ணமா ரிச்செயலை யிராசகோபாலனு
   மெடுத்துப் பாடுபட்டு

வண்ணமார் நாலொன்று வசனமாய்க் கொற்றலொடு
வாழ்த்தியவரை யூன்றி நீவிர்
இன்னமாய்க் கையான மூப்பினது சிரமத்தை
இரணமா யுதறிவிட்டு
கண்ணறு மருள்வழி முன்வைக்கு நின்றனன்
கைகொடுத் துதவிசெய்வீர்

7. மெய்ஞ்ஞான கண்ணோடு மெலிவடைய பெண்கொலையுஞ்
சிசுகத்தி களவு முதலா
மஞ்ஞான மலியாமல் மண்பெருமை குலையாமல்
மனதொப்பி மாற்றி மொழியைத்
தஞ்ஞான நிலைகண்டு தக்கபடி தாரணியிற்
றன்னுரிமை பெற்று வாழ்க
வெஞ்ஞான்று மீசனருளுநதால் செல்வமுத
விளிதோங்கி யேற்றமாமே.

திரிசிரபுரம் செயிண்ட்ஜோசப்காலேஜ் தமிழ் பண்டிதர்
வித்துவான் அ. சுந்தரநாதம் பிள்ளை அவர்களால்
கொடுக்கப்பெற்ற சாற்றுக்கவிகள்.

---

1. நானரு வேத மாதி நவின்றிருநூலும் யுக்தி
மானமை யழக்கு நாடி மாசறத் தெளியக் காட்டித்
தேனெரு கருணையாலே தோன்றுமந் நூலைச் செய்தான்
ஏனைமை குணத்த னெங்கள் இராஜ கோபால மாலே.

2. கற்றநல் ராஜகோபால் கானிளி மெக்கம் வாக்கின்
சொற்றநல் வித்தை யானன் சோர்விலா பக்தியுள்ளான்
குற்றமில் குணத்தான் நந்த கோதறு நவின்பேர்தான்!
விற்றரு விதவா விவாக விளக்க மென்றிசைப்பர் மாதோ

3. பிறைநுதற் கைம்மை மாதர் பெருங்கவல் துயர மெல்லாம்
இறையுமிங்கில்லாதோட வியைபிறு முடி வேதத்
துறைநெறி கடவா நின்பிற் சொற்றிடு மிந்த நூல்தான்
இறையருள் பெற்று வாழி! யிருநிலத் தழைக்கத்தானே.

ஆய்வுரை.

"விதவா விவாக விளக்கம்" என்னும் சிறுநூலை திருச்சி நண்பர் C.P. இராஜகோபால்நாயுடு அவர்கள் அனுப்பக் கைவரப் பெற்று அதனைப்படித்துப் பார்த்தேன்.

விதவா விவாக சபையின் உபசபை ஒன்று தென்னாட்டில் இல்லையே என்று நான் நினைத்த காலமும் உண்டு. அது நண்பர் இராஜகோபால்நாயுடுவால் திருச்சியில் கைகூடப்பெற்றதை நோக்க நன்மகிழ்ந்தேன்.

நம் நாட்டில் உள்ளோர் சாத்திர பலமற்ற ஓர் துர் ஆசாரத்தை மேற்கொண்டு இளம் கைம்பெண்களை அநேகவித சங்கடங்களுக்கு உட்படுத்தி வருகிறார்கள். இத்துர்வழக்கம் என்று ஒழியுமோ அன்றுதான் நாடு சுகப்படும்.

'உலகில் ஆடவருக்கு எவ்வளவு சுதந்திரம் உண்டோ அவ்வளவு சுதந்திரம் மடவாருக்கும் உண்டு' என்பதை ஆண்மக்கள் மறந்துவிட்டார்கள். இம்மறதி என்னும் பகைவன் ஈன்ற குழவியே மேற்சொன்ன துர்வழக்கம் என்னலாம்.

ஆரியர் தமிழ்நாடு புகுவதன் முன்னம் இந்நாட்டில் மக்களுள் களவு, கற்பு என்னும் இருவித முறைகளே நடைபெற்று வந்தன.

ஆகையாலேதான் ஆசிரியர் திருவள்ளுவரும் இவ்விருவித முறைகளையே எடுத்தோதியுள்ளார். இம்முறைகள் இரண்டுமாத்திரம் ஒரு நாட்டினிடத்து நடைபெற்று வந்தால் பெரும்பாலும் அந்நாட்டில் கைம்பெண்களே இருப்பது அரிது. நன்மக்கள் தலை

பண்டைக் காலத்தே தமிழகத்தில் வாழ்ந்த மனைவாழ்க்கை வன் தலைவியராக உள்ள ஒற்றுமையால் ஏற்பட்ட யினையே சிறந்ததெனக் கொண்டாரென்பது அகப்பொருள் நூல்களால் இனிது விளங்கும்.

ஓர் பொழிலகத்தேயாதல் அல்லது பிற எவ்விடத்தேயாதல் தலைவன் தலைவி என்பார்க்கு காட்சி முதலியன நிகழ்ந்து அன்னோரது குறிப்பறிவு முற்றுப்பெற வேண்டுமென்பதே அப்பொருள் இலக்கணத்திலும் அதன் வழித்தாய் இலக்கியங்களிலும் நன்கு காட்டப் பெற்றிருக்கின்றது.

பல பிறவிகளிலும் ஒத்த அன்பினராய் இல்வாழ்க்கை நடத்திய இரண்டு உயிர்கள் இப்பிறப்பிலே ஆணும் பெண்ணுமாக ஒருவரை யொருவர் தலைப்பட்ட ஞான்று அன்னோரது உழுவலன்பு வெளிப்பட்டு அவ்விருவரையும் ஒற்றுமைப் படுத்தும்.

இந்நிகழ்ச்சிகள் உண்டாவதற்கு தலைவன் தலைவியருக்கு வயது வந்தே இருக்கவேண்டும். வயதுவராச்சிறுமக்களிடை இவ்வித உணர்ச்சிகள் உண்டாகா. ஆகையால் இக்காலத்தில் நடைபெறும் குழந்தை மண முடிப்பு அக்காலத்தில் இல்லையென்பது போதரும்.

இவ்வாறு ஒத்த அன்பினராய் தலைவனும் தலைவியும் களவு முறையாற் பிணிக்கப்பட்டு கற்பு முறையில் இல்லறம் நடத்தினால் அவர்களுக்கு எவ்விதத்திலும் குறைவு ஏற்படாது. கவலை என்பது ஒன்று இல்லாராய் வாழ்ந்திருப்பர். அதனால் அவர்களுக்கு ஆயுளும் நீடிக்கும்.

புறநானூற்றில் கூறிய [illegible] இருந்திருக்கின்றனர்.

கற்புடைய மாதர் கைம்பெண்களாகவே மாட்டார்கள்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை"

என்றபடி கற்புடை மகளிர் நினைத்தபடி மழையைப் பெய்விக்க வல்லவர்கள். ஆதலால் சாவித்திரி மாதிரி தம் கணவர்களையும் உய்விக்க வல்லவர்களே.

கற்புமுறை இத்தமிழ்நாடு ஒன்றற்கே சிறப்புடையது.

ஆகையால் அக்காலத்தில் இளங்கைம்பெண்களைப்பற்றிக் கவலையே இல்லாமல் இருந்தது. ஆகையால் திருவள்ளுவர் முதலான நீதி நூற்காரரும் கைம்மையர்க்கு ஒழுக்கம் கூறுமற்போயினர்.

ஆரியர்கள் தமிழ்நாடு புகுந்த பின்னர் ஆரியர்கள் தங்களுடைய எண்வித மண முறையைத் தமிழ்மக்களிடையில் புகுத்தி விட்டார்கள்

"பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப" தொல்காப்பியம்.

இப்பொழுது தமிழர்க்குள் நடைபெறும் மணமுறை பண்டைச் சிறப்பு முறையைத் தழுவியதல்ல. இப்பொழுது நடைபெறுவனவெல்லாம் ஆரியர் மணமுறையைத் தழுவியன. ஆகையாற்றான் இக்காலத்தில் இளங்கைம் பெண்களை ஏராளமாய்க் காண்கிறோம்.

இவ்விளங் கைம்பெண்களை நல்வாழ்க்கைப் படுத்துதற்கு இ[illegible] விதவா விவாகசங்கம் இன்றியமையாததே.

களவு முறையில் இருவரது மனமும் ஒத்த பிற்பாடு மணமகனுக்கு ஏதாவதொரு தீங்கு ஊழ்வலியால் ஏற்பட்டு விட்டால் மணமகள் வேறொருவனை நாடாள். கைம்மை நோன்பு நோற்றே காலத்தைக் கழிப்பாள். ஏனென்றால் இயற்கையாக ஒருவனிடத்தே சென்ற அன்பானது மறுபடியும் இன்னொருவனிடம் செல்லாது. இதற்குத் திருநாவுக்கரசு சுவாமிகளுடைய தமக்கையார் திலகவதியாரே சான்று.

ஆடவர்க்குள் பிரமசாரியம், கிரகஸ்தாசிரமம்—வானப்பிரஸ்தம்—சந்நியாசம் என நான்கு நிலைகள் உள்ளன போலவே மடவார்க்குள்ளும் நான்கு நிலைகள் உள்ளன :—

1. மடவார் கன்னிமாடத்தில் இருக்கும் வரை— பிரமசாரியம்—அதாவது கன்னிமாட வாழ்வு.

2. களவு முறையில் மணமகனை வரித்து கற்பு முறையில் இல்லறம் நடத்துவது கிரகஸ்தாசிரமம்—அதாவது இல்லறவாழ்வு.

3. கணவனோடு வனம்புக்கு கணவன் தவம்புரியுங்கால் தான் அவனுக்குத் தொண்டு செய்வது—வானப்பிரஸ்தம்— அதாவது வனவாசம்.

4. ஊழ்வலியால் கணவன் இறக்க நேரில் மனைவி உலகை வெறுத்து கைம்மை நோன்பு நோற்பது—சந்நியாசம்.

கைம்மை நோன்பாவது :—

1. உப்பில்லாத கூழ் அருந்துதல்
2. பாயில்லாமல் வெறுந்தரையில் படுப்பது
3. வெற்றிலை பாக்குப் போடாமல் இருப்பது
4. வெள்ளை அல்லது துவராடையைத் தவிர வேறு நிற ஆடைகளைக் கட்டாமல் இருப்பது.
5. அணிகலன்கள் அணியாமல் இருப்பது.
6. மஞ்சள் பூசாமல் குளிப்பது.
7. குங்குமப் பொட்டிடாமல் இருப்பது
8. பூக்களை அணியாமல் இருப்பது.
9. தேவகோட்டத்தில் தொண்டு செய்திருப்பது முதலியன.

முக்கியமாக போகத்தை விலக்கிப் பொருள்களை வெறுத்து இருப்பது.

சந்நியாசிகளில் அநேகர் மொட்டை அடிக்கவும் அநேகர் மயிர் (சடை) வளர்க்கவும் இருப்பதுபோல கைம்பெண்களில் அநேகர் மொட்டை அடிக்கவும் அநேகர் மயிர் வளர்க்கவும் செய்கிறார்கள்.

ஆகையால் கைம்மை நோன்புக்கும் சந்நியாசத்துக்கும் யாதொரு வித்தியாசம் இல்லை.

இவ்விதம் உலகை உண்மையில் வெறுத்த கைம்மை நோன்பாகிய சந்நியாசத்தைக் கைக்கொண்ட கைம்பெண்களுக்கு மறுவிவாகம் வேண்டியதில்லை.

அப்படி இல்லாமல் தற்கால ஆரிய மண முறைப்படி விவாகம் செய்யப்பட்டு இளமையிலேயே கைம்பெண்களாகும் சிறுமகளிர்க்கு மறுவிவாகம் அவசியமே.

ஆகையால் நம் நாட்டில் உள்ளோர் எல்லோரும் இச்சங்கத்தில் அங்கத்தினராயமர்ந்து சங்கத்தின் நோக்கங்களை முற்றுவிப்பார்களென நம்புகிறேன்.

ஆரூர் 22—5—26. } குடிசைகிழார் அ. சிதம்பரனார்.

ஓம்.

விதவா விவாக விளக்கம்.

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் மற்றொன்றறியேன் பராபரமே." (தாயுமானவர்)

அகிலாண்டங்களை யெல்லாம் தன்னருள் வெளிக்குள்
தங்கும்படி இச்சைவைத்து இரக்ஷித்துவரும்
சர்வேசுரன், இரக்கமுள்ளவரென்றும், பரமதயையுள்ள
வரென்றும், கருணையுள்ளவரென்றும், தர்மமே வடிவு
கொண்டவரென்றும்; அவர்படைத்த எல்லா ஜீவகோடி
இராசிகளும் எக்காலத்தும் சுகத்தை அநுபவிப்பதே
அவருடைய இச்சையென்றும், எல்லாத் தேசத்தினரா
லும், மதஸ்தர்களாலும், கக்ஷிபேதமில்லாமல் நிராக்ஷே
பணையாய் ஒப்புக்கொள்ளப்பட்ட பரம சித்தாந்தமாகும்.
அஞ்ஞானத்தாலும், சிரத்தையற்ற நடவடிக்கையாலும்,
தர்மங்களை மீறிநடப்பதாலும், பிறருடைய அக்கிரமச்
செயல்களாலும், துக்கங்கள் சம்பவிக்கும். கருணாகர
னாகிய ஈசுவரனால் வெளியிடப்பட்ட சாஸ்திரமானது
பிரஜைகளுடைய சுககரமாயிருக்குமே யொழிய, பிரதி
கூலமாயிருக்கலாகாதென்றும், இதற்கு விரோதமாய்ப்
போதிப்பவர்கள் வஞ்சகரென்றும், தெய்வதூஷணை செய்
யப்பட்டவரென்றும், நன்றாய் அறிந்துகொள்ளத்தக்கது.
வெகுஜனங்களுடைய சுகத்தை அநுசரித்துச்செய்வதே
புண்ணிய காரியமாகும், அல்லாதது பாப காரியமாகும்:

[illegible]

"பரோபகார: புண்யாய பாபாய பரபீடனம்."

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகையால், எந்த சாஸ்திரத்தை யுண்டாக்கினாலும், எந்த தர்மத்தை நிர்ணயித்தாலும், எம்மதத்தை ஸ்தாபிக்க முயன்றாலும், அக்காரியம் வெகு ஜனங்களுடைய சுகமாயிருக்க வேணுமேயொழிய ஒரு கூட்டத்தாருக்கு மட்டும் அனுகூலமாயிருக்குமாகில், அது பகவானுடைய இஷ்டத்தைப் பொருந்ததல்லவென்றும், கொடுமையான பேய்பிசாசுகளை யொத்தவர்களின் செயலென்றும் நம்பலாம். தங்களுடைய கர்ப்பத்தில் பிறந்த ஸ்திரீகளையும், சிசுக்களையும் இரக்கமற்று வதைக்கும் கிராதககாரியம் அஞ்ஞானத்தாலல்லவா? சத்தியமான ஈசுவரனை மறந்து காளியென்றும், சத்தியென்றும், பேரிட்ட கற்சிலைகளுக்குச் சந்தோஷமுண்டாகுமென்று தயவை மறந்து நம் முன்னோர் நரபலி கொடுத்துவந்தது கோரமான இராக்ஷதச்செயலல்லவா? புண்ணியம் வருமென்றும் பாபம் கழியுமென்றும் பிரமையடைந்து, இரக்கமின்றிப் பிரியசம்மந்தத்தை மறந்து, தங்கள் வயிற்றிற்பிறந்த சிசுக்களைக் கங்காநதியில் முதலைகளுக்கு இரையாக ஆற்றில் எறிந்து விட்டதும் இக்காலத்தும் இரகசியமாய் எறிந்து வருவதுமான ஆசாரம் புண்ணியச் செயலாகுமா? முன்னோர் அநுஷ்டித்துவந்ததாகச்சொல்லும் இவ்வழக்கத்தை இப்போது நாம் வெறுக்கிறோமல்லவா? இப்படிச் செய்வது வழக்கம் அல்லது ஆசாரமென்று சொல்லப் படுகிற பிசாசின் பெருமையினாலல்லவா? ஒருவரைப் பார்த்து உங்கள் பால விதவைப் பெண்ணுக்கு மறுவிவாகம் செய்து வைத்து அப்பெண்மணியின் துயரத்தை மாற்றக்கூடாதா என்று கேட்டால், இவர் நம்மவர்களுக்குள் இவ்வழக்க மில்லையே இது நாம் அநுஷ்டிக்கவரும் ஆசாரமல்லவே என்று பொறுப்பற்றுச் சொல்லி விடுகிறார்களே; நம்முடைய கருணைக்கும் தயைக்கும் உரித்

தான பால விதவைகள், வாழ்நாள் பரியந்தம் 'கண்படு கண்ணியில் மான்படுமாறு கலங்கும்' துயரத்தையும் கஷ்டத்தையும் பார்த்து மனம் இளகாமலிருத்தல் அந்த ஆசாரமென்கிற பிசாசின் காரியமேயல்லவா? இந்த அநாதவிதவைகள் படும் துயரத்தைப் போக்குவதற்குப் புண்ணியவான்கள் செய்யும் பரோபகார முயற்சிகளுக்கு இடையூறுகள் செய்து எடுத்த காரியம் நடைபெறவொட்டாமல் செய்வதும் அந்த ஆசார பிசாசத்தின் ஆவேச வலுவாலே யல்லவா? ஓ கொடிய ஆசார பிசாசமே! எல்லாத் தேசங்களுக்கும் சிரோமணியாய், எல்லா தேசத்தோர்களும் கவுரவித்து வந்த இந்த இந்துதேசத்தில் மட்டும் நீ பிரவேசித்து ஈசுவரனது அதிகாரத்தை ஆக்கிரமித்துக் கொண்டு இத்தேசத்தில் பிறந்த எங்கள் சகோதரிகள், பிள்ளைகள், பேத்திகள், விதவைகளான நாள்முதல் நீ உன்னுடைய எல்லையற்ற அக்கிரம அதிகாரத்தைச்செலுத்துகிறாய். இவ்வுலகத்திலுள்ள எல்லாத் தேசங்களுக்கும் முடிநாயகமாய் விளங்கிய இத்தேசத்தைப் பார்த்து மற்ற தேசத்தார் இந்துக்கள் கௌரவமற்றவர்களென்றும், தயையற்றவர்களென்றும், தங்களுடன் பிறந்த சகோதரிகள், தாம் பெற்ற பெண் பிள்ளைகளின்மீது கொஞ்சமேனும் இரக்கமற்ற கொடிய பாவிகளென்றும், நாகரிகமற்றவர்களென்றும், எவருமறியச்சொல்லுகிறார்களே, நீ எங்கள் தேசத்தை அடைந்த பின்னல்லவா எது செய்யத்தக்கது எது செய்யத்தகாதது என்கிற விவேகத்தை எங்கள் இருதயத்திலிருந்து துரத்திவிட்டாய்! ஆத்மகுணங்களிற் சிறந்ததாகிய தயை என்கிற தர்மத்தை அவர்கள் மனதைவிட்டுத் துரத்திவிட்டாய்! உன் அதிகாரம் பெருகிய பிந்தியல்லவா எல்லா தேசத்தினராலும் புகழ்படைத்த இந்தப் பரத கண்டம்

நாளடைவில் கர்ப்பமழித்தல் சிசுகத்தி முதலிய பாவங்களால் ஈனதசையை யடைந்து இப்போது இதரதேசத்தார் பார்த்து நகைக்கும் நிலைமைக்கும் வந்துவிட்டது!

ஆகையால், சகோதரர்களே! சகோதரிகளே! நீங்கள் இனியாவது அறிவற்று (ஆசாரமென்கிற) அஞ்ஞான நித்திரையிலிருந்து விழித்துக்கொண்டு நம்மைப்படைத்த ஈசுவரனது கட்டளையாகிய வேதவிதியின்படி நடந்து அவரது அதிகாரத்தையும் அவருடைய சிங்காசனத்தையும் களவாடி ஆசாரமென்கிற பெயரிட்டுக் கொண்டு நம்மை ஆளும்படியான இந்தப்பிசாசத்தின் அடிமைக்கு நாம் ஆளாகாமல் மற்ற தேசத்தாருடைய மதிப்பை நாமடைந்து நமது ஆதி நாகரிகத்தை நிலை நாட்ட வேண்டும்.

மானிடராகிய நாம் மிருகங்களைப்போல் ஞானமற்றவர்களல்ல. எது சத்தியம், எது அசத்திய மென்று தெரிந்து கொள்வதற்கும், அவரை ஆராதித்து மோக்ஷ வீடடைவதற்கும், புண்ணிய பாவங்களை அறிந்து கொள்வதற்கும், எது அநுகூலமானது? எது பிரதிகூலமானது? என்று தீர்மானித்துக்கொள்வதற்கும் கடவுள் ஞானமென்கிற பிரகாசமான தீபத்தை நமக்குக் கொடுத்திருக்கிறார். அஞ்ஞானத்தால் மிருகங்கள் ஒரே சுபாவத்தை யடைந்து எப்போதும் இருக்குமேயொழிய, ஞானத்தோடு கூடிய மானிடர் தங்களுக்கு ஈசுவரன் அநுக்கிரகித்திருக்கும் ஞானசுதந்திர பலத்தால் மாறுதலடையாமல் எக்காலத்திலும் ஸ்திரமாய், ஒரே ஸ்வபாவத்தையுடையவர்களாயிருக்க முடியாது. உலகத்தில் நமக்கெவ்வளவுக் கெவ்வளவு வித்தையும், புத்தியும் அநுபவமும் விர்த்தியடையுமோ அவ்வளவுக்கவ்வளவு, அவ்வக்

காலத்து மாறுதல்கள் அடைவதும், அப்படிப்பட்ட மாறுதல்கள் தேசத்தின் சௌகரியத்துக்கு அநுகூலமாயிருந்தால் அது பகவானுடைய திருவுள்ளத்துக்கு உவப்பானதாகவுமே இருக்கும். அதுவே அவரது திருவுள்ளக் கருத்தாகும். ஆயினும் விஷய விசாரம் செய்யாமல் க்ஷேமமான மாறுபாடுகள் செய்ய முடியாதாகையால், இது பழைய ஆசாரமா அல்லவாவென்கிற பொறுப்பற்ற விசாரணையை விட்டுவிட்டு இதனால் லாபமுண்டாகுமா நஷ்டமுண்டாகுமா, தற்கால நிலைமைக்கு அநுகூலமானதா பிரதிகூலமானதா என்ற (விஷய) விசாரணை செய்து, நல்ல பயனேற்படக்கூடிய ஏற்பாடுகளை நாம் செய்து கொண்டே போகவேண்டும். தொன்றுதொட்டு வழங்கி வந்த ஆசாரமாகிலும் மானிட சுபாவத்துக்கும், இயற்கைத் தர்மத்துக்கும் விரோதப் பட்டிருந்தால் அவ்வநுஷ்டானம் என்றைக்காவது நசித்துப்போகத்தக்கதே. ஆகையால், இளமைப் பருவத்தில் கணவனை இழந்துவிட்ட கைம்பெண்களை மறு கல்யாணம் செய்யவொட்டாமல் தடுத்து வைத்திருக்கும் சுபாவ விரோதமான கொடிய ஆசாரமென்கிற வழக்கமும் நசித்துப்போகக்கூடியதே. நாமனுஷ்டித்துவரும் இந்தியவழக்கம் சுபாவதர்மத்தை அநுசரித்ததாயிருந்தால் இவ்வாசாரத்தை ஏன் உலகமுழுவதும் அநுஷ்டிக்கவில்லை. அறியாமையால் அநேகர் இந்த வழக்கம் உலக முழுதும் அநுஷ்டித்து வருவதாக எண்ணியிருக்கலாம். நம்முடைய இந்து தேசம் உலகத்தில் 20-ல் ஒரு பங்குகூட ஆகமாட்டாது. மற்றெல்லாத்தேசங்களிலும் சுபாவ விரோதமான இவ்வழக்கம் அநுஷ்டிக்கப் படவில்லை. இந்த தேசத்திலும் அநேக மதஸ்தர்கள் பரவியிருக்க, அவர்கள் இந்திய வழக்கத்தை அநுஷ்டிக்

நாமல் இந்துமதத்தைத் தழுவியிருக்குமவர்களால் மட்டும் அநுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அதுவும் பிரம்ம க்ஷத்திரிய வைசியர்களென்றும் உயர்ந்த வகுப்பினரென்றும் சொல்லிக்கொள்ளுபவர்களால் மட்டும் அநுஷ்டிக்கப்படுகிறது. இத்தீயவழக்கம் எக்காலத்திலுமில்லாமல், இக்கலியுகம் பிறந்தபின்னிட்டே சிலவகுப்பாரால்மட்டும் அநுஷ்டிக்கப்பட்டும், நிராக்ஷேபணையாயும் பரவாமல் வெகுகாலமாகவே மறுக்கப்பட்டும் வந்திருப்பதால், இக்காலத்தில் உலகமுழுதும் விருத்தியாகிவரும் கல்விச்செல்வத்தால் இயற்கைக்குவிரோதமான இத்தீயவழக்கம் ஒழிந்துபோகும்காலம் சமீபித்துவிட்டது. ஆகிலும் அது அடியோடு சீக்கிரம் வீழ்ந்து போகும்படியான வேண்டிய முயற்சிகளை நாம் செய்துகொண்டு போகவேண்டும். உலோகோபகாரராயிருந்த மகான் ஈசுவரசந்திரவித்தியாஸாகரருடைய அபிப்பிராயத்தைக் கைக்கொண்டு பஞ்சாப்தேசத்தைச்சேர்ந்த லாகூர் என்ற நகரத்தில் விதவைகளை ரக்ஷிக்கும் பொருட்டு 1914-ல் ஒரு சபையை ஸ்தாபித்து இதற்கு ஐக்கியமாகாணம், பேஹார், ஒரிஸா, வங்காளம், பொம்பாய், அஸாம்தேசம், இராஜபுதனம், மத்தியமாகாணம் முதலான இடங்களில் உபசபைகளையுண்டாக்கி சுமார் 7,000 விதவைகளின் விவாகங்கள் செய்திருக்கிறார்கள். இவ்விதமாய் இந்த கொடிய ஆசாரத்தை வடதிசையிலிருந்து துரத்திக் கொண்டுவந்து, சென்னையிலும், பெங்களூரிலும், குடகு பிரதேசங்களிலும் சபைகளை ஏற்படுத்தி அச்சபையாரும் விதவைகள் ரக்ஷணார்த்தமாய்ச் சாலைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். 12-வருஷங்களுக்கு முற்பட்ட காலத்தில் நான்கு வேதங்களையும் கற்றுணர்ந்த பண்டிதர்களால் அலங்கரிக்கப் பெற்ற விசாகப்பட்டணம், கோதவரி, கிருஷ்ணா ஜில்லாக்களி

லுள்ள பண்டிதர்களோடு போராடி ஜயம்பெற்ற ராஜமஹேந்திரவரம்வித்துவானாகிய சென்னைப்பட்டினம் சர்வகலாசாலைத்தெலுங்குபாஷை பண்டிதராகிய ராவ்பகதூர் பட்டம்பெற்ற ஸ்ரீ வீரேசலிங்கம்பந்துலுவென்கிற பிராமண உத்தமர் அநேக பிராமண விதவைப்பெண்களின் புனர்விவாகத்தை நடத்தி வைத்தார். அவ்விவாகங்களில் வைசிய கோமுட்டி விதவைப்பெண்ணின் கலியாணமுமொன்று நடந்தது. அந்த ஜில்லாக்களிலும் சபைகள் ஏற்பட்டுபிரசாரவேலை செய்து வருகிறார்கள். இதை அநுசரித்தே இத்திருச்சி நகரத்திலும் இக்கிளைச்சபை ஸ்தாபிக்கப் பெற்றது. இந்தப் புண்ணியாத்மாக்களின் திருவாக்கின் சொற்களையே நான் சொன்னதும் சொல்வதுமாகும்.

நாமிப்போது அநுஷ்டித்துவரும் ஆசாரத்தை விட்டுவிடும்படி நான் உங்களுக்குச் சொல்வதற்குமுன் அவ்வாசாரத்தால் ஜனசமூகத்துக்கு உண்டாகும் கஷ்டங்களையும், நஷ்டங்களையும் அத்தீய ஒழுக்கத்தை ஒழித்து விடுவதால் ஏற்படும் லாபத்தைப்பற்றியுஞ் சிறிது கவனிக்கக்கோருகிறேன்.

ஸர்வஸமானாகிய ஈசுவரன் ஸ்திரீ புருஷ பேதமற்று மானிடவர்க்க முழுவதும் இவ்வுலகத்தில் சாத்தியபட்டமட்டும் சம்பூரண சுகத்தை அநுபவிப்பதற்காக எண்ணங் கொண்டவரென்று முந்தியே சொல்லியிருக்கிறேன். இவ்வுலகத்தில் சமஸ்த ஜீவகோடி இராசிகளும் அடையத்தக்க ஆகாரம், நித்திரை, போகமென்கிற சுகங்களில் காமசுகம் முக்கியமானது. ஜெகதீசன் புருஷர்களுக்கு எப்படி பசி, தாகம், போகமென்கிற இச்சையை உண்டாக்கி இருக்கின்றனரோ, அவ்வண்ணமாகவே ஸ்திரீகளுக்கும் காம இச்சையை உண்டாக்கி

இருப்பதால், புருஷர்களாகட்டும், ஸ்திரீகளாகட்டும், அக்காமசுகத்தை நியாயமான வழியில் அடைய வேண்டுமென்பதே, ஈசுவரனது திருவுள்ளமென்பது தெளிவாய் இருப்பதால், விபசாரவழியிற் செல்லாமல் காமசாந்தி செய்து கொள்ளவேண்டும். காமசாந்தியின் பொருட்டு ஏற்பட்டமார்க்கம் விவாகசம்பந்தமே. புருஷனை இழந்த விதவைப் பெண்களுக்கு விவாகம் செய்து வைப்பதை விட்டு, அவர்களை எவ்வித நிர்ப்பந்தத்துக்குட்படுத்தினாலும், மறுமையில் புண்ணியலோகம் கிடைக்குமென்று ஆசை வார்த்தைகளைச் சொன்னாலும், எவ்வளவு நல்ல உபதேசங்கள் செய்துவைத்தாலும், மானிட இயற்கைச் சுபாவம் மாறாமல் தீயவழியில் செல்லுமே யல்லாமல், பெரும்பாலோருக்கு இந்திரிய நிக்கிரகம் செய்யமுடியாது. சகலமும் கற்றுணர்ந்து, ஒருவருடனும் சேராமல் சம்சாரபந்தமுமற்று, சரீரம் ஒடுங்கும்படிச்செய்து, ஆரண்யங்களில் வேர் கிழங்குகளைப்புசித்து, தலை கீழாய்த் தொங்கித் தவம்பண்ணிய மகான்களே அப்போதைக்கப்போது காமார்த்தர்களாகி, தங்கள் புத்தி மாறிச் செய்யத்தகாதனவற்றைச் செய்தார்களென்றால், நெய், பால், தயிர் முதலான வற்றோடு நல்ல அன்னத்தைப் புசிக்கும் மானிடராகிய புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் காம இந்திரியத்தை ஜெயிக்க முடியுமா? முடியுமென்று சொல்வது மகாவிந்திய பர்வதமானது சமுத்திரத்தில் மிதக்குமென்று சொல்லத்தக்கதாகும்.

విశ్వామిత్ర పరాశర ప్రభృతయో వాతాంబు పర్ణాశనా
స్తేపి స్త్రీముఖ పంకజం సులలితం దృష్ట్వైవ మోహం గతాః
శాల్యన్నం సఘృతం పయోదధి యుతం భుంజంతి యే మానవా
స్తేషామింద్రియ నిగ్రహో యది భవేద్వింధ్యః ప్లవేత్సాగరే.

விஸ்வாமித்ர பராசர ப்ரப்ருத யோ, வாதாம்பு பர்ணாசனா
ஸ்தேபிஸ்திரீ முகபங்கஜம் ஸுலலிதம் த்ருஷ்ட்வைவ மோஹங்கதாஹ
சால்யன்னம் ஸக்ருதம் பயததியுதம புஞ்சந்தியே மானவாஹ
தேஷாம் இந்திரிய நிக்ரஹோயதி பவேத் விந்திய; ப்லவேத்ஸாகரே.

மகாரிஷிகளின் நிலைமை யிப்படியிருக்க கற்றுணர்ந்த வித்வான்களிருக்க வேண்டிய நிலைமையைச் சொல்லும் தர்மசாஸ்திரங்களை விதித்த மனுவானவர் சொன்ன சுலோகமாவது.

మాత్రా స్వస్రా దుహిత్రా వా నవివిక్తాసనో భవేత్
బలవానింద్రియ గ్రామో విద్వాంస మపికర్షతి.

மாத்ரா ஸ்வஸ்ரா துஹித்ராவா நவிவிக்தாஸநோ பவேத்
பலவா நிந்த்ரியக்ராமோ வித்வாம்ஸ மபிகர்ஷதி.

மகாவலிமை பெற்ற காமேந்திரியமானது கற்றுணர்ந்த வித்வான்களையும் வஞ்சிக்குமாகையால், அவர்கள், பெற்ற தாயாகிலும், உடன்பிறந்தவளாயாகிலும், தன் குமாரத்தியேயாகிலும், எக்காரணத்தை முன்னிட்டும் ரகஸ்யமான இடத்தில் கூடிப்பேச உட்காரலாகாதென்று வித்வான்களுக்கே விதித்திருப்பதால் மந்தமதிகள் விஷயமாய்ச் சொல்லவேண்டியதில்லை.

உலர்ந்த சருகுகளையும், வாயுவையும் பக்ஷித்தும் ஆரண்யங்களில் இரும்பு வலைகளை கௌபீனமாய்க்கட்டிக்கொண்டும் வாசம் செய்யும்படியான தபோதனர்களின் ஸ்திதியும், பெற்றோர்களைவிட்டுக் குருகுலவாசம் செய்து நிஷ்டையோடுகூடி வித்தியாப்பியாசம் செய்யும் வித்வான்களுடைய மனமேகெட்டுப்போய்விடுமென்றால், கொஞ்சமும் வித்தையற்று, இது தக்கது, இது தகாதது என்கிற விவேகமற்று, இந்திரிய சுகத்துக்கானுகூலமாயிருக்கும் நன்கமைந்த வீடுகளில் வாசம் செய்து

கொண்டு, நற்பிராயத்தோடு கூடிய அஷ்ட இளைஞர்களாகிய ஆண்பிள்ளைகளின் நடுவில் நடமாடிக்கொண்டு உப்பு, புளிப்பு, தித்திப்பு முதலான நாக்கு ருசிகரமான பதார்த்தங்களைத் தின்று, நற்பருவத்தோடு கூடிய இளம்கைம்பெண்கள் காமேந்திரியத்தை அடக்கியாள முடியுமென்று நீங்கள் சொல்வது காணப்போமா? நீங்கள் நம்பமுடியுமா? நம்பலாமா?

శ్లో॥ స్త్రీణాం ద్విగుణ ఆహారో బుద్ధిశ్చాపి చతుర్గుణా
సాహసం షడ్గుణం చైవ కామశ్చాష్టగుణః స్మృతః.

ஸ்திரீணாம் த்விகுண ஆஹாரோ புத்தி: சாபி சதுர்குணா
ஸாஹஸம் ஷட்குணம் சைவ காமஷ்சாஷ்ட குணோ பவேத்

மன்மதனுடைய பாணத்துக்கு மகாரிஷிகளாகிய தபோதனர்களின், வித்வான்களின் மனமே காற்றுக் கெதிர்ப்பிருக்கும் தீபத்தைப்போல் அசைவுற்றுத் தட்டுக்கெட்டுத் திண்டாடிக்கொண்டிருக்க அபலைகளாகிய அனாதஇளம் கைம்பெண்களின் மனது எம்மாத்திரம். உங்கள் பாலவிதவைகளின் ஆபரணங்களை எடுத்துவிட்டும், அவர்கள் ரூபத்தை மாற்றியும், மூன்று பொழுது சாப்பிடுவதை நிறுத்தி அவர்கள் வயிற்றைக்கட்டியும், கட்டாந்தரையிற் படுக்கும்படிச்செய்து அவர்கள் சரீரம் நோகும்படிச் செய்தாலும், ஈசுவரனே அவர்களுக்கு கொடுத்திருக்கும் தலைமயிரைக் கழித்து மொட்டையாக்கி இன்னமுமனேக கொடிய கஷ்டங்களுக்கு அவர்களை உட்படுத்தினாலும், பகவானே அவர்களுக்கு இயற்கையாயமைத்து வைத்திருக்கும் காம இச்சையை உங்களால் எடுத்துவிடமுடியுமா? நற்பிராயத்தோடு கூடிய ஒரு புருஷனுக்கு, மனைவியிறந்தபின், அவனுக்கு காம இச்சை மாறாமல் இருப்பதை முன்னிட்டு அவன் மறு

படியும் விவாகம் செய்துகொள்வது ஈசுவரனது திருவுள்ளமாகுமென்று எப்படி யூகிக்கத்தக்கதோ அவ்வண்ணமாகவே புருஷன் இறந்துபோன காரணத்தால் அந்த ஸ்திரீக்குக் காமஇச்சை மாறாமல் இருப்பதை முன்னிட்டு அவ்விதவை ஸ்திரீக்கும் புனர் விவாகம் செய்துவைப்பது பகவானுடைய திருவுள்ளக்கருத்தாகு மென்று நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டாமா? அவருடைய திருவுள்ள இஷ்டத்துக்கு விரோதப்பட்டு இவ்வுலகத்திலும் அவ்வுலகத்திலும் எவ்வித நன்மையடைய முடியும்? அப்படிச் செய்யத்துணிவது கொடியசெயலாகுமேதவிர மானிட சுபாவத்துக்குப் பொருந்துமா? புருஷசுகத்தை அனுபவிக்கச் சிருஷ்டிக்கப்பட்ட ஸ்திரீகளுக்கு அவர்கள் விதவைகளானவுடன் மறுகலியாணம் செய்து வைப்பதைவிட்டு உங்கள் வலிமை முழுதும் செலுத்தி, அவ்விதவைகளின் ஆயுட்கால முழுதும் துயரத்துக்கு ஆளாகச்செய்வது எவ்வளவு பாபச்செயலாகும்? எவ்வளவு கொடூரமானது? இதற்கு நரகலோகமடைவதைவிடப் புண்ணியலோகம் கிட்டுமா? இவ்வளவு தீமையான ஆசாரத்தை நாம் கைக்கொண்டு நம்விதவைகளை நாம் வைத்திருக்கும் கொடிய நிலைமையைப்பார்த்து பிறதேசத்தார் நம்மைக் கொடியவர்களென்றும், தம்மவர்கள் மீதே தயையற்றவர்களென்றும், இப்பேர்ப்பட்ட ஜாதியாருக்குச் சுதந்தரம் கொடுக்கலாகாதென்றும், என்றைக்கும் இவர்களை அடிமை நிலைமையில் வைத்தாலொழிய இவர்களுக்குப் புத்திவரமாட்டாதென்றும் எல்லா தேசத்தினரும் நம்மீது கோபிக்கிறார்களே! இதையாவது நீங்கள் கவனிக்கக்கூடாதா? இதர தேசத்தாருக்கும் நம் விதவைகள் விஷயமாய்த் தயை பிறக்கும்போது உங்கள் பால விதவைகளின் கஷ்டங்களைப் பார்த்து உங்களுக்

கேன் இரக்கம் உண்டாகிறதில்லை? நேற்று முந்தியநாள் வரைக்கும் எவ்வளவோ பிரியத்துடன் வளர்த்துப் புருஷன் இறந்து போனானென்ற படுவார்த்தையைக் கேட்டவுடன் அப்பெண்ணின் சகல ஆபரணங்களையும் களைந்துவிட்டு உருவத்தைமாற்றி மூக்காடிட்டு உங்கள் வயிற்றிற் பிறந்த பெண்பிள்ளைகளை மூலையில் குந்தவைக்க உங்களுக்கெப்படி மனம் ஒவ்வுகின்றது?

ஒரே கர்ப்பத்திற் பிறந்த உடன்பிறந்தாரும் தம்மில்லம்புகுந்த மருமகளும் இரவு பகல் அழுது கொண்டு ஆயுள் முடியும் வரையும் தாம் விதவையான துயரத்தை அநுபவித்துக் கொண்டிருக்கும் போது, அண்ணன் தம்பிகளும், அத்தையும் மாமனும், மைத்துனன் மைத்துனியும், இரக்கமற்று எப்படிப் பார்த்து சகிக்கிறார்கள்? இவர்களுடைய மனம் கல்லால் செய்யப்பட்டிருக்கிறதா? ஓ! ஜனங்களே! நம்தேசத்து விதவைகள் படும் கஷ்டங்களைப் பார்த்து பரதேசத்தார் இருதயம் நீராயுருகிப் பரிதவித்துக் கொண்டு இத்தேசத்தை நல்நிலைமைக்குக் கொண்டு வரவேணுமென்று வேண்டிய முயற்சிகள் செய்து கொண்டிருக்க நீங்கள் மட்டும் விசாரமற்றிருக்கின்றீர்களே! இரக்கமுண்டாகாமல் விதவைகள்மீது உங்களுக்கு விரோதமும் பிறக்கிறதே! இளம் கைம்பெண்களின் சௌகரியத்துக்குரிய நியாயமான மறுவிவாகக் கதவை மூடிவிட்டதால் அவர்கள் காமசாந்தியின் பொருட்டுத் தப்புவழிகளில் இறங்குவதாலுண்டாகும் அவமானத்தையாவது நீங்கள் ஆலோசித்துப்பார்க்க வேண்டாமா? காமத்தைச் சாந்தி செய்து கொள்ள நல்வழி காணாமல் விபசாரத்தில் இறங்கி உங்களுக்கே அனர்த்தங்களை உண்டாக்கிவைப்பது உங்களுக்குத் தெரியாமலிருக்கிறதா? விபசாரமே அநேக

கொலைகளுக்கு மூலகாரணமென்பது விவேகிகளுக்குத் தெரியாத விஷயமல்லவே! தம்முடைய வீட்டில் எவராவது விபசாரம் செய்கிறார்களென்ற அநுமானம் உண்டானாலும், தங்கள் ஸ்திரீகளையும் திருட்டுப் புருஷனையும் கொன்று தாமும் துரைத்தனத்தாரின், கடின சிக்ஷைக்குட்பட்டுத் தங்கள் பிராணனையும் இழந்து விடுகிறார்களென்பது உங்களுக்குத் தெரியாத விஷயமல்லவே! விபசாரம் வெளிப்பட்டதாகில் அவமானத்தைப் பொறுக்கமாட்டாமல் ரோஷத்தால் குளங்களிலும், நதிகளிலும், கிணறுகளிலும் அநேக விதவைகள் விழுந்து தங்கள் உயிரை விட்டுவிடுவது உங்களுக்குத் தெரியாத காரியமா? இவைகளையெல்லாம் ஆலோசித்துப் பார்த்தால், நியாயமாயும் சாஸ்திர சம்மதமாயுமிருக்கும், புனர் விவாகத்தை நீங்கள் செய்து வைக்காத காரணத்தால் விபசாரத்துக்கும் கொலைகளுக்கும் நீங்களே காரணமாயிருக்கிறீர்களென்று உங்களுடையபுத்திக்கு எட்டவில்லையா? புருஷனுடைய சொத்து முழுதுமடைந்த விதவைகள் வெகுசீக்கிரம் கெட்டுப்போய், கள்ளப் புருஷர்களுக்கு இழந்துவிட்டு, தம்மின பருவம் சென்றபின், சோற்றுக்கும் துணிக்கும் வழியில்லாமல், காய்கறிகள் விற்றோ, சாப்பாட்டுக் கடைகள் வைத்தோ, செய்யத்தகாத இழிவான காரியங்களைச் செய்தோ ஜீவிப்பது உங்களுக்குத் தெரியாமலிருக்கிறதா? தம்கையில் சொத்தில்லாத பாலிய விதவைகள் தான் பிறந்த வீட்டிலோ அல்லது மாமியார் வீட்டிலோ இருந்து வீட்டுக்கு வாங்கின உப்பு முதலான பதார்த்தங்களைத் தம் கள்ளப் புருஷர்களுடைய வீட்டுக்கனுப்பிக்கொண்டும், சமயம் வாய்த்தபோது வெள்ளிப் பாத்திரங்களையும் நகைகளையும் திருடி ரகசியமாய்

தம் கள்ளப் புருஷர்களுக்குக் கொடுத்தும், ஒரு வேளை களவு வெளிப்பட்டால் வீட்டு எஜமானனே களவை வெளிப்படுத்தாமலும், அப்படிச் செய்வதால் தனக்கே அவமானம் உண்டாகுமென்று வாயை மூடிக்கொண்டு களவைமறைத்துவிடும் நிலைமை படைக்கிறார்களென்று உங்களுக்குத் தெரியாமலிருக்கிறதா? (களவு போவதை விட தனநஷ்டம்பெரிதல்லவாகையால் இவ்விஷயத்தைப் பற்றி விஸ்தரித்துச் சொல்வது அனாவசியமாகும்.)

சில விதவைகள் வீட்டிலுள்ள நிர்ப்பந்தங்களுக்கு கட்டுப்பட்டிருக்க இசையாதவர்களாய்க் காமப்பைத்தியத்தால் தங்களுடைய பிரியமான பெற்றோர்களையும் உடன்பிறந்தாரையும் விட்டுவிட்டு எந்த இராவிலேயோ தம் கையிற்கிடைத்த சொத்தை எடுத்துக்கொண்டு, எந்த ஜாதியானையோ கட்டிக்கொண்டு வெளிப்பட்டுப் போய்விடுகிறார்களே! என்றைக்காவது களவுபட்டால் தமவந்தர்களான பெற்றோர்களாவது, பந்துக்களாவது, உலக அபவாதத்துக்குப் பயந்து தம் விதவைப் பெண்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டு, கோவில் குளங்களுக்குப் போயிருந்தாள், பந்துக்கள் வீட்டுக்குப் போயிருந்தாள் என்று சொல்லிக்கொண்டு பழையபடியும் வீட்டில் வைத்து கள்ளப் புருஷனையும் சமாதானப்படுத்தி விபசாரத்தை மறைத்து வைக்கிறவர்களும் இருக்கிறார்களல்லவா?

உங்கள் புத்திரிகளாகிய பாவிய விதவைகளைப்பற்றி நீங்கள் படும் கஷ்டங்கள் உங்கள் மனதுக்கே தெரியும். அவர்கள் கெட்டவழியிற் செல்லாதிருக்கும்படி நீங்கள் படும் விசனமோ வேறு. அவர்களுடைய துர்நடத்தையால் ஏதாவது கெடுதி சம்பவித்தால் அதைப்போக்கிக் கொள்வதற்கு ஏற்படும் துயரம் மற்றொன்று. விதவைகள் செய்

யும் பரபுருஷனுடைய சம்போகத்தால் என்றைக்காவது கர்ப்பம் ஏற்பட்டுவிடும். விதவைகளின் கர்ப்பத்தை மறைத்து வைத்தலும் கஷ்டம் வெளிப்படுத்தினாலும் கஷ்டமுண்டாகும். இக்கர்ப்பம் பிறருக்குத் தெரிந்து போமென்ற பயத்தால் ரகஸ்யமாய்க் கள்ளப் புருஷன் கொடுத்த மருந்துகளைச்சாப்பிட்டுக்கர்ப்பத்தை அழித்து விடச்செய்து கொள்கிறார்களல்லவா? சிற்சிலசமயங்களில் யாதொன்றுமறியாத பெற்றோர்களும் இந்தப் பாதகத்துக்கு உடந்தையாக வேண்டியதாயிருக்குமல்லவா? கர்ப்பத்தை அழியக் கொடுத்த மருந்தால் கர்ப்பமழியாமல் விதவைப் பெண்ணையும் ஒருக்கால் கொன்றுவிடுமல்லவா?. கொடுத்த மருந்தால் ஏதுவும் பலிக்காமல் கர்ப்பம் பெருகிச் சிசுபிறக்கும் பக்ஷத்தில் பெற்றோர்கள் துக்கப் படுகிறார்களல்லவா? இந்த அபவாதத்தை நிவர்த்தி செய்துகொள்வதற்கு என்ன செய்வார்கள்? அச்சமயம் சிசுவைக் கொன்றுவிடுவதைவிட வேறுவழி தோன்றாது. தன் பெண்வயிற்றிற் பிறந்த சிசுவாகையால் அதன் முகத்தைப் பார்த்துத் தம்கையால் கொல்வதற்கு மனம் துணியாமல் எக்காரியமும் செய்யத் தோன்றாமல் ஆயிரம் தேளும் பூரானும் கொட்டினதைப் போல மனதில் வாதனைபட்டுக் கொண்டு தன் குலத்தாருக்கும், பந்துக்களுக்கும், அயலாருக்கும் பயந்து பெற்றதாயாகினும் அச்சிசுவைக்கொல்லும் பாவத்துக்கு ஆளாக வேண்டியதாயிருக்கிறதல்லவா? ஐயோ இது எவ்வளவு பாபச்செயல்! இது வரையில் எத்தனை லட்சம் ஆண் பெண் சிசுக்கள் கொல்லப் பட்டிருக்கிறார்கள்! இன்னும் எத்தனை லட்சம் சிசுக்களை கொல்லப் போகிறீர்கள்! கொன்று எறிந்து விட்ட இளம் சிசுக்களின் சுந்தரமான முகத்தைப் பார்த்துக் கொடூரமான

பாவிகளுக்கும் இரக்கம் பிறக்கிறதென்றால் உங்களுக்கேன் இரக்கமுண்டாகிறதில்லை? உங்கள் இருதயத்தைக் கடவுள் இரும்பாலும் கல்லாலும் செய்தாரா? தம் பெண்மக்கள் குழந்தைகள் பெற்றவுடன் கொண்டாடி, பேரன் பேத்திகளை வளர்க்க வேண்டியதாய் மாறும் கர்ப்பத்தை அழிக்கவும் சிசுக்கொலை செய்யவும் உடன்படும்படிச் செய்தது, நீங்கள் வெகுகாலமாயனுஷ்டித்து வரும் துராசாரத்தினாலல்லவா? இப்போதாவது உங்கள் மனதில்படுகிறதா? பார்த்துப்பார்த்துச் சிசுவைக் கொலைசெய்யத் துணியாதவர்கள் அச்சிசுக்களைப் பறையர், சக்கிலியருக்குக் கொடுத்தால், உங்கள் கண் காணும்படியாய் அக்குழந்தைகள் கக்கூஸ் வாரிக்கொண்டும், சாக்கடைகளைச் சுத்தம் பண்ணிக்கொண்டும் இன்னும் அநேக ஈனத்தொழில்கள் செய்வதைப்பார்க்க உங்களுக்கு மனம் துணியுமா? பெண் சிசுக்களை தாசிவேசிகளுக்குக்கொடுத்து விட்டால், அக்கன்னிகைகள் எல்லாரோடும் விபசாரம் செய்து கொண்டிருப்பதை நீங்கள் பார்க்கும்போது உங்களுக்கு ஆநந்தமாயிருக்குமா? விபசாரம் செய்பவள் உலகத்தோரால் நிந்திக்கப்பட்டு நரியின் ஜன்மத்தை யடைந்து பாவரோகங்களால் பீடிக்கப் படுவாளென்று சாஸ்திரங்கள் செல்லுகின்றனவே! இப்பேர்ப்பட்ட கஷ்டத்துக்கு மறு ஜென்மத்திலும் உங்கள் பெண்களை ஆளாக்குகிறீர்களே! இது எவ்வளவு மகத்தான பாவம்! இதுவரையில் சொல்லிய கொடிய பாவச்செயல்கள் உங்களுக்குப் புண்ணிய காரியங்களாகவும், புனர் விவாகம் செய்து வைப்பது மட்டும் உங்கள் இருதயத்தில் பாவகாரியமாய்த் தோன்றுமாகில், இவை யெல்லாம் நீங்கள் மறு கல்யாணத்தை மறுத்ததால் பரலோகத்துக்குச் செல்லும்போது அங்கு அநுபவிக்க கொண்டுபோகும் கொடு-

மான பாவமூட்டைகள் ஆகுமாதலால், நீங்கள் இந்தத்தீய வழக்கத்தை ஒழித்து விட்டு, உங்கள் விதவைப் பெண்களின் மறு கல்யாணத்தைச்செய்து வைப்பீர்களென்று நம்புகின்றேன்.

இதுவரையிலும் சொன்னபடி இளம் கைம்பெண்களில் துஷ்டச் செயல்களற்ற பல புண்ணியவதிகளும் இருக்கிறார்கள். அவர்கள் நிலைமையைப்பற்றி ஆலோசித்துப் பார்த்தால் சுகமற்றதும் விசனத்தோடும் கூடிய பிழைப்பாயே இருக்குமென்பதிற்சந்தேகமிராது. அவர்களது பிரியத்திற்கு முக்கிய பாத்திரனாயிருந்த உயிர்நாயகன் காலஞ்சென்றபின் அவர்களிவ்வுலகத்தில் சுகமடைய வேறு ஆதரவு கிடையாது. புருஷனோடு கூடியிருந்த காலத்தில் அவரது வீடு பூலோக சுவர்க்கம் போலிருக்கும். புருஷன் போனபின் அவ்வில்லம் காடாய்த் தோற்றும். இவ்வுலகத்தில் ஒருவரொருவருடைய சகாயத்தாலும் பந்தத்தாலும் சுகமுண்டாகுமே தவிர, பிரியமான பந்தமற்றுத் தனிப்பட்டவர்களுக்கு இலௌகிக சுகமென்பது கிடையாது. இப்படிப் பரஸ்பர பந்தத்துக்கும் பிரஜா அபிவிர்த்தி உண்டாவதற்கும் சுகசந்தோஷங்களுக்கும் நியாயமான மார்க்கம் விவாக சம்மந்தமேயாகும். விவாக சம்மந்தத்தால்தான், மனைவிகள், புருஷர்கள், தாய் தந்தைகள், அத்தைகள், மாமன்கள், மைத்துனர்கள், மைத்துனிகள், அண்ணன் தம்பிமார்கள், தமக்கை தங்கைகள், குமாரன் குமாரத்திகள், முதலிய சுற்றத்துக்கேற்ற பந்துவர்க்கங்கள் ஏற்படும். விவாக பந்தத்தால்தான் ஸ்திரீ புருஷர்கள் ஒரே உடலுடையவர்களாகி, ஒருவரோடொருவருக்குள் இச்சையுண்டாகி, ஒருவரோடொருவருடைய சுகத்தை விரும்-

பிக்கொண்டு ஒருவருக் கொருவர் உசாத்துணையாகி நோயற்ற நிலையிலும், வியாதியோடு கூடிய சமயத்திலும், சுகமான காலத்தும், அயருற்ற காலத்தும், ஐசுவரியம் வந்தகாலத்தும், தரித்திரம் வாய்ந்த காலத்தும், எக் காலத்தும் பிரியாதவர்களாய்ச் சுகப்படுவார்கள். விவாக பந்தம் ஏற்படா விட்டால் ஸ்திரீ புருஷர்களுக்குள் ஒற் றுமையும் பிரியமும் ஏற்படாமல், சிசுவின் போஷணை யைப்பார்ப்பவரில்லாமல் குழந்தைகளின் படிப்புக்குறைவு பட்டு, காளடைவில் மானிடர் மிருகாதிகள் போல் ஆகி விடுவார்கள். முக்தி யிச்சையற்று தனித்திருக்கும்படி ஏற்பட்டால் சரீரத்துக்கும் மனதுக்கும் போதுமான வேலையில்லாமல் பாவ எண்ணங்களுண்டாகிப் பாவ காரி யங்களில் இறங்கிவிடுவார்கள். புருஷன் ஒருவன் மட்டு மிருந்து மற்றவை எவை இல்லாவிட்டாலும் குறைவு தோன்றாது. எல்லாமிருந்தும் புருஷன் ஒருவன் மட்டும் இல்லாவிட்டால் உலகத்திலுள்ள யாவும் குறைவாகவே தோன்றும். புருஷனொருவனிருந்தால் பாரியாளின் மானத்தைக் காப்பாற்றுவான், குடும்பத்தைக் காப்பாற் றுவான், கௌரவம் உண்டாகச் செய்வான். எது இல்லா விட்டாலும் பதியோடும், குழந்தைகளோடும் கூடியிருப் பதே ஒரு ஸ்திரீக்கு எப்போதும் சந்தோஷகரமாக விருக்கும். பதியில்லாவிட்டால் ஸ்திரீ தன்னை ஒருவன் அவமதித்தால் யாருடன் சொல்லித் தன் துயரத்தை யாற்றிக்கொள்வாள்? எது செய்வதென்று சந்தேகம் தோன்றினால் மனதார ஆலோசனை யார் சொல்வார்? தன்னழகையும் ஞானச்செல்வத்தையும் பார்த்துப் புகழ் வார் யார்? பதி இறந்துபோன நாள் முதல் எல்லாச்சுகங் களுக்கு மாதாரமாயிருக்கும் இவ்வுலகம் எல்லாத்துயா மும் நிறைந்ததாகிப் பெரும் சுமையாய்க்காணும். குங்கு

மப்பொட்டழகு மாறிப் பாழ் முகமாய்விடும். தங்கக் கைகாப்புகள் மாறி சாகிப்பட்டையாய் விடும். கழுத்தில் தரித்திருந்த முத்துமாலை இடுப்பில் தரித்த தங்க ஒட்டி யாணம் இருந்த இடமும் தெரியாமற் போய்விடும். பட்டும் சரிகையும் கலந்து தரித்த புடவைகள் முரட்டுத் துணிகளாய் விடும். கட்டிலும் மிருதுவான மெத்தை களும் கட்டாந்தரையும் ஓலைப்பாய்களாய்விடும். பாலிய முதல் வாசனைத் தைலங்கள் தடவி வளர்த்து தினந் தோறும் சிவிப் புஷ்பங்களைச் சூட்டிக்கொண்டு உயிருக்கு சமானமாய்ப்பார்த்து வந்த கூந்தல்கள் பேன்களெல்லாம் வாசம் செய்யும் நாராகிவிடும். சிலர் நாவிதனின் கூர்மையான கத்திக்குக் கூந்தலை ஒப்புவித்துவிடுகிறார்கள். ஐயோ பாவ ஆசாரமே! இப்படிச் செய்வதைவிட ஒரே கடவையாய்த் தலையை வெட்டி விடுவது உத்தமமாய்த் தோன்றுகிறது. மூன்று பொழுதும் வயிறாரச் சுகபோஜனம் செய்தவளைப் பிராணன் போகும்படி ஒருபொழுது அரை வயிறு சுகமற்ற போஜனம் கொடுத்து வயிறைச் சுடுதல் எவ்வளவு பரிதாபகரமானது. அந்தப் பாலவிதவைப் பெண்களுக்குத் தாம் முன் தரித்திருந்த ஆபரணங் களையோ உடுத்தியிருந்த வஸ்திரங்களையோ படுத்திருந்த கட்டில்களையோ பார்த்த அளவில் அவர்கள் மனது தீப் பற்றித் துக்கமானது கொதித்துக் கொதித்துப் போ காதா? தன்வயது சுமங்கிலிகள் ஆபரணங்களைப் பூண் பதையும், புது வஸ்திரங்களை அணிவதையும் பார்த்தால் தனது பிழைப்பு எரிந்து போய்விட்டதல்லவா வென்று மனதானது குபீரென்று எரிந்து கொண்டு போகாதா? தமக்கு சிநேகமாயிருந்தபேர் சுபகாரியங்களுக்கும் சுபங் களுக்கும் அழைக்கப்படவும் விருந்துகள் சாப்பிடச் சென்றாலும் அப்பேர்ப்பட்ட சேர்ன்மை நாம் செய்யாம

லல்லோபோய்விட்டோமென்று நினைத்து தங்கால்துக்கத்தால் பிளவுபட்டுப் போகாதா? தன்வயது சமானர் குழந்தைகள் பெற்றுக்கொண்டும் கணவனோடு இல்லறம்செய்துகொண்டுமிருப்பதைப் பார்த்தபோதும் அவர்களுடையும் சுகாதிகள் நினைவுக்கு வந்தபோதும் வயிறு வெடித்துப்போகாதா? புருஷனை இழந்த பெண்பிள்ளைகள் எவ்வளவு கொஞ்ச வயதுள்ளவர்களானாலும் அயல் வீடுகளில் விவாகாதி உற்சவங்கள் நடக்கும்போது அங்குப் போய் வேடிக்கைகள் பார்ப்பதற்குக்கூட அவர்கள் கோற்கவில்லையல்லவா? அயலார் வீட்டளவும் போவானேன்? தன் வீட்டில் சுபகாரியங்கள் நடந்தாலும் நாலுபேருடன் கலந்து சந்தோஷமாய்த் தலை நிமிர்ந்து திரிவதற்கும் கூடாமல் எவர் கண்ணிலும் படாமல் தெய்வமிப்படிச்செய்ததல்லவாவென்று அழுதுகொண்டு அந்த வீட்டின் எம்மூலையிலேயோ ஒதுங்கி விழுந்து கிடக்க வேண்டுமல்லவா? ஆயிரம் சொற்கள் சொல்லுவானேன். உலகத்தில் பண்டிகைகள் சம்பவிக்கிற காலத்தில் எல்லாரும் சந்தோஷங் கொண்டாடும் நாளெல்லாம் அவர்கள் விசனமநுபவிக்கும் நாள்களாகுமல்லவா? பெரியோர்களாகிய தாய்தகப்பன்மார்கள் சயன அறையில் படுத்து சுகம் அநுபவிக்கும்போது, ஒரிரவுசுகத்தையேனும் அநுபவமின்றியே விதவை நிலையடைந்த பால்ய விதவைகள் படும் துயரம் எவ்வளவென்று சொல்வதற்கு எவர்களாற்றான் முடியும். புருஷனை இழந்த குமாரத்தி, இரவுகளில் கட்டாந்தரையில் பாயின்மீது ஒண்டியாய்ப் படுத்துத் தன் துர்தசையை நினைத்துக்கொண்டு விசனப்பட்டுக் கொண்டிருக்கையில், தாய்மார்களும், உடன்பிறந்த மூத்தோரும், இளையோரும், உடன் பிறந்தார் சம்சாரங்களும், அத்தைகள் முதலானவர்கள் கட்டிலின்

மேல் மெத்தையில் படுத்து சுகமடைவதைவிட மரணமடைந்து விடுவதே யோக்கியதை யென உங்களுக்குத் தோன்றவில்லையா? இவ்வித கஷ்டங்களுக்குட் பட்டிருக்கும் உங்கள் விதவைப்பெண்களை ஆதரித்து சாஸ்திர சம்மதமாக விருக்கும் மறுவிவாகம் செய்து வைத்து முன்னிறந்துபோன கணவன் துயரத்தைமாற்றுவதற்கு புத்தியின்றி, இரக்கமற்று, கொடூரப் பிசாசமாகிய ஆசாரத்துக்கு அடிமைப்பட்டு, அவர்களை ஆயுள் பரியந்தம், தீராத துயரத்துக்கு இரையாக்குதல், மகத்தான பாவமல்லவா? இதற்குப்பயன் பயங்கரமான யமலோகமநுபவிப்பதைவிட வேறு எது கிடைக்கத்தக்கது.

ஆகையால் சகோதர சகோதரிகளே! நீங்கள் இந்த அஞ்ஞானநித்திரையிலிருந்து எழுந்து உங்களுக்கு பகவான் கொடுத்திருக்கும் ஞானமென்ற தீபத்தை ஏற்றி நன்றாய்க்கண்களை விழித்துப் பார்த்து

"மாரிமலை முழைஞ்சில் மன்னிக்கிடந்துறங்கும்
சீரியசிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரிமயிர் பொங்கவெப் பாடும் பேர்ந்துதறி
மூரிநிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு
போதருமாப்போலே பூவைப்பூவண்ணாவுன்
கோயில் நின்றிங்ஙனே போந்தருளி கோப்புடைய
சீரியசிங் காசனத்திருந்து யாம்வந்த
காரிய மாராய்ந்தருளேலோ ரெம்பாவாய்."

என்று பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளையாகிய ஆண்டாளருளியபடி நம் பெருமானைத் தியானித்து மாரிகால முழுதும் குகையில் தூங்கிக் கடும்பசியால் நித்திரையிலிருந்து எழுந்து வந்த சிங்கமானது யானை முதலாகிய பெரிய மிருகாதிகளின் மேற்பாய்ந்து தன்

ஆகாரத்தைக் கிரகிப்பதுபோல் மேற்சொன்ன இந்த ஆசாரப் பிசாசு எங்கு எதிர்ப்பட்டாலும், நன்றாய்ப் பிடித்து அதன் தலையை மொட்டையடித்து, உங்கள் பாதத்தால் நசுக்கி, அதன் உயிரை இரைகொண்டு, பாதாளலோக மடையும்படிச் செய்து, சர்வேசுவரனது சிம்மாசனத்தை அவரதே யாக்கி, அவர் மானிடரனைவர்க்கும் கொடுத்த சுகத்தை உங்கள் விதவைகளும் அநுபவிக்கும்படி சாஸ்திரசம்மதமான புநர்விவாகத்தை நீங்கள் செய்து வைப்பீர்களாகில், நீங்கள் ஈசுவரனது திருவடியடைந்து, நித்தியானந்தத்தை அநுபவிக்கத் தகுதி யுள்ளவர்களாவீர்களென்று உலகமனைத்தும் சொல்லும்; அப்போது உலகத்தார் உங்களை மதிப்பார்கள்.

இரண்டாவது பாகம்.

அறிவிற்சிறந்த சகோதரர்களே :—

இதுவரையில் நான் சொல்லிவந்த விஷயங்களினால், இரக்கமும், தயையும் வாய்ந்த, தர்ம சொரூபியாகிய சர்வேசுரன் படைத்த சமஸ்தஜீவகோடி இராசிகளும், எக்காலத்தும் சுகத்தை அநுபவிப்பதே அவர் இச்சை என்றும், இதற்கு விரோதமாய்ப்போதிக்கும் சாஸ்திரங்கள், பிரமாணங்கள் ஆகமாட்டா தென்றும் சுகத்தை அநுபவிப்பதின் பொருட்டு, ஆகாரம், நித்திரை, போகம் என்கிற இயற்கையாகிற இச்சையை ஸ்திரீ, புருஷ பேதமன்னியில் சகல பிராணிகளுக்கும் ஈசுவரன் கொடுத்திருப்பதால் ஆகாரத்தை அடைவதற்கும் நித்திரை போவதற்கும் வசதியான சுக இல்லத்தை அடைவதற்கும், வேண்டிய திரவ்வியத்தை தீய வியாபாரங்களைச் செய்யாது நல்வழியால் தேடுவது எப்படி அவசியமாகுமோ, அப்படியே போக இச்சையைச்சாந்திசெய்து கொள்வதற்கும், விபசாரவழியிலிறங்காமல் விவாகம் செய்துகொண்டு அவ்விச்சையை அடைய வேண்டியது, அவர் கட்டளை என்றும், விபசாரம் செய்வது கொடியபாபமென்றும், அப்படிச் செய்பவர்கள் உலகத்தோரால் நிந்திக்கப்பட்டு நரியின் ஜன்மமடைந்து, தீராத பாவரோகத்தால் பிடிக்கப்படுவாரென்றும் சாஸ்திரங்கள் விதித்திருப்பதால், புருஷனை இழந்துவிட்ட விதவைகளுக்கு நியாயமான புனர்விவாகம் செய்து வைக்காததால் அவர்கள் தீய வழியிற் செல்லுவதினால், அவர்களை

ஈரியின் ஜன்மத்துக்கு இரக்கிய பவத்துக்கும் புருஷர்களாகிய நாமே காரணமாகிறோமென்றும், மனைவி இழந்துபோயும் புருஷனுக்குப் போக இச்சை போகாமலிருப்பதால் அப்புருஷனுக்கு மறுவிவாகம் செய்து வைப்பது ஈசுவரனது திருவுள்ளக் கருத்தென்று நாம் யூகித்து புருஷர்களாகிய நாம் மறுவிவாகம் செய்து கொள்வதுபோல், புருஷன் இறந்த மாத்திரத்தில் ஸ்திரீகளுக்குள்ள போக இச்சையும் மாறாமல் இருப்பதை முன்னிட்டு, விதவை ஸ்திரீகளுக்கும் விவாகம்செய்து வைப்பதும் பகவானின் கட்டளை என்று கிரகிக்க வேணுமாயும், நான் தெரிவித்துக்கொண்ட விஷயங்களை நீங்கள் நன்றாய் அறிந்து, இனி சொல்லப் போகும் விஷயங்களை, தயைபோடும் நியாயத்தோடும் கூடிய மனதுடன் அங்கீகாரம் செய்யவேணுமாய்த் தாழ்மையாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

விதவையாய் விட்ட ஸ்திரீகளுக்கு முதலில் புனர்விவாகத்தை விதித்தும், அவ்விதிப்படி மறுவிவாகம் செய்து கொள்ளாதவர்கள், பிரம்மசரிய விரதத்தை அனுஷ்டிக்க வேணுமென்றும், இவ்விரதம் அனுஷ்டிக்க முடியாதென்று தோன்றினால், சககமனம் அதாவது புருஷனோடு உடன்கட்டை ஏறவேணுமென்று சாஸ்திரங்கள் விதித்திருப்பதால் உலகத்தில் விபசார பாவத்தை போக்குவதற்காகக் கபிலமஹரிஷி, பிரம்மசரிய விரதம் இன்னதென்பதைச் சொல்லுகிறார் :—

புருஷனை இழந்த விதவைகள் மோர், பால், தயிர், புசிக்கலாகாது. சந்தனம் மூக்கில் தாக்கலாகாது. நல்ல வஸ்திரங்களை உடுக்கக்கூடாது. அலங்காரம் செய்து கொள்ளலாகாது. பாட்டு கேட்கக்கூடாது. தாம்பூலம்

போட்டுக் கொள்ளக்கூடாது. புஷ்பங்களுக்குச் சமீபம் போகலாகாது. கட்டில் மெத்தைகள்மேல் படுக்கலாகாது. எண்ணெய் தேய்த்துக்கொள்ளலாகாது. வெந்நீர் உதவாது. வண்டி, பல்லக்குகளில் ஏறலாகாது. ஒருவர் மீது தயை பாராட்டலாகாது. புண்ணியகார்யங்களையும், அபகார்யங்களையும் செய்யலாகாது. இவைகளெவற்றைச் செய்தாலும், பெற்றோர்களும், உறவினரும் தண்டிக்க வேண்டும். உப்பு, புளிப்பு, தித்திப்புப் பதார்த்தங்கள் உதவாது. பருப்பு சாப்பிடக்கூடாது. உவர்ப்பு, கசப்பு, காரபதார்த்தத்தை மட்டும் சாப்பிடலாம். அறுபது வயது அடைகிற வரையில், ஒருபொழுது, அதுவும் பாதி வயிறு, ஆகாரந்தான் புசிக்கவேண்டும்.

రండాపాకం సదా త్యాజ్యం ప్రవదంతి మనీషిణః॥

ரண்டாபாகம் ஸதா த்யாஜ்யம் ப்ரவதந்தி மநீஷிண: ||

என்று சொல்லியபடி விதவைகள் செய்த சமையலை எவரும் சாப்பிடலாகாதென்றும், இப்பேர்ப்பட்ட முடியாத, உப்பில்லாத கொடிய பத்தியமிலமையை, மகரிஷி விதித்திருக்கிறார்.

இம்மகரிஷி சொன்ன ஸ்மிருதிகளின் கருத்தை ஆராய்ந்து பார்த்தால் அறுபது வயது வருமட்டும் உப்பில்லாத பத்தியமிருந்து அதுவும் அரைவயிறு சாப்பிட்டிருக்க எவரால்தான்முடியும்? புருஷனை இழந்து கொண்டவர்கள், துயரத்தைப் பொறுக்க முடியாமல் முந்திய ஜென்மத்தில் செய்த பாவத்தாலல்லவா தங்களுக் கிப்பேர்ப்பட்ட துரதிஷ்டம் வாய்ந்ததென்று கருதி, காசி, ராமேஸ்வரம், ஸ்ரீரெங்கம் முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் போய் பகவானைத் தரிசித்து

நல்ல ஜன்மத்தை அடையவேண்டுமென்று நினைப்போர் வண்டியில் யாத்திரை செய்யாமல் நடந்துபோக இளம் கைம்பெண்களால் முடியுமா? தன் ஆத்ம நல்வழிப் படுவதற்கு ஈசுவர கைங்கர்யம் செய்யக்கருதி துளசி, வில்வம், புஷ்பம், முதலான மாலைகள் கட்டிக் கோயில்களுக்குக் கொடுத்துப்புண்ணியம் சம்பாதிப்போமென்று நினைப்போர் புஷ்பங்களை அணுகாமல், மாலைகள் கட்ட முடியுமா? அப்புஷ்பங்களின் வாசனை இவர்கள் மூக்கில் ஏறாமலிருக்குமா? உப்பு. பருப்பு, இனிப்பு, இல்லாமல் அன்னமல்லது கஞ்சியைக் குடித்து எக்காலத்தும் ஜீவித்திருக்க எவராலாகிலும் முடியுமா? இந்த அநுஷ்டானமானது விதவைகளானவுடன் விபசார வழியிலிறங்காமலிருக்கும்படி. சாஸ்திரங்களில் சொல்லியவண்ணம் மறுவிவாகம் செய்துகொள்ளும் காலபர்யந்தமட்டும் சரீரத்தை ஒடுக்கி விரதத்தைக் காப்பாற்ற வேணுமென்று நீங்கள் தெரிந்துகொள்ளத்தக்கது. அவர் கருத்தில், விதவைகள் எக்காலத்தும் விதவை நிலையில் தானிருக்கவேண்டுமென்று நீங்கள்சொல்வீர்களானால், பகவான் எல்லோருக்கும் அருளியிருக்கும் ஆகாரம், நித்திரை, போகமென்கிற சுபாவ தர்மத்துக்கு மாறுட்டமுண்டாக மாட்டாதா? ஆகாரமும் நித்திரையும் ஒருவருக் கிருக்குங் காலமுழுதும் போக இச்சைமட்டும் போய்விடுமா!! ஆகையால், அவர் விதித்தது புனர் விவாகம் செய்து கொள்ளாமல் விதவை நிலையிலிருக்கும் காலபர்யந்தம் தானென்று எவரும் நன்றாய் அறியத்தக்கது.

சத்தியத்தை நாடும் சகோதரர்களே!

உலகத்திற் பெண்ணாய்ப் பிறந்து புருஷனை இழந்து ஆயுள் முழுவதும் மகரிஷி விதித்தபடி வருந்திக்கொண்

டிருப்பதைவிட, மரணமடைந்து விடுவது சுகமாயிருக்குமல்லவா? ஆகையாலல்லவா சிலராவது பூர்வ காலத்தில் உடன்கட்டை ஏறினதாகச் சொல்லப்படுகிறது. உடன்கட்டை ஏறுதல் மகா கொடிய செயலல்லவோ வென்று கருணையோடும் நன்மையாளும் துரைத்தனத்தார் இக்கொடிய வழக்கத்தை நிறுத்தி, சாஸ்திர சம்மதமான புனர்விவாகத்தை, வேதங்களைக் கசடறக்கற்றுணர்ந்த ஈசுவர சந்திர வித்தியாசாகர பண்டிதர் முதலானோருடைய [illegible]ப்பிரயத்தனத்தால் அங்கீகரித்தனர். எவ்வளவு கன்னெஞ்சர்களாயினும் ஒரு இளங்கைம்பெண், உடன்கட்டை ஏறும் காட்சியைக் கண்ணால் பார்க்கவுங்கூட மனம் துணிவார்களா? சகிக்க முடியுமா? நினைத்த மாத்திரத்தில் மனம் பதறுகின்றதே! நெஞ்சம் துடிக்கின்றதே! பூர்வகாலத்தும் எல்லா ஸ்திரீகளும் உடன்கட்டை ஏற மனதாரச்சம்மதித்தார்களென்று எங்கும் காணவில்லையே. பலவந்தத்தாலும் இம்சையாலும் அக்கினியில் தள்ளப் பட்டார்களென்றே அறிய வேண்டியிருக்கிறது. அக்கினிப்பிரவேசம் செய்ய மனந்துணியாத உத்தம பிராமணனுடைய பத்தினியை நோக்கியல்லவா, பகவான் மறுவிவாகம் செய்துகொள்ளும்படிக் கட்டளை இட்டாரென்று வேதம் சொல்லுகின்றது.

ஓ ஜனங்களே! நீங்கள் இக்கொடிய செய்கையை ஆதரிக்க மாட்டீர்களென்று உறுதியாய் நம்புகிறேனாகையால் நான் விஸ்தரித்துச் சொல்லுவது அநாவசியமாகும்.

இவ்வண்ணம் ஜீவகால முழுதும் விதவைகளாய் விட்ட உங்களரிய மக்களும், உடன் பிறந்தோரும், மருமக்கள்மார்களும், இது அநுஷ்டிக்க முடியாத விரத

மென்றும் இந்தக் கொடிய விருத்திலவர்களை வைப்பது இராட்சதச் செயலாகுமென்றும், உடன் கட்டை ஏறச்செய்தல் அதைவிடக் கொடியச் செயலென்றும் உங்கள் மனதிற் படுவது உண்மையானால், நீங்களேன் அவர்களுக்கு வேதசம்மதமான புனர்விவாகம் செய்துவைத்து, அவர்களை சுகித்திருக்கும்படிச் செய்யக் கூடாதென்று உங்களையான் கேட்கிறேன். புருஷர்களான நீங்கள்மட்டும் புனர்விவாகம் செய்துகொண்டு விதவை ஸ்திரீகளுக்குமட்டும் புனர் விவாகம் கூடாதென்று சொல்லும் பட்சத்தில் அக்கொடிய சொற்கள், உங்கள் பொறுமைக் குணத்தையும், கடின சித்தத்தையும் காட்டுமே யொழிய உங்கள் நற்குண நற்செய்கைகளைப் பிரதி பலிக்காது. உங்கள் வயிற்றிற் பிறந்த இளம் கைம்பெண்களுக்கே நீங்கள் இரக்கத்தையும் தயவையுங் காட்டாவிட்டால், எந்த முகத்தை வைத்துக் கொண்டு எங்கள் பாவத்தைப் போக்க வேண்டு மென்று ஈசுவரனை வேண்டிக்கொள்ளப்போகிறீர்கள்? வஞ்சநமன் வாதனைக்கும், வன்பிறவி வேதனைக்கும் நீங்கள் அஞ்சவேண்டுமென்று தான் யான்கேட்டுக் கொள்வதாகும்.

இத்யாதி காரணங்களால் விதவைகளாய் விட்ட ஸ்திரீகளுக்கு மறுவிவாகம் செய்து வைப்பது உத்தம காரிய மென்று உங்கள் அநுபவத்துக்குமே தெரியும். ஆகிலும்,

1 விதவைகளின் புனர் விவாகம் சாஸ்திரோக்தமா?

2. இந்திய வழக்கத்துக்கு முதற்காரணமேது?

3. வெகுகாலமாய் அநுஷ்டித்துவந்த இந்த ஆசாரத்தை இக்காலத்தில் மாற்றிக்கொள்வதற்கு தர்மசாஸ்திரங்கள் சம்மதிக்குமோ? என்கிற சந்தேகங்கள் எவருக்கும் உண்டாகும். இதைப்பற்றிச் சிறிது சொல்லுவோம்.

1-வது கேள்வி சாஸ்திரோக்தமா:—

விடை:—பிராமண வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாகிய அப்பய்ய தீக்ஷிதரும், Rai Bahadur வீரேசலிங்கம்பந்துலு அவர்களும் திருவிதாங்கோடு சதர் கோர்ட்டு வக்கீல் சேஷய்யங்கார் முதலிய அநேக வித்வான்களும் லோகோபகாரரான ஈசுவர சந்திர வித்தியாசாகர பண்டிதரவர்களும், விதவைகளின் புனர் விவாகம் சாஸ்திர சம்மதமான தென்றும், நான்கு யுகங்களிலும் விதவைகளின் புனர் விவாகம் நிராக்ஷேபணையாய் நடந்து வந்திருக்கிறதென்றும், தற்கால நானுஷ்டானம் கலியுகம் பிறந்தபின் தான் சிலரால் அநுஷ்டிக்கப்பட்டு வந்தாலும் ஆதிமுதலே மறுக்கப்பட்டு வருவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். வேத சுருதிகளும், ஸ்மிருதிகளும், புராணங்களும், மறுவிவாகத்தை அங்கீகரித்திருக்கின்றனவென்று மேற்சொன்னமகான்கள் கிரந்தங்கள் எழுதி யிருக்கின்றார்கள். அவர்களின் வாக்குறுதியே நமக்குப் போதுமானது. ஆகிலும் தெளிவாயிருக்கப்பட்ட சிலபிரமாணங்களை யான் சொல்லுகிறேன். எல்லாவற்றிற்கும் மேலான பிரமாணங்களென்றும் ஈசுவரனால் அருளப்பட்டதென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் வேதத்தில்— சுருதி:

శ్రుతి॥ ఉదీర్ష్వ నార్యభిజీవ లోకం గతాసు మేతముపశేష ఏహి
హస్తగ్రాభస్య దిధిషో స్తవేదం పత్యుర్జనిత్వ మభిసంబభూథ.

உதீர்ஷ்வ, நார்யபிஜீவ லோகம், கதாஸுமேதமுபசேஷ ஏஹி ஹஸ்தக்ராபஸ்ய திதிஷோஸ்தவேதம் பத்யு: ஜனித்வ
மபிஸம்பபூவ

என்று எஜுர் வேதம் தைத்திரி ஆரணியகம் ஆறாவது பிரபாடகம் 14-வது அநுவாகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. தன்கணவன் இறந்தபோது உடன்கட்டை ஏறுவதற்கு அவனுடைய மனைவி பயப்பட்டால் உடன்கட்டை ஏறச் சம்மதிக்காத அவளிடத்தில் பந்துக்கள் மேற்சொன்ன மந்திரத்தைச் சொல்லி அவளை அவ்விடத்தை விட்டு விலகும்படிச் செய்யவேண்டுமென்று விதி ஏற்பட்டிருக்கிறது

నారి ... ஓ ஸ்திரீயே!
గతాసుం ... இறந்துபோன
ఏతం ... இந்தப் பதியைப்பற்றி
ఉపశేష ... சமீபத்தில் விழுந்து கிடக்கிறாய்.
ఉదీర్ష్వ ... (பதியைவிட்டு) எழுந்திரு!
జీవలోకమభి ... ஜீவித்திருக்குமவர்களைப்பார்த்து
ఏహి ... வருவாய்!
త్వం ... நீ
హస్తగ్రాభస్య ... பாணிக்கிரஹணம் செய்துகொள்ளவும்
దిధిషో: ... இரண்டாம்தடவை விவாகம் செய்துகொள்ள இஷ்டமுள்ளவனுமான హస్తగ్రాభస్య దిధిషో: என்ற [illegible]
పత్యు: ... புருஷனுக்கு
ఏతత్ ... இப்பேர்ப்பட்ட
జనిత్వం ... பாரியாயிருக்கும் தன்மையை
అభిసంబభూవ ... அபிமுகத்தால் நன்றாய் அடைவாய்

இம்மந்திரத்தின் பொருள்: ஓ ஸ்திரீயே, உயிர்மரித்துப்

போன இந்தப்புருஷன்பேரில் ஏன் விழுந்து கிடக்கிறாய்! உயிரோடிருக்கும் மற்றவர்களைப் பார்த்து எழுந்து வருவாய். (உன்னை மறுமணம் செய்வதற்கு இஷ்டப்படும் புருஷனுக்கு நீ மனைவியாயிரு) என்று பொருள்படும் இம்மந்திரத்தை அப்பெண்ணின் கொழுந்தன் முதலானவர்கள் புருஷனை இழந்த ஸ்திரீயினிடத்தில் படித்து அவளைச்சமாதானம் செய்யவேண்டும்.

இது வெகு தீர்க்கமும் வெளிப்படையுமான முக்கிய வாக்கியம்—கவனிப்பு: இச் ச்ருதி விசேஷ விதியாயும், விதிக்குரிய இலட்சணம் பொருந்தியதாயுமிருக்கிறது - ఉదీర్ష్వ- எழுந்திரு ఏహి - வாராய். జనిత్వం అభిసంబభూవ - பத்னித்வக்கடைவாய் என்னும் ஏவல் வினைகள் அதைத் தெளிவாய்க் காட்டுகின்றன.

* புநர் விவாகத்தில் பாணிக்கிரஹணம்பண்ண இஷ்டமுள்ள பதிக்கு நீ நேர்முகமாய் பத்னியாகக் கடவாய், என்பது கட்டளை.

இதின் மேலிட்ட மந்திரத்திலும் சொல்லியிருக்கும் ச்ருதி வாக்கியமாவது

శ్రుతి: ఇయం నారీ పతిలోకం వృణానా నిపద్యత ఉపత్వా
మర్త్య ప్రేతం, ధర్మం పురాణ మనుపాలయంతీ తస్యై
ప్రజాం ద్రవిణం చేహ ధేహి॥

(ச்ருதி) இயம் நாரீ பதிலோகம் வ்ருணா நிபத்யத உபத்வா
மர்த்ய ப்ரேதம், தர்மம் புராண மனுபாலயந்தி
தஸ்யை ப்ராஜாம் த்ரவிணம் சேஹ தேஹி:

మర్త్య ... ஓ மனிதனே!
ఇయం నారీ ... இந்த ஸ்திரீ
పతిలోకం ... (இறந்துபோன)பர்த்தாவாகிய நீ அடை- [யும் லோகத்தை

వృణానా	...	கோரினவளாய்
ప్రేతం	...	பிரேதமாயிருக்கும்
త్వా	...	உன்
ఉప	...	சமீபத்தில்
నిపద్యత	...	விழுந்து கிடக்கிறாள்
పురాణం	...	பிராசீனமான பழைய
ధర్మం	...	இவ்வாசாரத்தை [றாள்
అనుపాలయంతీ	...	அடைந்திருக்கக் கோரினவளாயிருக்கி
తస్యై	...	அவளுக்கு
ప్రజాం	...	சந்தானமும்
ద్రవిణంచ	...	தனமும்
ఇహ	...	இவ்வுலகத்தில்
ధేహి	...	நன்றாயிருக்கும்படிச் செய்

இந்த மந்திரத்தின் பொருள்:- இறந்துபோன கணவனுடைய பிரேதத்தின்மேல் மனைவி விழுந்து அழும்போது பிரேதத்தைப் பார்த்து இந்த மந்திரத்தை பந்துக்கள் படிப்பார்கள். இறந்துபோனவனே, உன்னுடைய மனைவி நீ போகும் லோகத்தைத்தான் அடைய வேண்டுமென்று பிணமாய்க் கிடக்கும் உன் சமீபத்தில் விழுந்து கிடக்கிறாள். புராதனமான இந்தப் பிரபஞ்சத்தின் தருமங்களை அநுசரிக்கவேண்டுமென்ற இச்சையும் கொண்டிருப்பதால் இவளுக்கு சந்தானமும், தனமும் விருத்தியடைந்து நன்றாயிருக்கும்படி நீ அருளவேண்டும்.

ருக்வேதம்:

శ్రుతిః ఏకస్య బహ్వ్యో జాయా భవన్తి
నైకస్యై బహవః సహ పతయః॥

(சுருதி) ஏகஸ்ய பஹ்வ்யோ ஜாயா பவந்தி
நைகஸ்யை பஹவஸ்ஸஹ பதய:॥

இதின் பொருள்:—

ஒரு புருஷனுக்கு பல மனைவிகள் இருக்கலாம். ஆனால் ஏககாலத்தில் ஒரு ஸ்திரீக்கு அநேக புருஷர்கள் இருக்கலாகாதென்று சொல்லுவதால் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு பர்த்தாக்களிருக்கலாமென்று ஏற்படுகிறது.

శ్రుతి॥ సోమః ప్రథమో వివిదే గంధర్వో వివిద ఉత్తరః।
తృతీయో అగ్నిష్టే పతిః తురీయస్తే మనుష్యజాః॥

(சுருதி) ஸோம: ப்ரதமோ விவிதே! கந்தர்வோ விவித உத்தர:
த்ருதீயோ அக்நிஷ்டே பதி:! துரீயஸ்தே மனுஷ்யஜா:

இதின் பொருள்:—"உன் முதலாம் பர்த்தா சந்திரன் என்று அறி, அவனுக்குப்பின், காந்தர்வன் உனக்குப் பதியானான்; அக்னி உன் மூன்றாம் கணவன்; மநுஜன்மிகள் உனக்கு நாலாம் புருஷர்களாயிருப்பார்கள்."

இவ்வாக்கியம் எட்டாம் அஷ்டகத்தில் வருகிறது. விவாக தருணத்தில் இதை ஜபிக்கிறார்கள். இதன்படி கன்னிப்பெண்ணும் தொடர்பாய் மூன்று மனுஷ்யரல்லாத ஜீவிகளுக்கும் பிற்பாடு மனுஜன்மிகளுக்கும் பத்தினி ஆகிறாள். இதில் மநுஜன்மிகள் என்று பன்மையில் சொல்லியிருப்பது மிக விசேஷமானது. அநேக மனுஷ்ய பர்த்தாக்களுடன் நிகழும், தொடர்பான விவாகங்களுக்கு இதில் விதி அமைந்து நிற்கிறது.

శ్రుతి॥ సుమఙ్గలీస్తే నా। సుమావస్త్రే రక్షోనా। సుమాభిభిన్నం।
కరతః సుమావయః। ఫాలాంతరముత్రా। 'ఇదమేవ దేవరం'।

మర్యన్న యోషా కృణుతే సదస్థ ఆ॥

(ருக்வேதம் 8-ம் அஷ்டகம்)

(சுருதி) குஹஸ்வித்தோஷா, குஹவஸ்தோரச்வினா,
குஹாபி பித்வம்,
கரத: குஹோஷது:, கோவாம் சயுத்ரா,
விதவேவ தேவரம்.
மர்யன்ன யோஷா க்ருணுதே ஸதஸ்த ஆ,
ருக்வேதம் 8-ம் அஷ்டகம்.

பொருள்:—ஓ அசுவினி குமாரரே! இரவில் நீர் எங்கே தங்குகிறீர்? பகலில் நீர் எங்கே தாமதிக்கிறீர்? உமதிச்சைகள் திர்ப்தி அடைகிற இடமெங்கே? நீர் எங்கே வாசம் பண்ணுகிறீர்? சயனிப்புக்கு விதவை தன் இரண்டாம் கணவனை கவருகிறது போலவும் பாரி தன் பர்த்தாவைக் கருவிக்கிறது போலவும் யாகம் செய்கிற எந்தப் புரோகிதன் உம்மை யாகத்திற்கு அழைக்கிறான். இவ்வாக்யம் ரிக்வேதம் 8-வது அஷ்டகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. விதவைகள் தங்கள் இரண்டாம் கணவரோடு கூடி வாழ்வது பூர்வ காலத்தில் சாதாரண பேச்சுகளில் வழங்கி வந்ததென்று இந்த திருஷ்டாந்தத்தால் விளங்குகிறது, மனைவியானவள் தன் பர்த்தாவின் ஆலிங்கனத்தில் மகிழ்வது எப்படி அபக்கியாதியல்லவோ அப்படியே விதவையின் புநர்விவாகத்தையும் அக்காலத்தார் எண்ணி வந்தார்கள் என்பதற்கு இது அத்தாட்சியாகும்.

యా పూర్వం పతిం విత్త్వాథాన్యం విందతే పరం
పంచౌదనం చ తావజం దదాతో న వియోషతః (27)

సమానలోకో భవతి, పునర్భువాపరః పతిః
యోఽజం పంచౌదనం దక్షిణాజ్యోతిషం దదాతి (28)

అను పూర్వ వత్సాం ధేను మనడ్వాహముప బర్హిణం
వాసో హిరణ్యం దత్త్వా తే యాంతి దివముత్తమమ్ (29)

அதர்வணவேதம் 9-ம் காண்டம் 5-ம் ப்ரபாடகம்.

யாபூர்வம் பதிம் வித்வா தான்யம் விந்ததே பதிம்
பஞ்சௌதனம் சதாவஜம் ததாதோ நவியோஷத: (27)

ஸமான லோகோ பவதி, புனர்புவா பர: பதி:
யோஜம் பஞ்சௌதனம் தக்ஷிணா ஜ்யோதிஷம் ததாதி (28)

அநுபூர்வ வத்ஸாம் தேநு மனட்வாஹமுப பர்ஹிணம்,
வாஸோ ஹிரண்யம் தத்வாதே யாந்தி திவமுத்தமம் (29)

இதின் பொருள்:—முதலாவது ஒரு பர்த்தாவை விவாகம் செய்திருந்து பின்பு வேறொருவனை இரண்டாம் பர்த்தாவாக விவாகம் பண்ணிக்கொண்டு அஜபஞ்சதம் செய்தால், அந்த தம்பதிகள் இணைபிரியாமலிருப்பரென்றும் அஜபஞ்சௌ விரதத்தோடு சூரிய தட்சணை கொடுத்தால் தம்பதிகள் ஒரே லோகத்தை யடைவர்களென்றும், கன்றுடன் கூடிய பசு, காளை, கட்டில், வஸ்திரம், பொன் முதலான தானங்களைச் செய்தால், உத்தம லோகத்தை அடைவரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

குறிப்பு:—புனர் விவாகம் செய்துகொள்வதற்கு இதைவிட ஈச்வரனுடைய உறுதியான கட்டளைகள் நமக்கென்ன வேண்டும். இவ்வண்ணம் வேத சுருதிகள் புனர் விவாகத்தை விதிக்கின்றனவென்றும் விதவோ விவாகிதயைக் கைவிடாமல் பத்தினி என்று ஒப்புக்கொள்ள வேண்டுமென்று விதித்திருக்கின்றனவென்றும் தெளிவாயிருக்கின்றது.

குறிப்பு:—வேத சுருதிகள் நித்திய நிர்தோஷமான ஸ்வத:பிரமாணங்களாகும். அதாவது வேதங்கள் அநாதி, தோஷமற்றவை - அதற்கு மேற்பட்ட பிரமாணங்கள் கிடையா - ஈசுவரனது திருவாக்கே யாகையால் நிரபேக்ஷமானவையான கட்டளை. இதை ரிஷிகளாகட்டும், முனிகளாகட்டும் எவரும் மறுக்கலாகாது. மறுத்துச் சொன்னவர்கள் வாக்குச் செல்லத்தக்கதல்ல - ஏன் அப்படி சொல்லவேண்டுமென்பதற்கு பிரமாணம்.

శ్లో॥ శ్రుతి స్మృతి విరోధేతు శ్రుతిరేవ గరీయసీ
అవిరోధే సదా కార్యం స్మార్తం వైదికవత్సతా॥

(ச்லோ) ச்ருதி ஸ்ம்ருதி விரோதேது ச்ருதிரேவ கரீயஸீ
அவிரோதே ஸதாகார்யம் ஸ்மார்த்தம் வைதிகவத்ஸதா॥

சுருதிஸ்மிருதிகளுள் விரோதித்தால், சுருதியே கௌரவிக்கத்தக்கதென்றும், சுருதியை ஒத்திருந்தால், ஸ்மிருதியும் ஆதரிக்கத்தக்கதென்றும், ஜாபாலிருஷி சொன்னார்.

శ్లో॥ ధర్మం జిజ్ఞాసమానానాం-ప్రకృష్ట ప్రమాణం శ్రుతిః
ప్రకర్ష బోధకే చ శ్రుతి స్మృతి విరోధే స్మృత్యర్థో నాదరణీయః

தர்மம்ஜிக்ஞாஸமானாம் ப்ரக்ருஷ்ட ப்ரமாணம் சுருதி:
ப்ரகர்ஷ போதகே ச ச்ருதி ஸ்ம்ருதி விரோதே
ஸ்ம்ருத்யர்த்தோ அநாதரணீய:

தர்மத்தை தெரிந்துகொள்ள இச்சையுள்ளவர்களுக்கு சுருதிகளே மேலான பிரமாணங்களென்றும், சுருதிக்கு விரோதமாயிருக்கப்பட்ட ஸ்மிருதியின் பொருள் ஆதரிக்கத்தக்கதல்ல வென்றும் கல்லுகபட்டு என்கிற வியாக்கியான கர்த்தா சொன்னார். இவ்விதமாகவே மீமாம்ஸா சாஸ்திரத்திலும் ஜெய்மினி மகரிஷியாலும் எழுதப்பட்டிருக்கிறது.

ஆனால் ரிஷிகள் முதலானவர்கள் அருளிய ஸ்மிருதிகளால் பிரயோஜன மில்லையோ வென்றால் அப்படி சொல்லத்தகாது. ஏனெனில்

శ్లో॥ శ్రుతి స్మృతీ మమైవాజ్ఞే యస్తే ఉల్లంఘ్య వర్తతే
ఆజ్ఞాచ్ఛేదీ మమద్రోహీ, నమద్భక్తో నాత్రసంశయః

ச்லோகம்:
ச்ருதி ஸ்மிருதி மமைவாஜ்ஞே யஸ்தே உல்லங்க்ய வர்த்ததே
ஆஜ்ஞா சேதிமமத்ரோஹி, நமத்பக்தோ நாத்ரஸம்சய: ||

சுருதிகள், ஸ்மிருதிகள் என்னுடைய (பகவானுடைய) கட்டளையாகையாலே அவைகளை உதாசீனம் பண்ணிநடப்பவன் என்னுடைய துரோகியாய், சம்சயமற்று தண்டிக்கப் படுவானென்று பகவத்கீதை முதலான சாஸ்திரங்களில் சொல்லப்படுகிறது. ஆனால் ஸ்மிருதிகளை எப்படி அறியத்தக்கதெனில்

శ్లో॥ యదదృష్టం హి వేదేషు తద్ద్రష్టవ్యం స్మృతౌకిల
ఉభాభ్యాం యదదృష్టంతు తత్పురాణేషు పఠ్యతే॥

ச்லோகம்.
யத்த்ருஷ்டம் ஹிவேதேஷு, தத்ருஷ்டவ்யம் ஸ்ம்ருதௌகில
உபாப்யாம் யதத்ருஷ்டம்து, தத்புராணேஷு பட்யதே ||

வேதங்களில் எது காணப்படவில்லையோ அதை ஸ்மிருதிகளில் காணத்தக்கவை யென்றும் இவை இரண்டிலும் காணப்படாதவை புராணங்களில் சொல்லப்படுமென்றும் ஆபஸ்தம்ப சூத்திரகாரர் சொன்னார்.

శ్లో॥ ధర్మజిజ్ఞాసమానానాం ప్రమాణం ప్రథమం శ్రుతిః
ద్వితీయం ధర్మశాస్త్రంతు

ஸ்லோகம்.

தர்மஜிஞ்யா ஸமயாஞ்ஞும் பிரமாணம் ப்ரதம் சுருதி.
தவிதீயம் தர்மசாஸ் த்ரம் ||

தர்மங்களை நிரூபிக்கப்பட்டவர்களுக்கு முதல் பிரமாணம் வேத சுருதிகளென்றும், இரண்டாவது ஸ்ம்ருதிகளென்றும் பாரத அநுசாஸந பர்வத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

శ్లో॥ శ్రుతి స్మృతి పురాణేషు విరుద్ధేషు పరస్పరం
పూర్వం పూర్వం బలీయః

ஸ்லோகம்.

ச்ருதி ஸ்ம்ருதி புராணேஷு விருத்தேஷு பரஸ்பரம்
பூர்வம் பூர்வம் பலீயஃ.

சுருதி ஸம்ருதி பிரமாணங்களில் ஒன்றுக்கொன்று விரோதிக்கும் பட்சத்தில், புராணத்தைவிட ஸ்ம்ருதியும் ஸ்ம்ருதியைவிட சுருதிகள் வலுத்தவை யென்றும் ஆபஸ்தம்ப சூத்திரகாரர் சொன்னார்.

ஆகையால் யான்மேலே சொன்ன ஈசுவரனது திருவாக்கியங்களாகிய ஒப்புயர்வற்ற சுருதிகளே புனர்விவாக தர்மத்தை அங்கீகரித்திருக்கின்றன என்பதற்குப் போதுமான அத்தாட்சியாகுமென்று ஒவ்வொருவரும் கருதுவீர்கள். தவிர புநர்விவாகம் கூடாதென்றதெளிவான வாக்கியம் ஒன்றுகூட சுருதிகளில் கிடையாதென்று லோகோபகாரர்களான ஈசுவர சந்திர வித்தியாசாகர பண்டிதரும், ராய் பகதூர் வீரேசலிங்கம் பந்துலு முதலான மகாவித்வான்கள் எழுதியிருக்கிறார்கள்.

శ్లో॥ జ్ఞాన శక్తి బలైశ్వర్య వీర్య తేజాంస్యశేషతః
భగవచ్ఛబ్ద వాచ్యాని

ஸ்லோகம்.

ஜ்ஞான சக்தி பலைச்வர்ய வீர்ய தேஜாம்ஸ்ய சேஷத :
பகவச்சப்த வாச்யானி. என்றபடி

ஸர்வேசுவரன் பரிபூரண ஞான சொரூபியாகையால் அவர் திருவாக்கு முரண்படும்படி அவரே விதித்திராரென்றும் அவர் வாக்குக்கு எதிர் வாக்கில்லை யென்றும் நீங்களே எதிர் வாதிகளுடன் வாதம் செய்வீர்களென்று நம்புகிறேன்.

இனி ரிஷிகள் முதலானவர்களாலருளப்பட்ட ஸ்மிருதிகளைப்பற்றி ஆராய்வோம். வேதங்களில் எல்லா தர்மங்களைப்பற்றிச் சொல்லாமலிருப்பதாலும், கால பேதங்களைப்பற்றி அவ்வவ் யுகங்களுக்கு வெவ்வேறான விசேஷ தர்மங்கள் வேண்டி வருமாகையாலும், அவ்வவ் யுகங்களுக்கு விசேஷ தர்மங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

శ్లో॥ అన్యే కృతయుగే ధర్మాస్త్రేతాయాం ద్వాపరేపరే
అన్యే కలియుగే నౄణాం యుగహ్రాసానురూపతః॥

ஸ்லோகம்.

அந்யே க்ருதயுகே தர்மா' த்ரேதாயாம் த்வாபரேபரே
அந்யே கலியுகே ந்ருணாம், யுகஹ்ராஸாநுரூபத : ||

என்ற பிரஹஸ்பதி வசனப்படி யுகங்களை அநுஸரித்து கிரேதயுகத்திற்கு தர்மங்கள் வேறென்றும், திரேதைக்கு தர்மங்கள் வேறென்றும், த்வாபரத்துக்கு வேறென்றும் இந்தக் கலியுகத்துக்கு தர்மங்கள் வேறென்றும், தெரிகிறபடியால், ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்டிருக்கும் தர்மங்களெல்லாம் ஒவ்வொரு யுகத்திலும் அநுஷ்டிக்க வேண்டிய அவசியமில்லை யென்றும், தனியாய் எந்த யுகத்துக்கு எந்த ஸ்மிருதி ஏற்படுத்தப் பட்டனவோ,

அந்த யுகத்திற்கு அந்த ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கும் தர்மங்களே பிரதானங்களென்றும், அதற்கநுகூலமாயிருக்குமவைகளையே, மற்ற பூர்வயுக ஸ்மிருதிகளிலிருந்து கிரஹிக்க வேண்டுமென்றும் தெளிவாகிறது.

பூர்வயுகங்களில் அநேக ரிஷிகள் ஸ்மிருதிகளை எழுதியுள்ளார். அவர்கள் மநு, நாரதர், வஸிஷ்டர், சாதாதபர், காத்யாயனர், யாஞ்ஞவல்க்யர் முதலானவர்கள். ஆயினும்

శ్లో॥ వేదార్థోపనిబద్ధత్వాత్ ప్రాధాన్యం హి మనోః స్మృతం
మన్వర్థ విపరీతా యా సా స్మృతిర్న ప్రశస్యతే॥

(சுலோ) வேதார்த்தோபநிபத்தத்வாத் ப்ராதாந்யம் ஹி மநோ: ஸ்ம்ருதம்
மந்வர்த்த விபரீதாயாஸா ஸ்ம்ருதிர்ந ப்ரசஸ்யதே॥

என்கிற ஆபஸ்தம்பர் வசனப்படி எல்லா ஸ்மிருதிகளிலும் மேலானது மநுஸ்மிருதியானதால் மநுஸ்மிருதிகளுக்கு விசேஷ கௌரவமுண்டு.

இனி எந்த யுகத்திற்கு எந்த ஸ்மிருதிகள் பிரதானமென்று விசாரிக்குமிடத்து

శ్లో॥ కృతే తు మానవా ధర్మాః త్రేతాయాం గౌతమాః స్మృతాః।
ద్వాపరే శంఖలిఖితాః కలౌ పారాశరాః స్మృతాః॥

(சுலோகம்)
க்ருதே து மாநவா தர்மா: த்ரேதாயாம் கௌதமா ஸ்ம்ருதா:
த்வாபரே சங்கலிகிதா: கலௌ பாராசரா ஸ்ம்ருதா:॥

என்கிற பிரஹஸ்பதி பராசருடைய வசனத்தால், க்ருதயுகத்தில் மநுஸ்மிருதிகளும், த்ரேதைக்கு கௌதமஸ்மிருதிகளும், த்வாபரத்துக்கு சங்கலிகிதஸ்மிருதிகளும்

கலியுகத்திற்கு பராசர மகரிஷியின் ஸ்மிருதிகளும் பிரதானங்களென்று தெரிகிறது.

மேற்சொன்னவைகளை நன்றாய் கவனத்தில் வைத்துக்கொண்டு, முதலில் விதவைகளின் விவாகத்துக்கு சம்மதம் கொடுக்கிற நான்கு யுகங்களுக்கும் ஸமானமாயிருக்கும் ஸ்மிருதி வாக்கியங்களைப்பற்றி யோசிப்போம்.

శ్లో॥ నష్టే మృతే ప్రవ్రజితే క్లీబే చ పతితే పతౌ।
పంచస్వాపత్సు నారీణాం పతిరన్యో విధీయతే॥

நஷ்டே ம்ருதே ப்ரவ்ரஜிதே க்லீபே ச பதிதே பதௌ
பஞ்சஸ்வாபத்ஸு நாரீணாம் பதிரந்யோ விதீயதே.

மநு விதிக்கிறதாவது:—ஐந்துவித ஆபத்துக்களில் ஸ்திரீக்கு வேறொரு பதியை விதிக்கிறோம். புருஷன் தேசாந்திரம்போய் அவனைப்பற்றிய சங்கதி தெரியாமற் போய்விட்டாலும், பர்த்தா மரணமடைந்து விட்டாலும், சந்நியாசியாய்விட்டாலும், அலியாய்விட்டாலும், சுய ஜாதியை விட்டுவிட்டாலும், இவ்வைந்து ஆபத்துகளில் ஸ்திரீகள் மறுவிவாகம் செய்து கொள்ளலாம்.

இது வெகு தீர்க்கமான வாக்கியம்:—இக்காலத்தில் இவ்வாக்கியத்தை அச்சாஸ்திரத்திலிருந்து மறைத்துவிட்டார்கள். ஆயினும் மாதவாசாரியர் அதை மநுதர்ம சாஸ்திரத்திலிருந்து எடுத்து எழுதியதாக ஒப்புக்கொண்டிருப்பதாலும், மநு ஸ்மிருதிகளின் சங்கிரகமாகிய நாரதருடைய ஸ்மிருதியில் அதே வாக்கியம் காணப்படுகிறதாலும் எல்லோருமதை மநுவின் வாக்கியமென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள் - தவிர

ప్రోషితో ధర్మకార్యార్థం ప్రతీక్ష్యోష్టౌ నరస్సమాః
విద్యార్థం షడ్యశోర్థం వా కామార్థం త్రీంస్తు వత్సరాన్

ப்ரோஷிதோ தர்மகார்யார்த்தம் ப்ரதீக்ஷ்யோஷ்டௌ நரஸ்ஸமா:
வித்யார்த்தம் ஷட்யஶோர்த்தம் வா காமார்த்தம் த்ரீம்ஸ்து வத்ஸரான்

பர்த்தாவானவன் தர்மகாரியமாய்த் தேசாந்திரம் போயிருந்தால் 8 வருஷமும், வித்தையின் பொருட்டாகில் 6 வருஷமும், கீர்த்தி அடையவேண்டுமென்றாவது, காம இச்சையின் பொருட்டாயினாலும், மூன்று வருஷமும் பொறுத்திருக்கவேண்டுமென்று மேற்சொன்ன மனுவின் ஸ்லோகத்தால் தெரிகிறதே தவிர, பின்பு பாரியானவள் என்ன செய்யவேண்டுமென்று எவ்விடத்திலும் சொல்லவில்லையாகையால், இந்த ஸ்லோகத்துக்கு முந்தி "நஷ்டே ம்ருதே" என்கிற ஸ்லோகமிருந்திருக்குமென்பது தெளிவாய்த் தெரிகிறது. அவ்வாக்கியத்தின்படி மறுவிவாகம் செய்துகொள்ளலாமென்று அவ்விஷயம் முடிவடையும். இவ்வண்ணம் ஸ்ரீகந்தர் என்னும் வியாக்யான கர்த்தா பொருள்படுத்தினார். இதனால் இந்த முக்கிய வாக்கியத்தை யாரோ, தம்பொய்க் கட்சியை ஸ்தாபிக்கவேணுமென்று மறைத்துவிட்டார்களென்று தெளிவாகிறது.

குறிப்பு:—வேத ஸ்ருதிகளில் மரணமடைந்த புருஷனுடைய பத்தினியை தேவரே புனர் விவாகம் செய்துகொள்ளும்படி பகவான் கட்டளையிட்டிருக்கிறாரேயாகிலும், மேற்சொன்ன இதர ஐந்து ஆபத்துகளும் மரணத்துக்குச் சமானமாகவே விவர்த்தனை வியர்த்தமாகுவதால் மறுதர்ம கர்த்தா, மரணத்தோடு இதர ஐந்து ஆபத்துகளையும் குறிக்கிறதென்று தெளிவாகிறது.

సాచేదక్షతయోనిః స్యాద్గతప్రత్యాగతాపివా
పౌనర్భవేన భర్త్రా సా పునస్సంస్కారమర్హతి॥

ஸாசே தக்ஷத யோநி: ஸ்யாத்கதப்ரத்யாகதாபிவா
பௌநர்பவேன பர்த்ராஸா, புனஸ்ஸம்ஸ்காரமர்ஹதி

விதவையாய்விட்ட ஸ்திரீ அல்லது பர்த்தாவால் கைவிடப்பட்ட ஸ்திரீ வேறொரு புருஷனோடு சம்போகமில்லாமல் அக்ஷதயோனியாய் திரும்பி வருவாளேயானால் இரண்டாம்தாரம் விவாக கர்மம் நடப்பித்து சேர்த்துக் கொள்ளும் பர்த்தாவுக்கு யோக்கியதையுள்ளவளாகிறாள் என்று இந்த மநுவசனத்துக்கு அர்த்தமாகும்.

అక్షతా సంస్కారాత్ ప్రాగేవ పురుష సంబంధ దూషితా॥

அக்ஷதா ஸம்ஸ்காராத் ப்ராகேவ புருஷ ஸம்பந்த தூஷிதா.

என்கிற மிதாக்ஷரருடைய வசனத்தின்படி புனர் விவாகத்துக்கு முன்னாடியே புருஷ ஸம்போகத்தால் தோஷமடைந்த ஸ்திரீ க்ஷதயோனி எனப்படுவாள். அப்பேர்ப்பட்ட புருஷ ஸம்போகத்தை யடையாதவள் அக்ஷதயோனி எனப்படுவாள் என்று வியக்தமாய் சொல்லப்பட்டதிலிருந்து விபசாரத்தாலாகிய அசுத்தக்கலவியையே சாஸ்திரம் தடுக்கிறதே தவிர

వైవాహికో విధిః స్త్రీణాం సంస్కారో వైదికః స్మృతః॥

வைவாஹிகோ விதி: ஸ்த்ரீணாம் ஸம்ஸ்காரோ வைதிக ஸ்ம்ருத:

என்கிற மநுவசனப்படி ஸ்திரீகளின் விவாகம் ஸம்ஸ்காரமெனப்படும். அதாவது சாஸ்த்ரோக்தமும் வைதிகமானது மானகிரியை என்று பொருள்படும்.

யாக்ஞவல்க்யர் ஸ்மிருதியில்

అక్షతా చ క్షతా చైవ పునర్భూ సంస్కృతా పునః

அக்ஷதா ச க்ஷதா சைவ புநர்பூ ஸம்ஸ்க்ருதா புந:

என்று அக்ஷதயோனியானாலும் க்ஷதயோனி யானாலும் கூட மறுவிவாஹியின் விவாகத்தை அங்கீகரித்திருக்கிறார்

நாரதர்

శ్లో॥ నష్టే మృతే ప్రవ్రజితే క్లీబే చ పతితే పతౌ
పంచస్వాపత్సు నారీణాం పతిరన్యో విధీయతే॥

நஷ்டே ம்ருதே ப்ரவ்ரஜிதே க்லீபே ச பதிதே பதௌ
பஞ்ச ஸ்வாபத்ஸு நாரீணாம் பதிரந்யோ விதீயதே.

மேற்சொன்ன மநுவின் வாக்கியமே நாரதர் ஸ்மிருதியிலும் வருகிறது. இந்த ஐந்து ஆபத்துகளில் "நஷ்டே" என்கிற ஆபத்தும் "க்லீபே" என்கிற ஆபத்தும் தவிர மற்றவை ஆரம்பிக்கும் காலம் திட்டமானவையாகும், மேற்சொன்ன இரண்டு ஆபத்துகளுக்கு காலநிட்சயம் இல்லாமையாலும், அந்தக்கால வரையை நிர்ணயிப்பதற்காகவும் மேற்சொன்ன "நஷ்டேம்ருதே" சுலோகம் "வாக்குதந்த்ர" பரமென்றும் "விதேய" பரமென்றும் விருதாவன வாதம் செய்பவரை சமாதானப்படுத்தும் பொருட்டும் அடியிற்கண்ட வாக்கியங்களைச் சேர்த்து எழுதியுள்ளேன்.

అష్టౌ వర్షాణ్యుదీక్షేత బ్రాహ్మణీ ప్రోషితం పతిం
అప్రసూతా తు చత్వారి పరతోఽన్యం సమాశ్రయేత్॥

క్షత్రియా షట్ సమాస్తిష్ఠేత్ అప్రసూతా సమాత్రయం
వైశ్యా ప్రసూతా చత్వారి ద్వే వర్షే త్వితరా వసేత్॥

న శూద్రాయాః స్మృతః కాల ఏవ ప్రోషితయోషితాం
జీవతి శ్రూయమాణే తు స్యాదేష ద్విగుణో విధిః॥

அஷ்டௌ வர்ஷாண்யுதீக்ஷேத ப்ராம்மணீ ப்ரோஷிதம் பதிம்
அப்ரஸூதா து சத்வாரி பரதோன்யம் ஸமாச்ரயேத்॥

க்ஷத்ரியா ஷட்ஸமாஸ் திஷ்டேத் அப்ரஸூதா ஸமாத்ரயம்
வைச்யா ப்ரஸூதா சத்வாரி த்வே வர்ஷே த்விதரா வஸேத்॥

ந சூத்ராயா: ஸ்ம்ருத: கால ஏஷ ப்ரோஷித யோஷிதாம்
ஜீவதி ச்ரூய மாணே து ஸ்யாதேஷ த்விகுணோ விதி:॥

புருஷன் தேசாந்திரம் போய்விட்டானுகில்

ஒரு பிராமண ஸ்திரீ. சந்தானமுள்ளவளானல்	.... 8-வருஷமும்	
சந்தானம் அற்றவளானல்	... 4	,,
க்ஷத்திரிய ஸ்திரீயானல் சந்தானமுள்ளவள்	6	,,
சந்தானமற்றவள்	... 4	,,
வைசிய ஸ்திரீ சந்தானமுள்ளவளானல்	... 4	,,
சந்தானமற்றவள்	... 2	,,

காத்திருந்து விவாகம் செய்துகொள்ளலாமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. சூத்திர பத்நிக்கு காலவரை குறிப்பிடவில்லை.

மேற்சொன்ன வாக்கியங்களால் சந்தானமுள்ளவர்களும் இல்லாத ஸ்திரீகளும் புநர் விவாகம் செய்துகொள்ளலாமென்று வெளிப்படையாயிருக்கிறதல்லவா?

சந்தானமுள்ளவர்களுக்கு நியோகம் வேண்டாமையாலும் வாக்குத்தத்தமட்டும் கொடுபட்ட பெண்மக்களுக்கு சந்தானம் உண்டாவது அசந்தர்ப்பமாகையாலும் எதிர்வாதிகளின் ஆக்ஷேபனை செல்லத்தக்கதல்ல. ஆகையால் "நஷ்டேம்ருதே" என்கிற சுலோகம் ஸ்திரீகளின் புநர் விவாகத்தைப்பற்றியதே என்று சொல்வதற்குச் சிறிதும் சந்தேகமில்லை.

தவிர, சில எதிர்வாதிகள் "நஷ்டேம்ருதே" சுலோகத்தில் "பதி" என்றபதம் இரட்டித்து வருவதால் ஒரு வனை விவாகம் செய்துகொண்ட பதி என்றும் மற்றொரு பதி சப்தம் வெறும் காவலன் என்றும், பிரயோஜனமற்ற வாதஞ்செய்வதுண்டு. நாரதர், பட்டர், வசிஷ்டர், பிரகஸ்பதி முதலானவர்கள் எழுதியிருக்கிறதாவது. மணவாளன் கையில் நீர் வார்த்ததினாலும், வாயின் வார்த்தையாலாகிய தானத்தாலும், மணவாளன் கன்னிகைக்குப் பதியாகாமல், பாணிகிரகணத்துக்குப்பின் மணவாளனும் மணவாட்டியும், அருந்ததி பார்க்கும் சப்தபதி சடங்கின் ஏழாம் அடியிலேதான் "பதி" யாகிறானென்று சொல்லியிருக்கிறார்கள்.

నోదకేన న వాచా వా కన్యాయాః పతిరుచ్యతే
పాణిగ్రహణ సంస్కారాత్ పతిత్వం సప్తమే పదే॥

நோதகேன வாசாவா கன்யாயா: பதிருச்யதே
பாணிக்ரஹண ஸம்ஸ்காராத் பதித்வம் ஸப்தமே பதே.

నోదకే న వాచా వా కన్యాయాః పతిరుచ్యతే
పాణిగ్రహణ సంస్కారే వివాహం పతివేదనం॥

நோதகே ந வாசாவா கன்யாயா: பதிருச்யதே
பாணிக்ரஹண ஸம்ஸ்காரே விவாஹம் பதிவேதனம்,

என்கிற பராசர வசனப்படி பாணிக்கிரகணம் செய்தவனே பதியாவான் என்கையால், "நஷ்டேம்ருதே" வாக்கியத்தில் சொன்ன இரண்டுபதி சப்தங்களும் பாணிக்கிரகணம் செய்துகொண்ட சரியான பதியையே குறிக்குமென்று தெளிவாகிறது.

శ్లో॥ ఊఢా దండా దయోర్యోగ చత్వార స్సము దాహృతాః
త్యక్త వ్యాస్తే పతితత్ తతోయాన్యా అపిస్త్రియా॥

ఆక్షిప్త మోఘబీజానాం కృతేపి పతికర్మణి
పతిరన్యః స్మృతో నార్యా వత్సరార్థం ప్రతీక్ష్యతు॥

ஊர்ஷா தண்ட தயோர்யோக, சத்வாரஸ்ஸமு தாஹ்ருதா:
த்யக்த வ்யாஸ்தே பதித்வம் ததோயான்யா அபிஸ்த்ரியா||

ஆக்ஷிப்த மோக பீஜானாம் க்ருதேபி பதிகர்மணி
பதிரன்ய: ஸ்ம்ருதோ நார்யா வத்ஸரார்தம் ப்ரதீக்ஷ்யது||

பதிகள் நபுஞ்சக வகையில் முதல் நாலு வகைகளை சேர்ந்தவர்களானால் பத்நிகள் அவர்களோடு சம்யோகம் செய்திருந்தபோதிலும் அவர்களை விட்டு விலக வேண்டும். "ஆக்ஷிப்தம்" "மோகபீஜம்" என்னும் இருவகை நபுஞ்சகத்தையுடையவர்களானால் அவர்களுடைய பத்நிகள் அவர்களோடு கூடி வாழ்ந்திருந்தபோதிலும் ஆறுமாச பரீட்சைக்குபின் வேறு பதிகளை அடையலாம்.

மேற்சொன்ன வாக்கியங்களால் தன் முதல் பர்த்தாவோடு சம்யோகம் செய்திருந்தபோதிலும், வேறு பதிகளை அடையலாமென்றும், அவர்கள் நிந்தனைக்குட்பட்ட அசத்த கலவி அல்லது விபசார தோஷத்தாலுண்டா

கும் சுதயோனிகளாகமாட்டார்களென்றும் விளங்கு கிறது.

[illegible]
[illegible]

உத்வாஹிதாபி யாகன்யா ஸம்ஸ்பர்சம் ப்ராப்த மைதுநா
புநஸ்ஸம்ஸ்கார மர்ஹேத யதா கன்யா ததைவஸா

விவாகம் செய்துகொண்டவளாயினும் புருஷனுடைய சம்யோகமில்லாதவளானால் புனர்விவாகத்துக்கு பாத்ரமானவள். அவள் அவிவாஹித கன்னிகைக்கு சமானமானவள்,

வசிஷ்டர்.

[illegible]
[illegible]

பாணிக்ரஹே ம்ருதேபாலா கேவலம் மந்த்ர ஸம்ஸ்க்ருதா
ஸாசேதக்ஷதயோநிஸ்யாத் புநஸ்ஸம்ஸ்கார மர்ஹதி.

மந்திர ஸம்ஸ்காரத்தினால் மாத்திரம் விவாகம் முடிந்து அக்ஷதயோனியான பாலிகைப்பத்தினி பர்த்தாவின் மரணத்துக்குப்பின் புனர் விவாகத்துக்கு யோக்கியதையானவள்.

[illegible]
[illegible]
[illegible]

குலசீல விஹீனஸ்ய ஷண்டாதி பதிதஸ்யச
அபஸ்மாரி விகர்மஸ்ய ரோகிணாம் வேஷதாரிணாம்
தத்தாம்பி ஹரேத்கன்யாம் ஸகோத்ரோடாம் ததைவச.

பர்த்தா நீசகுடும்பத்தானாய், சீலஹீனனாய், நபும்சகனாய், பதிதனாய், காக்காய் வலிகொண்டவனாய், தீர்க்க ரோகியாய், கூத்தாடியாய், ஏககோத்திரனாயிருந்தால், கன்னிகையானவள் விவாகம் முடிந்தவளாயிருந்தாலும் அவனைவிட்டுப் பிரிக்கப்பட்டு வேறொருவனுக்கு விவாகம் செய்யப்படத்தக்கவள்

காத்தியாயனர்

[illegible]
[illegible]
[illegible]

ஸதுயத்யன்ய ஜாதிய: பதித: க்லீபவர
விகர்மஸ்த: ஸகோத்ரோவா தாஸோதீர்க்கா மயோபிவா
ஊடாபிதேயா ஸான்யஸ்மை ஸப்ராவரண பூஷணா

பர்த்தா அந்யஜாதியானாய், பதிதனாய், நபும்சகனாய், துர்க்குணனாய், ஏககோத்திரனாய், அடிமையாய், தீர்க்க ரோகியாய், இருந்தால் கன்னிகையானவள் விவாக கர்மம் நிறைவேறினவளாயிருந்தபோதிலும் வஸ்திராபரணங்களோடு வேறொருவனுக்கு வாழ்க்கைப் படத் தகுதியானவள்.

இவ்வாக்கியம் மிக விசேஷமானது, யாவரும் நன்றாய்க் கவனிக்கத்தக்கது. தீர்க்கரோகம்கொண்ட பர்த்தா பாரியின் இரண்டாம் விவாகத்துக்கு இடையூறல்லவானால் இறந்துபோன பர்த்தா தன் பதினியை அவள் ஜீவாந்தமளவும் விதவையாயிருக்கும்படிச்செய்ய எப்படி பாத்தியப்பட்டவன்? ஆகையால்,

விதவையாய்விட்ட ஸ்திரீ அவள் ஆயுள் பரியந்தம் விதவை நிலையில்தான் இருக்கவேண்டுமென்று போராடும் கட்சிக்கு ஆதாரமில்லையல்லவா?

ஒருதடவை தத்தம் செய்யப்பட்டு போனவள் மறுபடியும் புனர் விவாகத்துக்குத் தத்தஞ்செய்து கொடுக்கப்பட பாத்தியதையற்றவள் என்னும் கட்சிக்கும் ஆதாரமில்லையல்லவா?

இவைபோன்ற வசனங்கள் பிரஜாபதி ஸ்மிருதியிலும் காணப்படுகின்றன. வெவ்வேறான எட்டு தர்ம நூல்கள் அடியிற் குறிப்பிட்ட பதினேழு சந்தர்ப்பங்களில் பாலவிதவைகளுக்கு புனர்விவாகம் சம்மதிக்கிறது. அவைகளெல்லாம் புனர்விவாகத்துக்கு ஒரே நியாயத்தைக் காட்டாதிருந்தாலும், மரணகஷ்டத்தை வெளிப்படையாக ஐந்து நூல்களும் அர்த்தாபத்தியாய் மற்ற நூல்களும் காட்டுகின்றன.

இரண்டாம் விவாகத்தை சம்மதிக்கிற 17 ஆபத்துகளாவன:—

1. பதியின் பரவாசம். 2. மரணம். 3. சந்நியாசம் 4. நபும்சகம் 5 பதிதம். 6. பதியினால் கைவிடப்படுதல் 7. விதவையின் பாலியம் 8. நிகுடும்ப பர்த்தா 9. துர்க்குணபர்த்தா 10 அந்நிய ஜாதியான் 11. ஏகோத்திரன் 12. அடிமையான புருஷன் 13. தீர்க்கரோகம் 14 சிலவினேன் 15. காக்காய் வலி கொண்டவன் 16. பெரியரோகி 17. கூத்தாடி,

இதுவரையிலெடுத்துக்காட்டிய சதுர்யுக சாமானியவசனங்களாகிய சுருதிகளும் ஸ்மிருதிகளும் புனர்

விவாகத்தை அங்கீகரித்திருக்கின்றன என்பதற்குப் போதுமான அத்தாக்ஷியாகும்.

இனி இக்கலியுக தர்மத்தைப்பற்றி யோசிப்போம் "కలౌ పారాశరస్మృతాః" "கலௌபாராசரஸ்ம்ருதாஹ" என்று கலியுகத்திற்குப் பாராசரமகரிஷியின் ஸ்மிருதிகளே எல்லா ஸ்மிருதிகளைவிட பலத்த அதிகாரமுள்ளதென்று மேலே எடுத்துக்காட்டியிருக்கிறேன்.

இந்த பராசரரும் மனுநாரதரிஷியை அநுஸரித்தே

శ్లో॥ నష్టే మృతే ప్రవ్రజితే క్లీబే చ పతితే పతౌ
పంచస్వాపత్సు నారీణాం పతిరన్యో విధీయతే॥

நஷ்டே ம்ருதே ப்ரவ்ரஜிதே க்லீபே ச பதிதே பதௌ
பஞ்சஸ்வாபத்ஸு நாரீணாம் பதிரன்யோ விதீயதே.

என்று பர்த்தா தேசாந்தரம்போய் அவனைப்பற்றிய சமாசாரம் தெரியாமற் போய்விட்டாலும், மரணமடைந்துவிட்டாலும், சந்நியாசியாய் விட்டாலும், அலியாய் விட்டாலும், சுய ஜாதியை விட்டுவிட்டாலும் இந்த ஐந்து ஆபத்துகளில் மட்டும் பாரியை மறுபதியை அடையவேண்டியதென்று விதித்திருக்கிறார். இந்த யுகத்திற்கு மற்ற 12 ஆபத்துகள் தளளுபடி செய்யப்பட்டன. இவ்வாக்கியம் வாக்குதத்தாபரமல்ல நியோகபரமல்ல இரண்டு பக்ஷங்களும் சாஸ்திரோக்தமான பதிகளே என்பதைப் பற்றி முன்னமேயே தெளிவாய் உரைக்கப்பட்டது.

இவ்வளவு வெளிப்படையும் பிரபலமுமான விதிகளுக்கு மாறாக எதிர்க் கட்சியார் மனுஸ்மிருதியிலிருந்து எடுத்துக்காட்டுகிற வாக்கியங்கள் என்னவெனில்:—
158-வது சுலோகம்

5683

ఆసీతామరణాత్ క్షాంతా నియతా బ్రహ్మచారిణీ॥

ஆஸீதா மரணாத் க்ஷாந்தா நியதா ப்ரம்மசாரிணீ.

என்கிற ஒரு வரியும்

162-வது ச்லோகம் பின்னடியாகிய

నద్వితీయశ్చ సాధ్వీనాం క్వచిద్భర్తోపదిశ్యతే॥

நத்விதீயச்ச ஸாத்வீனாம் க்வசித்பர்த்தோபதிச்யதே.

என்கிற தனிவசனங்களை மட்டும் எடுத்துரைத்து ஸ்திரீகளுக்கு எங்கும் இரண்டாவது பர்த்தாவை விதிக்கவில்லையென்றும் புருஷனை இழந்தவள் எக்காலத்தும் பிரம்மசரிய விருதத்தையே அனுஷ்டிக்க வேண்டுமென்றும் எதிர்வாதிகள் சொல்லுகிறார்கள். அவ்வாக்கியங்கள் எந்த சந்தர்ப்பத்தில் சொல்லப்பட்டனவோ, அந்த சந்தர்ப்பத்தைக் கவனிக்கில் காமியமானவர்க்குச்சொன்ன புநர் விவாகத்தை நிஷேதிக்கமாட்டாதென்று ஒருபாலனுங்கூட தெரிந்து கொள்ளலாம். எப்படியெனில்:—

மநுஸ்மிருதி 5-வது அத்தியாயம் 151-ச்லோகம் முதல் 164-வது ச்லோகங்கள்

శ్లో॥ యస్మై దద్యాత్పితా త్వేనాం భ్రాతా వానుమతే పితుః।
తం శుశ్రూషేత జీవంతం సంస్థితం చ న లంఘయేత్ 151.

మంగళార్థం స్వస్త్యయనం యజ్ఞశ్చాసాం ప్రజాపతేః।
ప్రయుజ్యతే వివాహేషు ప్రదానం స్వామ్యకారణం 152.

అనృతావృతుకాలే చ మంత్రసంస్కారకృత్పతిః।
సుఖస్య నిత్యం దాతేహ పరలోకే చ యోషితః 153.

విశీలః కామవృత్తో వా గుణైర్వా పరివర్జితః
ఉపచర్యః స్త్రియా సాధ్వ్యా సతతం దేవవత్పతిః 154

నాస్తి స్త్రీణాం పృథగ్యజ్ఞో న వ్రతం నాప్యుపోషితం
పతిం శుశ్రూషతే యేన తేన స్వర్గే మహీయతే 155.

పాణిగ్రాహస్య సాధ్వీ స్త్రీ జీవతో వా మృతస్య వా
పతిలోకమభీప్సంతీ నాచరేత్కించిదప్రియమ్ 156.

కామంతు క్షపయేద్దేహం పుష్పమూలఫలైశ్శుభైః
నతు నామాపి గృహ్ణీయాత్పత్యౌ ప్రేతే పరస్య తు 157.

ఆసీతామరణాత్ క్షాంతా నియతా బ్రహ్మచారిణీ
యో ధర్మ ఏకపత్నీనాం కాంక్షంతీ తమనుత్తమమ్ 158.

అనేకాని సహస్రాణి కుమారబ్రహ్మచారిణాం
దివంగతాని విప్రాణామకృత్వా కులసంతతిమ్ 159.

మృతే భర్తరి సాధ్వీ స్త్రీ బ్రహ్మచర్యే వ్యవస్థితా
స్వర్గం గచ్ఛత్యపుత్రాపి యథా తే బ్రహ్మచారిణః 160.

అపత్యలోభాద్యా తు స్త్రీ భర్తారమతివర్తతే
సేహ నిందామవాప్నోతి పతిలోకాచ్చ హీయతే. 161.

నాన్యోత్పన్నా ప్రజాస్తీహ న చాప్యన్యస్య పరిగ్రహే
నద్వితీయశ్చ సాధ్వీనాం క్వచిద్భర్తోపదిశ్యతే 162.

పతిం హిత్వాపకృష్టం స్వముత్కృష్టం యా నిషేవతే
నింద్యైవ సా భవేల్లోకే పరపూర్వేతి చోచ్యతే 163.

వ్యభిచారాత్తు భర్తుః స్త్రీ లోకే ప్రాప్నోతి నింద్యతామ్
సృగాలయోనిం ప్రాప్నోతి పాపరోగైశ్చ పీడ్యతే 164.

மநுவானவர் ஸ்திரீகளின் தர்மங்களைப்பற்றி விவரிப்பதில் 151-வது ச்லோகத்தால் தகப்பனாவது தன் சம்மதியை சகோதரனுக்காவது மற்றெவருக்காவது

கொடுத்து விவாகம் செய்து வைக்கிறார்களோ அந்தஸ்திரீ அந்தபதிக்கு சுஸ்ருஷை செய்து அவன் இறந்த பின்னும் விபசாரம் செய்யலாகாதென்று சொன்னார். 'நலங்கயேத்' (நலங்கயேத்) என்னும் வார்த்தையை ஆதாரமாய்க் கொண்டு, புநர்விவாகம் செய்து கொள்ளலாகாதென்று எதிர்வாதிகள் சொன்னால் மநுவாகிய தாமும் நாரதரும் பராசரருமே விதித்த "நஷ்டேம்ருதே" என்கிற விசேஷ விதிக்கு முரண்படுமே என்று சிறிதும் நினையாதவராகுவர். இதற்குப்பின் 157-வது சுலோகம் வரையில், இல்லாளின் தர்மங்களைப் போதிப்பதில் ஒரு ஸ்திரீக்கு பர்த்தாவே இகத்திலும் பரத்திலும் சுகத்தை அளிப்பவனென்றும், பர்த்தா நல்லடத்தையில்லாதவனாயினும், காமநெறியில் இரங்கிய வனாயினும், குண மற்றவனாயிருந்தாலும் அவனை விடாமல், பதிவிரதையான ஸ்திரீ சுஸ்ருஷை செய்ய வேண்டுமென்றும், ஸ்திரீக்கு பதி சுஸ்ருஷைத்தவிர வேறு உபவாசங்களும் விரதங்களும் யஞ்ஞமும் இடையாதென்றும், பதிலோகத்தை விரும்பும் ஸ்திரீ பதிஜீவித்திருந்த காலத்தும் இறந்து போய்விட்ட காலத்தும் கொஞ்சமாவிலும் "அப்பிரியம்" அதாவது விரும்பத்தகாததைச் செய்யக்கூடாதென்று சொன்னார். இவ்விடத்தில் "அப்பிரியம்" என்னும் வார்த்தை வியபசாரத்தாலும், பர்த்தா இறந்தபின் செய்ய வேண்டிய சிரார்த்தாதி கருமங்கள் செய்யாதிருப்பதாலும் என்று பொருள்படுமேயொழிய எதிர்வாதிகள் வேறெந்த அர்த்தமும் செய்யப் புகுவது பயனற்றப் பிரயாசையாய் முடியும். வியாக்யான கர்த்தாவாகிய கல்லூகபட்டரும்

[illegible]
[illegible]

காதிக்ரமேத் வ்யபிசாரேண ததிய ச்ராத்த
தர்ப்பணு காலேன பாபலோக க்ருத்ய கண்டனேனச

என்றுமேற்சொன்ன பொருளையேசொன்னார். அதற்குப் பின் மநுவானவர் விதவைகளின் தர்மத்தைச் சொல்லும்போது 161வது சுலோகம் வரைக்கும் பிரமசரிய விரதம் அநுஷ்டிக்கிறவர்கள் புஷ்பமூலபலங்களால் தேகத்தை ஒடுக்கவேண்டுமென்றும், பரபுருஷனுடைய பெயரையும் நினைக்கலாகாதென்றும், மரணபரியந்தம் பிரமசாரி க்ஷமத்தை உடையவளாயிருக்கவேண்டுமென்றும், சந்தானமற்றவளாயிருந்தாலும், குமாரப்பிரம்மசாரிகள், சுவர்க்கலோகத்தை அடைந்த பிரகாரமே பர்த்தா இறந்தது முதல் பிரமசரியவிரதத்தை அநுஷ்டிக்கும் பதிவிரதை, சந்தானமற்றவளாயினும் ஸ்வர்க்கத்தை அடைவாளென்றும் சந்தான அபேக்ஷையால் பர்த்தாவை அதிக்ரமித்து வியபசரிக்கும் ஸ்திரீ இந்த லோகத்தாரின் நிந்தனை அடைவதோடுகூட பரலோகத்தையும் அடையமாட்டாளென்று சொன்னார் "அதிவர்த்ததே" "ஸ்ரீவர்த்தே" என்னும் பதத்துக்கு வியபிசரித்தலென்றே கல்லூகபட்டர் உரை யெழுதினார். விதவை ஸ்திரீக்கு பிரமசரிய விரதம் இன்னதென்று சொன்னமாத்திரத்தால், பதியை இழந்த ஸ்திரீகள் வேறுவிதமாயிருக்கக் கூடாதென்று எதிர் வாதிகள் சித்தாந்தம் ஏற்படுத்தினால், மேலே விஸ்தாரமாய்ச்சொன்ன புநர் விவாக விசேஷ விதிகளும் உடன்கட்டை ஏறவேண்டிய விதிகளும் ஈசுவரன் அநுக்கிரகித்த வேதசுருதிகளும் அவர் கட்டளையும் வெறும்வார்த்தைகளாய்விடாதா?

அதற்குப்பின் பர்த்தாவுக்கெதிரிடையான பரபுருஷனால் பெற்ற பிள்ளை அந்த ஸ்திரீக்காகட்டும் அந்த

பாபுருஷனுக்காகட்டும் புத்திரனைமாட்டானென்றும் த்விதீயனென்றதால் கள்ளப்புருஷனை பர்த்தா என்று சொல்லத்தகாதென்றும் 162-வது சுலோகத்தால் சொன்னார். கடைசி இரண்டு வாக்கியத்தால் பர்த்தா தாழ்ந்தவனென்று சொல்லி உயிரோடே இருக்கும் தன் கணவனை விட்டுவிட்டு உயர்ந்தவனாயிருப்பானை அடைபவள் இவ்வுலகில் நிந்தனையடைந்து, பரபூர்வை என்று சொல்லப்படுவாளென்றும், வியபசாரம் செய்யப்பட்டவள் நிந்தனையடைவதோடு நரியின் ஜன்மத்தை எடுத்து பாபரோகங்களால் பீடிக்கப்படுவாளென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. விதவா தர்மம் இன்னதென்றும் வியபசாரத்தைத் தூஷிக்கும் மேற்சொன்ன சுலோகங்களிலேதுவும் ஐந்து ஆபத்துகளில் புநர் விவாகத்துக்கு அநுமதி கொடுத்த மநுவே புநர் விவாகத்துக்கு விரோதமாய் ஒருக்காலும் கருதியிரானென்று அந்தக் காரணத்தைப் பொருத்து ஒரு சிறு பாலனும் சொல்லத்தக்கது.

மேற்சொன்ன எல்லா வாக்கியங்களால் பதி ஜீவந்தனாயிருக்கும் காலத்தில் பதிவிரதை இருக்கவேண்டிய லக்ஷணத்தையும், பதியிறந்தபின் அப்பதி போகும் லோகத்தைக் கோரும் ஸ்திரீ அநுஷ்டிக்கவேண்டிய பிரமசாரியவிரதத்தின் இலக்ஷணத்தையும், எக்காரணத்தாலும் எக்காலத்திலும் வியபசாரம் செய்யலாகாதென்றும் தெளிவாய்ச் சொன்னாரேதவிர பதியிறந்தபின் பிரம்மசரியவிரதத்தைத்தான் அநுஷ்டிக்கவேண்டுமென்று மநு நிர்பந்தம் செய்யவில்லையென்று தெரிந்து கொள்ளத்தக்கது. ஏனெனில் பதியிறந்தபின் பிரமசரிய விரதத்தை அநுஷ்டியாத ஸ்திரீ விபசாரவழியில் இறங்கி விடுவது மானிட இயற்கையாகுமாதலாலும்

கடுமையான பிரம்மசரிய விரதத்தை அநுஷ்டித்தல் உலகத்தில் பெரும்பாலோரால் முடியாதென்பதும் நன்றாயறிந்த மநுவானவர் "நஷ்டேம்ருதே" சுலோகத்தால் வேறொரு பதியை அடைவாய் என்று விதித்தாரென்றும் தெளிவாகின்றது. தவிர "[illegible]" என்னும் சுருதியில் புநர் விவாகம் செய்துகொள்ளும்படி கட்டளை இட்டிருப்பதோடு அவ்வண்ணம் புநர் விவாகம் செய்து கொண்ட பதிவிரதைகள் தங்கள் இரண்டாம் கணவரோடு உத்தம லோகத்தையும் அடைவார்களென்றும் அருளியிருப்பதை நான் உங்களுக்கு முன்னாடியே தெரிவித்திருக்கிறேன்.

முதல் விவாகம் செய்து கொள்வதும் புநர் விவாகம் செய்து கொள்வதும் தெய்வச்செயலாய் ஏற்படக்கூடிய விதவா இலக்ஷணத்தை காப்பாற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்ட பிரம்மசரிய விரதத்தை அநுஷ்டிப்பதும் மதுமாமிசங்களை சாப்பிடுவதும் பரிசங்கை விதியாகையால், இன்னதுதான் செய்யவேண்டுமென்று ஒருவரும் நிர்ப்பந்தம் செய்யவில்லை, செய்யவும் கூடாது. ஸ்திரீ புருஷர்கள் விவாகஞ்செய்துகொள்வது அவரவர் இஷ்டத்தைப் பொறுத்ததே யொழிய நிர்ப்பந்திக்கத்தக்கதல்ல. ஆனால் விபசாரம் செய்தல் கண்டிக்கத்தக்கது.

பாகவதம் ஏகாதச ஸ்கந்தத்தில்

లోకే వ్యవాయామిష మద్య సేవా నిత్యాస్తు జంతోర్నహి తత్ర చోదనా।
వ్యవస్థితి [illegible] వివాహ యజ్ఞ సురాగ్రహై[illegible] నివృత్తిరిష్టా॥

லோகே வ்யவாயாமிஷ மத்யஸேவா நித்யாஸ்து
[ஜந்தோர்ன ஹிதத்ர சோதனா
வ்யவஸ்திதி ஸ்தேஷு விவாஹ யக்ஞ ஸுராக்ரஹைராஸு
[நிவ்ருத்திரிஷ்டா

இதன் பொருள்:—காமசாந்தி செய்துகொள்வதும் மது மாம்சங்களை சாப்பிடுதலும் இவ்வுலகத்தில் மாகிட இயற்கைக்குணமாகும். ஆனால் விவாகஞ்செய்து காமசாந்தியை அடையவேண்டும். யாகஞ்செய்து மாமிசம் சாப்பிடவேண்டும் "சுராக்கிரகம்" என்கிற கிரியையை நடத்தி மது அருந்தவேண்டுமென்கிற நியந்தனைகளையுடையன. இவைகளைத் தவிர்ப்பதே கருத்தாகுமென்று வேதாந்திகளுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. வேதங்களை அநுசரித்தே கைவல்ய நவநீத ஆசிரியரும் "கள்ளும் ஊனும் நீ விரும்பினால் மகங்கள்செய், காமத்தில் மனதானால் கொள்ளும் பெண்ணொடு கலவி செய்யென்னும்" விள்ளும் வேதத்தின் சம்மதம் சகலமும் தவிர்வதே கருத்தாகும் என்றும் உரைத்தார். காம இச்சை தோன்றினால் சாஸ்த்ரோக்தமான விவாகஞ்செய்து அச்சுகத்தையடைவாய் என்று சொன்னதால் முறைகேடான வியபிசாரந்தான் தடுக்கப்பட்டது.

இவ்விடத்தில் எவரும் ஒரு முக்யமான விஷயத்தைக்கவனிக்கத்தக்கது யாதெனில் காமஇச்சைதோன்றி விவாகம் செய்துகொள்ள இஷ்டப்பட்டவர்களுக்கு மாத்திரம் முதல் விவாகமோ, புனர் விவாகமோ செய்து வைப்பது தகுதியென்று ஏற்படுவதால் முதல் விவாகத்துக்கு யுக்த வயது பெண்பிள்ளைகளுக்கு 18-ஆகும் ஆண்பிள்ளைகளுக்கு 25 ஆகுமென்று இக்காலத்து அரும்பெரியாராகிய ஸ்வாமி சிரத்தானந்தர் 11-10-25 மன்று ஜலந்தர் ஜில்லாவில் நடத்திய உபந்யாசத்தில் விளக்கி அபிப்ராயத்துக்கு மகா ஜனங்களின் ஆமோதிப்பைப் பெற்றார்.

இனி விவாகம் செய்துகொள்ளவேண்டிய சிறுவன் சிறுமிகள் எவ்வித லட்சணத்தோடு கூடியவர்களாயிருக்

கவேண்டுமென்று யாஜ்ஞவல்கயர் விவரித்திருக்கிறதைப் பற்றி சிறிது ஆலோசிப்போம்.

అవిప్లుత బ్రహ్మచర్యో లక్షణ్యాం స్త్రియముద్వహేత్।
అనన్యపూర్వికాం కాంతా మసపిండాం యవీయసీమ్॥

அவிப்லுத ப்ரம்ஹ சர்யோ லக்ஷண்யாம் ஸ்த்ரியமுத்வஹேத்
அனன்ய பூர்விகாம் காந்தா மஸபிண்டாம் யவீயஸிம்

போதாயனர்

శ్రుతశీలే విజ్ఞాయ బ్రహ్మచారిణే ర్థినే దేయా॥

ச்ருதி சீலே விஜ்ஞாய ப்ரம்ஹ சாரிணேர் திநே தேயா.

இத்யாதி வாக்யங்களின்படி ஒருக்காலும் ஸ்திரீ சம்போகம்செய்யாத ஒருபிரம்மசாரி தன்விரதம்நிறைவேறியதின்பின் அதாவது வேத சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்தபின் தகுதியான ஒரு பாலிய கன்னிகையை மணம்புரியக்கடவன். அவள் முன்னொருவனுக்கு விவாகம் செய்யப்படாதவளாய், சௌந்தர்யவதியாய் ஒரே சபிண்டவர்க்கத்தைச் சேராதவளாய், வயதில் சிறியவளாய், ரோகமற்றவளாய் ஏககோத்திரத்தில் அமையாதவளாயிருக்க வேண்டும். மணவாளனுக்கும் இந்த இலட்சணங்களே அவசியம். அவன் ஏகஜாதியானாய் ச்ருதியில் நிபுணனாய், வாலிபனாய் யாவராலும் வாஞ்சிக்கப்பட்டவனாய் ஒருக்காலும் சம்போகம்பண்ணியிராதவனாயிருக்கவேண்டு மென்று சொல்லப்பட்டது. இதை ஆதாரமாகக்கொண்டு கன்னிகைக்குத்தானே விவாகம், முன்னொருவனுக்கு விவாகமான விதவைக்கு விவாகம் கூடாதே என்று எதிர்வாதிகள் சிறிதும் யோசியாது சொல்லுகிறார்கள். ஆலோசித்துப்பார்க்கில்

சம்யோகம் செய்யாதிருந்த பிரமசாரிக்கல்லவா, கன்னியை தானம்செய்யவேண்டும்? முதல் பாரியை இழந்தவன் பத்னியோடே ஒரு நாள் மட்டும் சகமடைந்தவனாயிருந்தாலும் அவனுக்கும் விவாகம் கூடாதே? ஏனெனில் "அவிப்லுத" பிரம்மசாரிக்கல்லவோ கன்னியை விதிக்கப்பட்டிருக்கிறது. தன் கன்னிகைக்கு சாஸ்திர முறைப்படி வரன்வேண்டுமென்று பிடிவாதம் செய்பவர் சம்யோகம் செய்த இரண்டாம் விவாகனை விரும்புவார்களா. ஆகிலும் புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும், சாஸ்திரங்கள் புனர் விவாகத்தை அங்கீகரித்திருப்பதால் தான் மேற்சொன்ன ஸ்வாமி சித்தாந்தர் கன்னிகைக்கு அவிப்லுத பிரமசாரியையும் பத்னியை இழந்த விதவ புருஷனுக்கு "நஷ்டேம்ருதே" விசேஷ விதியிற் சொன்ன புருஷனை இழந்த விதவா ஸ்திரீயையும் மணம் செய்விக்கத்தக்க தென்றும் எடுத்துக்காட்டி மேற்சொன்ன மகா ஜனக்கூட்டத்தில் ஜனங்களின் ஆமோதிப்பைப் பெற்றுரென்று (நான் நினைக்கிறேன்). — வேறு அநேக காரணங்களையும் அவர் சொல்லியிருப்பாரென்பதற்கும் சந்தேகமில்லை.

இன்னமும் எதிர்வாதிகளின் சில ஆக்ஷேபனைகளைப் பற்றி ஆலோசிப்போம்.

శ్లో॥ పాణిగ్రహణికా మంత్రాః కన్యాస్వేవ ప్రతిష్ఠితాః।
నాకన్యాసు క్వచిన్నౄణాం లుప్తధర్మక్రియా హితాః॥

பாணிக்ரஹணிகாமந்த்ரா: கன்யாஸ்வேவ ப்ரதிஷ்டிதா:
நாகன்யாஸு க்வசின்ந்ருணாம் லுப்தர்மக்ரியாஹிதா:

இந்த மநுவசனத்தின்படி விவாக மந்திரங்கள் கன்னிகைகளுக்கு மட்டுமே பிரதிஷ்டிக்கப்பட்டிருக்கிற

தென்றும் விதவைகள் தர்மக் கிரியைகளுக்கு அபாத்திரராகையால் இந்த மந்திரங்கள் விதவைகளுக்கு பயன்படாதென்றும் ஆகையால் இந்த மநு வசனத்தின்படி கன்னிகைகளுக்குத் தவிர விதவைகளுக்கு விவாகம் கூடாதென்றும் சொல்லுகிறார்களாம். இப்படி சொல்லுபவர் "ఉద్వాహ" என்னும் சுருதியில் சொன்ன கட்டளையையும் "நஷ்டேம்ருதே" என்கிற மநு நாரதர் பாராசருடையஸ்மிருதிவாக்கியங்களையும் மறந்தவர்களாவார். மேற்படி சுலோகத்திற்கு கல்லூகபட்டு வியாக்கியானத்தில் சாஸ்த்ரோக்தமான புனர்விவாக மார்க்கத்தைவிட்டு வியபிசார தோஷத்தினல் க்ஷதயோனியானவர்களுக்கே அகந்ய என்று எழுதப்பட்டிருக்கிறது.

தவிர விதவைகளுக்கும் விவாகம் செய்யப்படவேண்டியவர்களுக்கும் ஸ்மிருதிகளில் "கன்னியா" பதத்தை உபயோகப்படுத்துவதுண்டு.

శ్లో॥ విధవాయాం భవేత్కన్యా నిర్దోషా భర్తృవర్జితా।
పిత్రావాసః పితుర్వేశ్మ సలజ్జా చైవ సర్వదా॥ పరాశరః.
కన్యాయాం దత్తశుల్కాయాం మ్రియతే యది శుల్కదః।
దేవరాయ ప్రదాతవ్యా యది కన్యానుమన్యతే॥ మనుః.

விதவாயா பவேத்கன்யா நிர்தோஷா பர்த்ரு வர்ஜிதா-
கன்யாவாஸ: பிதுர்வேஷ்ம லஜ்ஜா சைவ ஸர்வதா-
பராசர்.

கன்யாயாம் தத்தசுல்காயாம் ம்ரியதே யதி சுல்கத:-
தேவராய ப்ரதாதவ்யா யதிகன்யாநுமந்யதே - மநு

என்று பாராசர் மநு வசனங்களின்படி "கன்னியா" பதம் புனர் விவாகம் செய்யவேண்டியவர்களுக்கும் உபயோகப்படுத்தப்பட்டிருப்பதாலும் விதவை விவாகம்

மநு ஸ்மிருதியிலேயே விதிக்கப்பட்டிருப்பதாலும் கெட்டுப்போய்த் திரிகிறவர்களுக்கு மாத்திரம் விவாகமில்லையென்று மநு வாக்கியத்துக்கு கல்லூகபட்டரால் பொருள் செய்யப்பட்டது. மேற்சொன்ன பாராசர வசனத்தின்படி விதவையாகிவிட்ட கன்னியும், தோஷமற்றவளாய் பர்த்தாவினால் விட்டுவிடப்பட்டவளும் எப்போதும் பிதாவின் வீட்டில் வாசஞ்செய்ய வேண்டுமென்று சொல்லியிருப்பதால் தோஷமற்றவளான விதவையாய்விட்ட கன்னியை என்று விதவைக்கும் "கன்னியா" பதம் உபயோகப்படுத்தப்பட்டிருப்பதால் அவளுக்கும் அந்த மந்திரங்களாலேயே விவாகம் செய்யத் தகுந்தவளென்று தெரிந்துகொள்ளக்கூடியது.

மற்றுமோர் ஆட்சேபனைக்கு சமாதானம்.

శ్లో॥ సకృదంశో నిపతతి సకృత్కన్యా ప్రదీయతే।
సకృదాహ దదానీతి త్రీణ్యేతాని సతాం సకృత్॥

ஸக்ருதம்ஸோ நிபததி ஸக்ருத்கன்யா ப்ரதீயதே-
ஸக்ருதாஹ ததானீதி த்ரீண்யேதானி ஸதாம் ஸக்ருத்.

இந்த மநு வசனப்படி சொத்து பாகம் பண்ணுதல், கன்னிகையைக்கொடுத்தல், ஒருபொருளைத் தானஞ்செய்தல், இம்மூன்று காரியங்களும் ஒரே தடவைதான் என்று மநு சொல்வதால், மநு விவாகத்துக்கு அதே கன்னியை தத்தம்செய்தல் கூடாதென்றும் ஆகையால் ஸ்திரீயின் மறு விவாகம் நிஷேதிக்கப்பட்டதென்றும் வாதிக்கிறார்கள். இது பொது விதி. ஒருவனுக்கு கொடுத்துவிட்ட கன்னியை மற்றொருவனுக்கு இஷ்டம் போனபடி கொடுக்கக்கூடாதென்பது யதார்த்தமேயாயினும், விசேஷ விதியாகிய "நஷ்ட" த்வாதி ஐந்து ஆபத்துகளில் மறுதானம்

செய்யலாமென்று வெளிப்படை. சொத்தை தானம் பண்ணுதலும், பெண்ணை தத்தம் செய்து கொடுத்தலும் ஒரு தர்மத்தை நிறைவேற்றும் பொருட்டு செய்யும் உடன்படிக்கையாகும். நீர் இன்ன காரியம் செய்யும்பொருட்டு இந்த சொத்தை தானம் செய்கிறேனென்று சொல்லிவிட்டாலும், தத்தம் வாங்கிக்கொண்டவன் குறிப்பிட்ட தர்மத்தைச் செய்யாவிட்டால், தானம் கொடுத்தவன் அந்த சொத்தை மறுதானம் செய்யவோ அல்லது அக்காரியத்தை தன் சொந்த விசாரணையினால் செய்யும் பாத்தியதையை இழந்துபோகமாட்டானல்லவா? ஒரு கன்னியை ஒரு புருஷனுக்கு கிரகஸ்தாச்ரமதர்மம் நடத்த தத்தம் செய்யப்பட்டாள். அந்த இல்லற வாழ்க்கையை நடத்த "நஷ்டேம்ருதே" விதியிற் சொன்னபடி தவறிப்போனால் முன்னொடியே ஸ்மிருதியில் சொன்னவண்ணம் பிதா வீட்டில் வசிக்கும் விதவைக் கன்னியையும் பிதாவோ மற்ற பாத்தியஸ்தரோ, புநர் தானம் செய்விக்கலாமென்று தெளிவாகிறது.

இனி புராணங்களைப்பற்றி சிறிது ஆராய்வோம்.

பிரசித்திபெற்ற புராணமாகிய மகாபாரதப் பீஷ்ம பருவத்தில்:—சுபர்னன் என்பவனால் பர்த்தா கொல்லப்பட்டதின்பின், நாகதேசத்தரசன் புத்திரியாகிய உலூபி என்னும் விதவைப் பெண்ணை அர்ஜுனன் மறுவிவாகம் செய்துகொண்டான். அப்பெண்ணுக்குப் பிறந்த இராவதனென்னும் புத்திரன் ஔரசன் என்றே கருதப்பட்டான். அவ்விதவைப் பெண்ணை தகப்பனே மறுதானம் செய்தான். இவ்விதமாய் உத்தம அரசவம்சத்திலும் ஸ்திரீகளின் புநர் விவாகம் நடந்திருக்கிறதென்பது பிரசித்தம். (ஔரஸன் என்னும்பதம் சாஸ்த்

ரோக்தமாய் விவாகம் செய்யப்பட்ட ஸ்திரீயின் புத்திரனென்று பொருள்)

ஆரண்ய பர்வத்தில்:—காட்டில் நளமகாராஜன், தமயந்தியை விட்டுப்பிரிந்துபோன சிலகாலத்திற்குபின், தன் பர்த்தா ஜீவித்திருக்கிறாரோ இல்லையோ என்பதை தெரிந்துகொள்ள அந்தரங்கத்தில் எண்ணங்கொண்டு, அதை எவருக்கும் வெளிப்படுத்தாது மறுவிவாகம் செய்துகொள்ள இச்சையிருப்பதாக மகா பதிவிரதையாகிய தமயந்தி பகிரங்கமாய் இராஜசபைக்குச் சொல்லியனுப்ப இதை சுதேவன்மூலமாய் தெரிந்துகொண்ட ருதுபர்ணனென்கிற இராஜரிஷியும், மற்ற தேசத்து அரசர்களும் சுயம்வரத்துக்கு வந்திருப்பார்களென்று கருதி, தமயந்தியை மணம்புரியக் கோரியவராய் தாமும் வந்திருந்தாரென்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விரண்டாம் விவாகம் நடைபெறவிட்டாலும் பூர்வகாலத்தில் ஸ்திரீகளுக்கு மறுவிவாகம் செய்துவைப்பது வழக்கம் அல்லது ஆசாரமாயிருந்த தென்பதைத் தெளிவாய்க்காட்டுகின்றது.

மேற்சொன்னபடி சுருதிகளும் ஸ்மிருதிகளும் புராணங்களும் புனர்விவாகத்தை அங்கீகரித்திருக்கையில், எதிர்வாதிகள் ஆதித்திய புராணத்திலிருந்து ஒரு வாக்கியம் சொல்வதுண்டு. அதாவது

ఊఢాయాః పునరుద్వాహం జ్యేష్ఠాంశం గోవధం తథా।
కలౌ పంచ న కుర్వీత భ్రాతృజాయాం కమండలుం॥

ஊடாயா: புநருத்வாஹம் ஜ்யேஷ்டாம்சம் கோவதம் ததா- கலௌ பஞ்ச ந குர்வீத ப்ராத்ருஜாயாம் கமண்டலும்.

(முறைப்படி ஒருதடவை விவாகமாய் விட்டவளின் புனர் விவாகமும், மூத்த சகோதரனுக்குச் செல்லும் ஜேஷ்டாம்சமும், பசுவதையும், சகோதரனுடைய மனைவியிடத்தில் புத்திரனைப் பெறலும், சந்நியாசம் அடைவதும், கலியுகத்திற்கு விலக்கு என்று மேல்வாக்கியத்தின் பொருள்—இவ்வாக்கியம் மநு—நாரதர் — கலியுகத்துக்கு மேலான தர்மசாஸ்திர அதிகாரியாகிய பராசரர் இவர்களுடைய "நஷ்டேம்ருதே" விதிக்கு முரண்படுகிறது. தவிர இந்த வாக்கியம் மேற்சொன்ன புராணத்திலுள்ள வாக்கியந்தான் என்று ஒப்புக்கொண்டாலும், முதல் முதலிலேயே விளக்கியபடி சுருதி ஸ்மிருதிகளை விரோதிப்பதால் இப்புராணவாக்கியம் த்யஜிக்கத்தக்கதேயாகும். தவிர இதில் விலக்கப்பட்டிருக்கும் கோவதையாகங்களும், சந்நியாசமும் நாளதுவரையில் நடந்தேறி வருவதால், மற்ற மூன்று விலக்குகளுக்குமட்டும் வலுவெங்கே இருக்கிறது? தவிர இந்த ஆதிபுராணம் பாகவதத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள புராணங்களில் ஒன்றல்லவென்றும், இவ்வாக்கியம் எவராலோ எழுதிப் பழைய ஏட்டுச்சுவடிகளில் சேர்க்கப்பட்டுள்ள ஆதாரமற்ற தனிவாக்கியமென்று பெரியார்கள் சொல்லியுள்ளார்.

எதிர்வாதிகள் கேட்கும் சிலசொற்ப கேள்விகளுக்கும் பதில் அளித்துவிட்டு இம்மட்டோடே நிறுத்திக் கொள்வோம்.

1. ஒரு தகப்பனுக்கு பிரதமவிவாகத்தில் செய்துகொண்ட கன்னிகையின் புத்திரர்களுக்கும் இரண்டாம் விவாகத்தில் செய்துகொண்ட விதவை ஸ்திரீயின் புத்திரர்களுக்கும் தாய பாகம் எப்படியென்று

கேட்கிறார்கள். இந்த இரண்டு பத்னிகளும் சாஸ்த்ரோக்தமாய் விவாகம் செய்துகொண்டவர்களாகையால், எல்லா புத்திரர்களுக்கும் சமதாய பாகந்தானென்று நம்துரைத்தனத்தாரும் 1856 ஹிந்திய 15 ஸெ. சட்டத்தில் விதித்திருக்கிறார்கள்.

2, 3. விதவைகளை, புநர் விவாகத்துக்கு தத்தம் செய்பவர் எவர்? மந்த்ரங்களேவை? என்னும் கேள்விகளுக்குத் தகப்பனும் அது மிறப் பெற்றவர்களும் பந்துக்களும் தானம் செய்யலாமென்றும், வியபசார தோஷமற்ற விதவைஸ்திரீகளும் "கன்னியா" பதத்தால் வழங்கப்பட்டிருப்பதால் இருவருக்கும் ஒரே மந்திரமே உபயோகிக்கலாமென்றும் மேலே விவரித்திருக்கிறேன். நம் துரைத்தனத்தாரும் அவ்வண்ணமே அந்த சட்டத்தில் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

4. பூர்வ பார்த்தாவின் சிரார்த்தத்தை யார் செய்வதென்னும் கேள்விக்கு உத்தரம்:—

சந்தானமிருக்கும் பட்சத்தில் கேள்விக்கு இடமே இல்லை. சந்தானமில்லாவிட்டால்

[illegible]
[illegible]

அபுத்ரா சயனம் பர்த்து: பாலயந்தி வ்ரதே ஸ்திதா।
பத்ந்யேவ தத்யாத் தத்பிண்டம் க்ருத்ஸ்ன
மம்சம் லபேத ச.

என்கிற விஷ்ணுஸ்மிருதி வசனப்படி, சந்தானமற்றவள் தன் இறந்துபோன பர்த்தாவின் படுக்கைக்குப் பங்கம் வராமல் பிரமசரிய விரதத்தை வழுவாது அநுஷ்டித்துப் பர்த்தாவுக்கு பிண்டப்பிரதானம்செய்து அவன்

சொத்தை அடையவேண்டுமென்று விதித்திருப்பதால், அந்த ஸ்திரீ, பிரம்மசரிய விரதத்தைவிட்டு, மற்றொருவனை கிரமமானபடி விவாகம் செய்துகொண்டால் சிரார்த்தம் செய்யவேண்டியதில்லையென்று தெளிவாகிறது. அவளே இறந்துபோனால் சிரார்த்தம் நடக்கமாட்டாதல்லவா? அதுபோலவே, அவள் புநர் விவாகம்செய்துகொண்டால், வேறொரு கோத்திரத்தையும் அடைவளாகையாலும், முதல் பர்த்தாவின் குடும்பத்தை பூராவாய் விட்டு புது சம்ஸ்காரமாகிய விவாகத்தைச் செய்துகொள்வதால், பூர்வ பர்த்தாவின் சொத்து பாத்தியதை விட்டுப்போகும். தத்துப்போய்விட்ட புத்திரனுக்கே சிரார்த்தம் செய்யவேண்டிய கடமையும் சொத்து பாத்தியதையும் போய் விடுகிறதென்றால், புநர் விவாகம் செய்துகொண்ட விதவைப் பெண்ணுக்கும் சிரார்த்தம் செய்யவேண்டிய கடமையும் சொத்து பாத்தியதையும் இல்லாமற் போய்விடுகிறது. சொத்தை அடைவதற்கு சிரார்த்தம் செய்வதே யொழிய அநேகம்பேர் பிரமிக்கிறபடி இறந்துபோனவன் ஆத்மாவின் உஜ்ஜீவனார்த்தமல்லவென்று தெளிவாயிருக்கிறது.

5. கோத்திரத்தைப்பற்றி பலபேர் கேட்கிறதுண்டு. சுருங்கச் சொல்லில், கன்னியாதானமும், புநர்தானமும் தகப்பன் எந்த கோத்திரனோ அந்த கோத்திரப் பெயரால்தான் அவசியமாய்ச் செய்யவேண்டியது. கோத்திர சப்தத்தை விசாரிக்கில் இந்த சந்தேகத்துக்கு நியாயமில்லை. ஜமதக்னி, பாரத்வாஜர், விசுவாமித்திரர், அத்திரி, கௌதமர், வசிஷ்டர், காசியபர், அகஸ்தியர், இவர்கள் கோத்திர கர்த்தாக்கள். இவர்களில் எந்த ரிஷி கோத்திரத்தில் பிறந்தவர்களோ அந்த கோத்திரத்தை யடைவார்களாகையால், பிதாவின் கோத்திரத்

தையே புத்திரியும் அடைவாளென்பதற்கு யாது சந்தேகம்?

ஸ்லோ॥ స్వగోత్రాద్భ్రశ్యతే నారీ వివాహాత్ సప్తమే పదే।
పతిగోత్రేణ కర్తవ్యా తస్యాః పిండోదకక్రియా॥

ஸ்வகோத்ராத் ப்ரச்யதே நாரீ விவாஹாத் ஸப்தமே பதே- பதிகோத்ரேண கர்த்தவ்யா தஸ்யா: பிண்டோதக க்ரியா.

ஒருவனுடைய புத்திரி, சப்தபதி சடங்கின் அனந்தரம் தன் கோத்திரத்தை விட்டுவிட்டு, பதியின் கோத்திரத்தை அடைகிறபடியால், அவள் கணவனுக்கு சிரார்த்த பிண்டோதகக்கிரியைகளை செய்யும்போது, பதியின் கோத்திரத்தால் செய்யவேண்டும். ஆயினும், தான் பிறந்த கோத்திரம் அவள் சாகுமட்டும் இயற்கையிலேயே அவளிடத்தில் அமைக்கப்பட்டிருப்பதால், விவாகிதஸ்திரீ, தன் தகப்பனுக்கு சிராத்தாதிகள் செய்வதற்கு அர்ஹை ஆகிறாள். மறுவிவாகம் செய்து கொண்டவள் அவ்விரண்டாம் பதியின் கோத்திரத்தை அடைவாள்.

ஸ்லோ॥ అముష్య పౌత్రీం అముష్య పుత్రీం అముష్య గోత్రజాం।
ఇమాం కన్యాం వరాయాస్మై వయం తుభ్యం వృణీమహే।
ప్రీత్యర్థం పితృభ్యో బ్రాహ్మణా దస్మై కన్యాం ప్రదాయతః॥

அமுஷ்ய பௌத்ரீம் அமுஷ்ய புத்ரீம் அமுஷ்ய கோத்ரஜாம் இமாம் கன்யாம், வராய அஸ்மை, வயம் தக்ஷி ஸ்ருஷ்டிமதோ ஸ்ருஷ்டி திவ்ய ப்ருயா: தலோன கன்யா ப்ரதாயத:

என்று சொல்லப்பட்டபடி தத்தம் செய்யப்படுகிறவள், இன்னாருடைய பௌத்திரி, இன்னார் புத்திரி, இன்னார் கோத்திரத்தில் பிறந்தவளாயிருக்கும், இந்தப் பேர்

கொண்டகன்னிகை, இந்த இந்த விபரங்கள் கொண்டவனுக்குக் கொடுக்கிறேன் என்று சர்வத்திரான் முன் வாக்கிடவேண்டியிருக்கிறதாகையால், விவாகஞ் செய்ததினால் மட்டும், ஒரு ஸ்திரீ, பாட்டனுக்கு பேத்தியும், தகப்பனுக்கு புத்திரியுமாகும் கோத்திரத்திற் பிறந்த இயற்கைக் கோத்திரம், போய்விடமாட்டாதாகையால், விதவை ஸ்திரீயின் புநர் விவாகமும் தகப்பன் கோத்திரப் பேரால்தான் புநர்தானம் செய்ய வேண்டியது

6. முண்டனம் (அதாவது விதவைகளை மொட்டையடித்தல்) பதியை இழந்தவளுக்கு பத்தாம்நாள் மொட்டை யடித்துவிடவேண்டுமே? புநர் விவாகம் செய்யும் ஸ்திரீக்கு மொட்டையடிக்கக் கூடாதென்று எங்கேயாவது விதித்திருக்கிறதா? வென்று பலர் கேட்கிறார்கள். ஸ்திரீக்கு பத்தாந்தினம் மொட்டையடித்தல் லௌகிகமே தவிர ஸ்மிருதி சம்மதியுள்ளதல்ல. மொட்டை யடிப்பதற்கு விதிக்கும் மந்திரங்கள் எங்கும் காணவில்லை. ஸ்திரீகளுக்கு மொட்டையடித்தல் தகாதென்று அநேக ஸ்மிருதிகள் கோஷிக்கின்றன:—

ஸ்லோ॥ సర్వాన్ కేశాన్ సముద్ధృత్య ఛేదయేత్ అంగులద్వయం।
ఏవం నారీ కుమారీణాం శిరసో ముండనం స్మృతం।
న స్త్రియాః కేశవపనం న దూరే శయనాసనం।
న చ గోష్ఠే వసేద్రాత్రౌ న దివా గా అనువ్రజేత్।
నదీషు సంగమే చైవ అరణ్యేషు విశేషతః॥
న స్త్రీణామజినం వాసో వ్రతమేవ సమాచరేత్॥

ஸர்வான் கேசான் ஸமுத்ருத்ய சேதயே தங்குல த்வயம் ஏவம் நாரீ குமாரீணாம் சிரஸோ முண்டனம் ஸ்ம்ருதம்

நஸ்த்ரியா: கேசவபநம் நதூரே சயநாஸநம்
நசோஷ்டே வஸேத்ராத்ரௌ நதிவாசா அநுவ்ரஜேத்
நதீஷு ஸங்கமே சைவ அரண்யேஷு விசேஷத:
ஸ்த்ரீணமஜினம் வாஸோ வ்ரத மேவ ஸமாசரேத்.

என்று 9-வது அத்தியாயத்தில் கலியுக தர்மாதிகாரியாகிய பாராசரமகரிஷி ஸ்திரீகளுக்காகட்டும் பாலிய விதவைகளுக்காகட்டும், எவ்விடத்திலாவது மொட்டையடித்தலை விதித்திருக்கும் பட்சத்தில், தலைமயிரையெல்லாம் விட்டுவிட்டு நுனியில் இரண்டு அங்குல மாத்திரந்தான் அறுத்துவிடவேண்டுமென்றும், பிரமசரிய முதலான விரதங்களில் ஸ்திரீகளுக்கு எப்போதும் மொட்டையடித்தல் கிடையாதென்றும் தெளிவாய்ச்சொன்னார்.

தென்கலை வைஷ்ணவப் பிராமணர்கள் விதவை ஸ்திரீகளுக்கு முண்டனம் செய்வதில்லை என்பது எவருக்கும் தெரிந்ததே.

7. கடைசியாய் புநர்பு பதத்தின் மெய்யான கருத்தை ஆராய்வோம்

சிலர் இதுவரையில் சொன்னவைகளை எல்லாம் அங்கீகரித்து, ஸ்திரீகளின் புநர் விவாகம் சாஸ்திர சம்மதியுள்ளதுதானென்றும் ஒப்புக்கொண்டு, மறுவிவாகம் செய்துகொண்டவர்களின் சந்ததியார், தாழ்ந்த வகுப்பினரென்றும், பந்திபோஜனத்துக்குத் தகாதவர்களென்றும், அவர்கள் வேறு ஜாதியாராயிருக்கவேண்டுமென்றும், தெரியாதவர்களை பயமுறுத்தி வருவார்கள். இவர்கள் சாஸ்திரங்களின் உண்மையான கருத்தை அறியாதவர்கள். புநர்பூ லட்சணத்தை ஒரு ஸ்மிருதியிலிருந்தும்

அதன் தூஷணத்தை மற்றொரு ஸ்மிருதியிலிருந்தும் மனம்போன போக்கெல்லாம் பேசுபவர். ஒரு சிறு பெண்ணை இன்னாருக்குக் கொடுக்கலாமென்று மனதினாலும், வாக்கினாலும், நீர்வார்த்ததினாலும், தத்தமாய் விட்டவர்களின் புத்திரரும், விவாக காலங்களில் மங்கலஸ்தானமட்டுமாகி மணவாளன் இறந்துபோய், வேறொருவனை மணம் புரிந்து அவளுக்குப் பிறந்த புத்திரர்களும், "புநர்பு"களென்றும் "பௌனர்பவபுத்திர"ராவாரென்றும் சயபோஜன பந்திக்கு தகுதியற்றவர்களென்றால் உலகத்தில் யார்தான் தோஷமற்றவர்கள் ஆவார். இக்கேள்விக்கு சமாதானமே வேண்டியதில்லை. காப்பிக்கடைகளும் போஜன சாலைகளும் பதிலளிக்கும் கலியுக தர்மகர்த்தாவாகிய பாராசரர் "நஷ்டம்ருதே" வசனத்தில் ஸ்திரீகளின் புநர்விவாகத்தை விதித்து பௌநர்பவ புத்திரர்களைப் பற்றி எங்கும் சொல்லாததால் இக்கலியுகத்தில் இவ்விவகாரத்துக்கே இடமில்லை. விதவையை மணம் புரிந்த அர்ஜுனனின் புத்திரன் ஔரசாகவே இருந்தானென்பதே போதுமான அத்தாட்சியாகும். விபசாரவழியிற் பிறந்த புத்திரனும், ஈன்றதாயும், புநர்பூகளென்று கருதப்படலாமேயொழிய கைம்பெண்களாயினும் சாஸ்திரோக்தமாய் புநர் விவாகம் செய்துகொண்டு அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் ஒருநாளும் தூஷணைக்குட்பட்ட புநர்பூ மக்களாக மாட்டார்கள். ஆகையால்தான் நம் துரைத்தனத்தாரும் சமமான தாயபாகத்தை விதித்திருக்கின்றார்கள். இவ்வளவோடு விடைபெற்றுக்கொள்ளுகிறேன். அதிக விவரங்களை கேட்க விரும்புவோர், பண்டித ஈசுவர சந்திர வித்யாசாகரரும், ராயபகதூர் வீரேசலிங்கம் பந்துலு அவர்களும் திருவிதாங்கோடு வக்கீல் சேஷய்யங்கார்

அவர்களும் எழுதியுள்ள சாஸ்திரங்களைப் படித்து சகல சந்தேகங்களும் தெரிந்துகொள்ளலாம்.

மேற்சொன்ன வண்ணம் ஈசுவரன் நமக்களித்திருக்கும் ஞானபலத்தாலும், வேத சாஸ்திர புராணங்களாலும், கைம்மையர்களின் புநர் விவாகம் அங்கீகரிக்கத்தக்கதென்று எல்லோரும தெரிந்துகொண்டிருக்கலாம். ஆனால் சாஸ்திரங்களுக்கு, தமக்கிஷ்டம் சேர்ந்தபடி, யுக்திக்கும் அநுபவத்துக்கும், பொருந்தாத பொருள் கூறும் மதாசாரிகளும் பண்டிதர்களும் அநேகம் பேரிருக்கலாம். அநேக ஆக்ஷேபணைகளைச் சொல்லலாம். இப்படிப் பேசுவோர் உலக ஞாயமற்றவர்கள் ஆவார். இவ்வுலகத்தில் என்னென்ன தேசங்கள், என்னென்ன சமுத்திரங்களிருக்கின்றனவென்றும், முக்கியமான மதங்களெவை யெவையும் அவைகளின் ஆசாரமின்னதென்றும் தெரிந்துகொள்ளாதவர்கள்.

நாம் அநுஷ்டித்துவரும் ஆசாரத்தால் நம்மவர்களில் 2½ கோடிக்கு மேற்பட்ட விதவைகள் இருக்கின்றனரே! இவர்களெல்லோருக்கும் புநர் விவாகங்கள் செய்து வைத்திருப்போமானால் நம்மவர் ஜனசங்கியை குறைந்து ஜனதேசமே படைத்திராதே யென்று எவரும் நினையாதவர்கள் இந்த ஆசாரத்தால் நம்மவரின் ஜனசங்கியை குறைந்துகொண்டு போவதையும், இதர மதஸ்தர் விருத்தி யடைகிறதையும் கவனியாதவர்கள் தர்ம சாஸ்திரியாரிய மநு விதித்தவண்ணம் காலப் போக்கை யநுசரித்து நம்மவரின் க்ஷேமத்துக்கேற்பட்ட மாறுதல்கள் செய்துகொண்டு போகவேண்டுமென்ற எண்ணமும், ஞானதிருஷ்டியுமில்லாதவர்கள். ஆசாரியாளின் புத

முப்படி சாஸ்திரங்களுக்கும் யுக்திக்கும் அநுபவத்திற்கும் பொருந்தாத விபரீத அர்த்தங்களைக் கற்பனையாய்ச் சொல்லுவார்கள். புது விதிகளைச்செய்து பழைய வட்டோடு சேர்த்துவிடுவார்கள். தம் விவாதத்திற்குப் பிரதிகூலமாயிருக்கப்பட்ட விதிகளை அப்புறப்படுத்திவிடுவார்கள். காலத்திற்குத் தக்கவாறு கருமங்களை விவேகித்துக்கொண்டு போவதை விட்டு, தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்கள்தானென்று பிடிவாதமாய்ப் பேசுவார்கள். தூங்குகிறவர்களை யெழுப்ப முடியுமே தவிர, விழித்துக்கொண்டு தூங்குகிறவர்களாய்ப் பாசாங்கு செய்யுமவர்களை யெழுப்ப முடியாதாகையால், இலௌகீக ஞான சூனியர்களான ஆசாரிமான் பண்டிதர்களின் ஆக்ஷேபணைகளைப் பொருட்படுத்தாமல் நாம் முன்னடையும் மார்க்கத்தைச் செய்யவேண்டும்.

(ii) இரண்டாவது கேள்வி:—இத்தீய வழக்கத்திற்கு மூலகாரணமேது?" என்பதற்கு விடை.

துவாபரயுகம் முடியும்வரையில், ஸ்திரீகளின் புநர் விவாகம் நடந்து வந்ததென்பதற்கு அர்ஜுனன் விதவைஸ்திரியான "யுலூபி" என்பவளை விவாகம் செய்துகொண்டு ஐராவதனென்ற புத்திரனைப் பெற்றதே திருஷ்டாந்தமாகும். துவாபரம் முடியும் வரையில் நடந்த விவாகங்கள் கலியுகத்தில் நின்று போவதற்குப் போதுமான கஷ்டம் தேசத்திற்கு என்ன உண்டாயிற்றென்று விசாரிக்குமளவில், அதற்கு மகா பாரதயுத்தமே காரணமாய்த் தோன்றுகின்றது. இந்த யுத்தம் நடந்தகாலத்தில் இவ்விந்து தேசத்தின் அரசர்களெல்லோரும் தங்களுடைய சேனைகளுடன் ஏதோ ஒரு கக்ஷியைச்சேர்ந்து யுத்தம் செய்தார்களென்றும், பதினெட்டு

அக்ரோணி சைன்யங்கள் நாசமடைந்தனவென்றும் பாரதம் வாசித்த எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. கௌரவர்களுடைய கக்ஷியில் சேனாதிபதிகளாயிருந்த துரோணர், கிருபர், அஸ்வத்தாமா முதலானவர்கள் சண்டை செய்திருப்பதால் இரு கக்ஷியிலும் அநேக பிராமணர்களும் இறந்தார்களென்றும், யுத்தம் செய்தவர்கள் பாலியரும் கிழவர்களும் தவிர, சம்பிரயத்தோடு கூடியவரே இலக்ஷக்கணக்காய் மடிந்தார்களென்றும் தெரிகிறது. புருஷர்களெல்லோரும் யுத்தத்தில் இறந்தபடியால் இத்தேசத்தில் அக்காலத்தில் புருஷ சங்கியை குறைவு பட்டுப்போயும், விதவை ஸ்திரீகளும் அதிகமாய் விட்டார்களென்பதற்குஞ் சந்தேகமில்லை. இந்த தேச உபத்திரவத்திற்குத்தக்க பரிகாரம் ஏற்படுத்த வேண்டிய அவசியமேற்பட்டதால், வேதசாஸ்திரங்களைக் கற்றுணர்ந்த பெரியாரனைவரும் சபைகூடி ஆலோசித்து அப் புருஷப் பிரஜைகளைக் காப்பாற்றும்பொருட்டு, பிரயாணத்தில் அபாயத்தை விளைக்கக்கூடிய சமுத்திர யாத்திரையை நிறுத்தியும், கிரகஸ்தாஸ்ரமமென்கிற இல்லற வாழ்க்கை முடிந்த பின்னர் ஆதிகால இக்ஷுக்கள் ஆரண்யங்களுக்குப் போய் வாசஞ்செய்து அனுஷ்டித்து வந்த சந்நியாசி ஆஸ்ரம நிலைமையையும் நிறுத்தியதோடு சிறிதுகாலமாகிலும் விவாககத்தை அநுபவித்த விதவைகளின் விவாகத்தை நிறுத்தியும், கன்னிகைகளுக்கு மட்டும் விவாகம் நடத்தவேண்டுமென்றும் விதித்துக் கன்னியாஸ்திரீகளின் இரக்ஷணம் பண்ணினார்கள். இப்பேர்ப்பட்ட ஏற்பாட்டை அப்போது செய்யாமலிருந்தால், புருஷர்கள் பொதுவாய்த் தமக்கு உடன் பயன் கொடுக்கும் விதவைகளை மட்டும் விவாகம் செய்துகொள்வார்களாகையாலும், எப்போதோ ஒரு

காலத்தில் குடித்தனத்திற்கு உதவக்கூடிய இளம் கன்னிகைகளை மணம் புரிய இஷ்டப்பட மாட்டார்களாகையாலும், பரிசுத்த நிலைமை வாய்ந்த தோஷமற்ற கன்னிகைகளுக்கு விவாகமாகாமல் விபசார தோஷம் உண்டாகுமாகையாலும், இந்தக் கஷ்டத்தை நிவர்த்தி செய்வதற்காகச் சிறிதுகாலமாவது சுகப்பட்டு ஆறினவர்கள் விபசாரத்தில் இறங்காமலிருக்கக் கூடுமாகையாலும், அவ்விதவைகளின் விவாகத்தைநிறுத்திக் கன்னிகைகளுக்கும் வாலிபர்களுக்கும் பெரியார் விவாகங்களை ஏற்பாடு செய்ய நேர்ந்தது.

விபசாரதோஷம் பெரும்பாவமானதென்று சாஸ்திரங்கள் வற்புறுத்துவதால், அப்பாவத்தைத் தடுக்கும் பொருட்டு, கணவன் இறந்த பின்னும் விபசாரம் செய்யாமல் பரிசுத்தமாயிருக்கும் கைம்மையர்கள் தங்கள் பர்த்தாக்களின் லோகத்தை அடைவார்களென்றும் விதித்தார்களென்பது திண்ணம். அக்காலத்தில் இதைவிட வேறு எது ஏற்பாடு செய்யக்கூடியதிருந்தது. கொஞ்ச காலமாகிலும் சுகத்தை அநுபவித்த 30 வயதுள்ள ஒரு பெண்ணும், 12 வயதுள்ள ஒரு கன்னிகையுமிருந்து விவாகம் செய்துகொள்ளப் புருஷன் ஒருவன் மட்டும் கிடைத்தால், விவேகியாயிருக்கப்பட்ட ஒரு பெரியார் வயது முதிர்ந்தவளை நிறுத்திக்கொண்டு கன்னிகைக்கு விவாகம் செய்து வைக்காமலிருப்பாரா?

அக்காலத்துப் பெரியார் எவ்விதத்தில் புருஷர்கள் நம் தேசத்தை விட்டுப் போகாமலிருப்பரோ, வீணாகாமல் எவ்விதமிருந்தால் இல்வாழ்க்கைக்கு வருவாரோ, அக்காலத்துக்குத்தக்கபடி பிரபந்தனங்களையும், கட்டுப்பாடுகளையும் செய்தனர். அக்காலத்தில் அக்கட்டுப்

பாடுகள் நியாயமாகத்தான் ஏற்படுத்தப்பட்டன. ஆயினும் இந்தக் கட்டுப்பாட்டுக் கிசையாமல் பூர்வ அநுஷ்டானமே தகுதியானதென்று நினைத்து, பூனா முதலானவிடங்களில் சில ஜாதியாரும், ஆந்திர தேசத்திய யாதவரும் மற்றும் அநேக தென் ஜில்லாக்களிலுள்ள குரும்பர், கள்ளர், மறவர் முதலான வகுப்பினரும், புநர் விவாகம் செய்துகொண்டு சுகமடைந்து வருவதை நாம் பிரத்தியட்சமாய்ப் பார்க்கிறோமல்லவா? இதனால் பூர்வகாலங்களில் இவ்விந்து தேசத்தில் கைமையர்களுக்கு மறுமணஞ்செய்வது ஆசாரமாயிருந்ததென்பதற்குப் பிரத்தியட்சப்பிரமாணமாகும் என்பதை எவரும் கவனிக்கத்தக்கது.

இக்காலத்தில் மேற்சொன்ன தேச உபத்திரவங்களில்லாமற் போய்விட்டபடியாலும், விதவைகளுள் புநர் விவாகம் அற்றதால் முதல் அத்தியாயத்தில் விவரித்துச் சொல்லிய வண்ணம் அநேக அனர்த்தங்களும் மானக்கேடுகளும், சிசுஹத்தி முதலான கொடிய பாவங்களும் விஸ்தாரமாய் நடக்கிறபடியாலும், இக்காலத்தில் சமுத்திர யாத்திரை, சந்நியாசம், முதலிய வழக்கங்களைத் தழுவி வருவதோடு விதவைகள் புநர் விவாகங்களும் செய்துவருகிறபடியால் நாமும் அவ்வண்ணமே செய்து நம் ஆதிகால வாழ்வின் பெருக்கை நிலைநாட்டவேண்டும்.

பாருங்கள்! சென்ற சில ஆண்டுகளுக்கு முன் நடந்த மகா யுத்தத்தில், புருஷ சங்கியை குறைய இங்கிலாந்தில் யுத்த களத்தில் நிற்கும் புருஷர்களின் இல்லிலுள்ள அவர்களின் ஸ்திரீகள் அக்காலங்களில் கர்ப்பிணிகளாகி, குழந்தைகளை ஈன்றெடுத்தால் அக்குழந்தைகள் தங்கள் தங்கள் கணவர்களுக்குப் பிறந்த

உரிமையையுடையதே என்ற (Naturalisation Act) என்கிற சுதந்திர உரிமைச் சட்டத்தை ஏற்படுத்தவில்லையா? இது அறிவீனமாகுமா? இதுவிஷய ஞானமாகி இலௌகிக தருமத்திற்கு எடுத்ததல்லவா? இப்படி ஏற்படுத்தியதால் எவ்வளவு கஷ்ட நஷ்ட நிஷ்டூரங்களைப் போக்கியுள்ளார்களென்பதை ஏ புத்திமான்களே!

நீவிர் இங்கு அறியற்பாலது. அப்படியுமல்ல நான் இதுவரையிலும் சொன்னது, இஷ்டப்பட்டவர்களுக்கு வேதோக்தமான புநர் விவாகந்தானே. வியபிசாரம் வெறுக்கத்தக்கதல்லவா?

(iii) வெகுகாலமாய் அநுஷ்டித்து வந்த இவ்வாசாரத்தை மாற்றிக்கொள்ளலாமா? என்னும் மூன்றாம் கேள்விக்கு உத்தரம்.

ஶ்லோ॥ [illegible]
[illegible]

பரித்யஜேதர்மகாமௌயௌ ஸ்யாதாம் தர்மவர்ஜிதௌ
தர்மம் சாப்யஸுகோதர்க்கம் லோக விக்ருஷ்டமேவச॥

என்ற சுலோகத்தில் மநுவானவர் இவ்வுலகத்துக்கு சுகமற்ற தருமங்களை விட்டுவிடலாமென்றும், அவ்வக்காலத்திற்கு அநுகூலமாயிருக்கும் தருமங்களை ஆசரிக்கலாமென்றும் கட்டளையிட்டிருப்பதால், இக்காலத்து நிலைமையை அநுசரித்து நாம் தக்க ஏற்பாடுகளைச் செய்துகொள்ளலாமென்று பண்டிதர் ஈஸ்வர சந்திர வித்தியாசாகரரும், இராஜமகேந்திரவரம் வீரேசலிங்க பந்துலு அவர்களும், வெகு பிரயாசைப்பட்டு ஜனங்களுக்கு சாஸ்திரத்தைத் தெளியக் காட்டி அவர்கள் கண்களை விழிக்கச்செய்ததோடு, ஸ்திரீ புநர் விவாகங்களையும் செய்து

வைத்தார்கள். அவர்கள் வழியை அநுசரித்து சபைகள் ஏற்பட்டு இப்போது ஆயிரக்கணக்கான விதவை மக்களின் புநர் விவாகங்கள் நடந்தேறி வருகிறது. ஸ்திரீ தாயபாக விஷயத்தைப் பற்றியும், விதவைகளின் புநர் விவாகம் சாஸ்திர சம்மதமானதென்றும், பிரதம விவாக மந்திரங்களே இரண்டாவது விவாகத்துக்கு உபயோகப் படுத்தலாமென்கிற விஷயத்தைப்பற்றியும், நம்முடைய கவர்ன்மெண்டார் 1856-ம் ௵ 15-வது சட்டப்படி விதித்திருப்பதால், நம்மவரின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்கும், நமக்குக் கடவுள் அநுக்கிரகித்திருக்கும் ஞானத்தை உபயோகப்படுத்தி நம் ஜன சமூகத்தின் முன்னேற்றத்தைக் கருதி தோஷமற்றதும் சாஸ்திர சம்மதமான விதவை ஸ்திரீகளின் புநர் விவாகத்தை நம் இளங்கைம்மை மக்களுக்குச் செய்துவைக்கவேண்டுமென்று நான் தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேற்கூறிய வண்ணம் ஸ்திரீ புநர் விவாகத்தை சகலதர்ம சாஸ்திரங்களும் அங்கீகரிப்பதால், கெட்டுப்போன தர்மங்களை மறுபடியும் நிலைநாட்ட வேண்டுமென்றே யானிதுவரையில் சொன்னதெல்லாமென்றும், வியபசாரம் தடுக்கத்தக்கதென்றும் எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தக்கது.

முடிவுரை.

பண்டித சிரோன்மணிகளுக்கும் மடாதிபதிகளுக்கும் அரசியலியக்கத் தலைவர்களுக்கும் அடியேன் நமஸ்கரித்துத் தாழ்மையாய்ச் செய்துகொள்ளும் விஞ்ஞாபனம்:—

உலகத்தின் முன்னேற்றத்திற்காக அவ்வக்காலங்களை யநுசரித்து உலக சுக்ஷேமார்த்தமாய்த் தருமங்களை விவேகித்துக்கொண்டு போகவேண்டுமென்று மநுவே விதித்திருப்பதாலும், நம்முடைய இந்த தேசத்தில் 2½ கோடிக்கு மேற்பட்ட ஸ்திரீகள் விதவைகளாய்ப் புநர் விவாகமில்லாமல் காம இச்சையால் பெரும்பாலோர் ஜாதிமத பிரஷ்டர்களாய் விடுவதாலும், பிராம்மண க்ஷத்திரிய, வைசிய, சூத்திர ஜாதிகளில் ஒவ்வொரு குடும்பத்தாரும் சந்தானக்குறைவால் நாளடைவில் க்ஷீணித்துப் போய்க் கொண்டிருப்பதாலும், இந்து மதஸ்தர்களின் ஜனசங்கியை குறைந்துகொண்டு போவதால், இந்துமதமே மறைந்து போகுங்காலம் நெருங்கி விடுமாகையாலும் ஆரிய சாஸ்திரங்களுக்குப் பிரத்தியக்ஷவிரோதமாய்த் துர்வியாபாரங்கள் நடந்துகொண்டிருக்கும்போது கண்களால் பார்த்துக்கொண்டும், பார்த்தும் பேசாமலிருக்கும் நீங்கள், இந்த அநாத பாலியவிதவை மக்களின் விஷயத்தில் மட்டும் உங்கள் பண்டிதத் திறமையைக் காட்டித் துராபிமானிகள் புகழும்படி சாஸ்திரங்களுக்கு யுக்தி அநுபவங்களுக்குப் பொருந்தாத அர்த்தங்களைக் கற்பித்து, இளங்கைம்பெண்களின் சுகத்திற்கு இடையூறுகள் உண்டாக்கி அதனால் அவர்களை அநேக துஷ்கருமங்களில் இறங்க உங்கள் வித்வ சக்தியை உபயோகப்படுத்தலாமா? ஒரு சிறிய குருவியின்மீது பிரம்மாஸ்திரத்தை

எப்படிபோல, எத்தனை காலமோ கஷ்டப்பட்டுப்படித்த வித்தை முழுவதும் புருஷனையிழந்த திக்கற்ற விதவைப் பெண்மக்களின்மீது தானு உபயோகிக்கவேண்டாமோ? வித்தையின் பலத்தால் திக்கற்ற விதவைப் பெண்களை ஜனஸ்திதியிலிருந்து நிவர்த்திசெய்து அவர்களைக் காப்பாற்றும் பொருட்டு உங்கள் திவ்ய சக்தியை உபயோகிக்கலாகாதா? வியாசர், பராசரர், ஜமதக்னி, பாரத்வாஜர், விசுவாமித்திரர், அத்திரி, கௌதமர், வசிஷ்டர், காசியபர், அகஸ்தியர் முதலான உத்தம ரிஷிகளின் சந்ததியாராகிய நீங்கள் உங்கள் மக்களையும் சகோதரிகளையும் அநேக நூற்றாண்டுகளாகச் சிறையில் வைத்திருப்பது போதாதா? உங்கள் அடியை பற்றி, உங்களுடன் ஒன்றி வாழ்ந்துவரும் க்ஷத்திரிய, வைசிய, சூத்திர ஜாதியாராகிய எங்களுடைய சகோதரிகளும் மக்களும் உங்கள் சகோதரிகளைப் பின்பற்றியே சிறைவாசம் செய்து வருகிறார்களே; அவர்கள்மீதும் உங்கள் தயையைப் பாராட்டலாகாதா? பெண் என்றால் பேயுமிரங்குமே! உங்கள் மனம்மட்டும் உருகவில்லையே! "பாம்பானது தன் தலைமீது தானே மண்ணை இறைத்துக் கொள்வதைப்போல மகாபாரதப்போரால் உண்டான தேசோபத்திரவத்தை நிவர்த்திக்கும்பொருட்டு அக்காலசாத்தியமாய்ச் செய்த கட்டுப்பாட்டைமறந்து அதைப்பாராட்டுவதைவிட்டு. பிற்காலத்துப்பெரியார் வேத விரோதமான தங்கள் அனுஷ்டானத்தைக் கண்டு பயந்து, விவேகத்தை இழந்து, அதை ஸ்திரப்படுத்தும் பொருட்டு பழைய ஏடுகளை யப்புறப்படுத்தியும், புதிய ஏடுகளைச் சேர்த்தும் தங்களைத்தாங்களே ஏமாற்றிக்கொண்டார்களே! இந்த அக்ஞானத்தை நிவர்த்தி செய்வதற்கு உங்கள் திவ்ய சக்தியை உபயோகிக்கலாகாதா? சாந்தகுணத்தோடு வாழும் நம்மவரை

காப்பாற்றும் பொருட்டு ஈசுவர அனுக்கிரகத்தால் சகல சாம்ராஜ்ய பதவியை யடைந்து, நம்மைக்கருணையோடு ஆளும் நமது துரைத்தனத்தார், நம்முடைய சமூக அபிவிருத்தியின் பொருட்டு நம் விதவை மக்கள் உடன் கட்டையேறும் கொடிய வழக்கத்தை மாற்றி, நம் வேதங்களை அநுசரித்தே அநாத விதவைப் பெண்மக்களின் மறு மணத்தைச்செய்ய நமக்கருளிய 1856-ம் ௵த்திய 15-வது சட்டத்தை நாம் நாளது வரை திரஸ்காரம் செய்து நம் வீட்டு மக்களும், சகோதரிகளும். கதித்திருக்கக்கூடிய சுயராஜ்யம் கொடுக்க மறுக்கும் நாம் தானு நம்தேசத்திற்கு சுயராஜ்யம் கேட்கவும் பெறவும் தகுதியுள்ளவர்களாவோம்.

ஶ்லோ॥ [illegible]
[illegible]

யத்பாபம் பிரம்ஹ ஹத்யாயாம் த்விகுணம் கர்ப்பபாதனே
ப்ராயச்சித்தம் ந தஸ்யாஸ்தி தஸ்யாஸ்த்யாகோ விதீயதே

என்ற பராசர மகரிஷியின் வசனத்தின்படி பிரம்மஹத்தியைவிடக் கோர பாதகமானதும், பிராயச்சித்தமும் கிடையாத கர்ப்ப சிராவங்களுக்கும், சிசுஹத்தி முதலான பாவங்களையும்தடுக்க தர்மசாஸ்திரங்கள் சம்மதிக்கவில்லையென்றும், கருணாகரனுகிய ஈசுவரன் வேதங்களிலருளிய புநர் விவாகக் கட்டளைகளை பிரயோஜனமற்றதாய்ச்செய்கின்றனவென்றும் உங்களுக்குத்தோன்றினுல் அப்பேர்ப்பட்ட அக்கிரம,கொடிய, அதர்மசாஸ்திரங்களைத் தள்ளுபடி செய்து மறு சொல்லியவண்ணம் வெகுஜனோபகாரமாயிருக்கும் உங்கள் விதவைப் பெண் மக்களின் புநர் விவாகத்தை நீங்கள் நடத்திவைத்தும், நாடும் நகரமும் நன்குணரும்படி ஸ்திரீ புருஷ வித்தியாச ஆசா

ரத்தைத் தவிர்த்து ஸ்திரீகள் இன்புற்று வாழவும், மானிடரனைவரும் சமத்துவ உரிமையை யடைந்து களித்திருக்கும் வண்ணமும் பிரசாரஞ்செய்து அவர்கள் உங்களைப் பின் பற்றும்படிச் செய்து உங்கள் வசமாக்குவீராயில், இந்திய உலக உத்தாரணஞ்செய்த புண்ணியத்துக்குப் பாத்திரமாவீர்களென்று உலகமனைத்தும் உங்களைப் போற்றும். அவர்களும் உங்களுடன் ஒத்து வாழ்வார்கள், எல்லோரும் விரும்பும் ஸ்வராஜ்யமும் தானே வந்துவிடும்.

நிறைந்த கருணையுடையவரும் ஏழைகளின் பந்துவாகிய பகவான், நீங்கள் உபகார சிந்தையுடையவர்களாய் இருக்கும்படி அநுக்கிரகம் பண்ணுவாராக! பரமதயாளுவான சர்வேசுரன் உங்களிருதயத்தில் பிரவேசித்து அநாதைகளான விதவைமக்களின் குறைகளை நீங்கள் நோக்கி அவர்களின் துயரத்தையும் சிறைவாசத்தையும் போக்கி சீக்கிரத்திலவர்களைச் சுகவழி அடையச்செய்வதற்கு உங்களுக்குக் கருணையை உண்டாக்குவாராக

நிறைந்த கருணையும் ப்ரணவஸ்வரூபியாகிய தர்மவேத மூர்த்தியே, சகலகோடிகளுக்கெல்லாம் அருளிய உனது கட்டளைகளே, எனக்குச் சரணமாகக்கடவது. ஓம். சுபம்.

58673

மங்கல பிரஸ், திருச்சி.

N76
Y15E115 45: 3427

விதவா விவாக விளக்கம்

விஷயக் குறிப்பு.

1-22 .... மறுமணமில்லாததால் விதவை; மக்களின் துர்பாக்கிய நிலைமை.

22-73 .... விதவா விவாகம் சாஸ்திரோக்தமா?

73-77 .... தற்கால நிய ஆசாரத்துக்கு மூலக் காரணமென்ன?

77-78 .... வெகுகாலமாய் அனுஷ்டித்து வரும் இவ்வாசாரத்தை மாற்றிக்கொள்ளலாமா?

79-82 .... முடிவுரை.

இனிய புஸ்தகங்கள்.

"நீளாபுரி" உடையார் ஸ்தல மஹாத்மியத்தை ஆராய்ச்சியுடன் கூறுமோர் சிறு நூல். இஃது எல்லார் மனத்தும் பயன்படுமாறு எளிய நடையில் எழுதப் பெற்றுளது. விலை அணா 6.

"அத்திரி" காசிப ஸ்தல மாஹாத்மியக் கதையும், [illegible] விளக்கும் உரையுடன். விலை அணா 4

விலாசம்:—

S V. ஸௌந்தரராஜையங்கார்,

புஸ்தக ஆசிரியர்,

'சாந்தி நிலையம்' உறையூர், திருச்சி.